## கொள்கை விளக்கக் குறிப்பு 2017-18


| பொருளடக்கம் | | | |
|---|---|---|---|
| I | கொள்கை | | 1 |
| II | நிதி ஒதுக்கீடு | | 7 |
| III | கொள்கை மற்றும் திட்டங்கள் | | |
| | 1 | நலத்திட்டங்கள் | 9 |
| | 2 | தொடக்கக் கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி | 17 |
| | 3. | இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி | 60 |
| | 4 | மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 96 |
| | 5 | அரசுத் தேர்வுகள் | 106 |
| | 6 | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 124 |
| | 7 | பொது நூலகங்கள் | 138 |
| | 8 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 165 |
| | 9 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 194 |
| | 10 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 201 |

# பள்ளிக் கல்வித் துறை
# I. கொள்கை

தமிழகத்தின் கலை இலக்கிய தத்துவ வரலாற்றுப் போக்கில் ’கல்வி’ என்ற பதம் குறித்த தேடலை மேற்கொள்ளும் போது புலமை சார்ந்த பல்வேறு படைப்பாளர்களின் அடுக்கடுக்கான படைப்பு வெளிகளில் அது முகம் காட்டுவதை அறிய முடியும். இந்தப் பின்னனியில் தமிழகக் கல்வியின் பரிணாம வளர்ச்சி பதிவு செய்யத் தகுதியானதாகிறது. தமிழ்ச் சமூகத்தில் காலந்தோறும் கல்வியின் அவசியத்திற்கு அளித்த முக்கியத்துவம் மிகைப்படுத்திய ஒரு கூற்று அன்று. பண்டைய இலக்கியங்களிலும் தொல்லியல் சான்றுகளிலும் கல்வி குறித்து ஏராளமான மேற்கோள்கள் பொதிந்து கிடப்பது இந்த உண்மையை உணர்த்தும்.

சமுதாயத்தை சீரமைக்கும் உந்து சக்தியாக கல்வி மட்டுமே விளங்கும் என்பதை தங்கள் தொலைநோக்குப் பார்வையில் தமிழ்க் கவிஞர்கள் கண்டு மொழிந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில் கல்வி மிக உன்னத நிலையில் பார்க்கப்பட்டதையும், கற்றவர்கள் அனைவராலும் போற்றப்பட்டு உயர்ந்த நிலையில் இருந்ததையும் காண முடிந்தது. தமிழகத்தை ஆண்ட பல்வேறு மன்னர்கள் கல்வியை நிறுவனப்படுத்தவும், கற்றலைப் போற்றவும் செய்தனர். கல்வியின் மேன்மை மற்றும் பரவல் குறித்த கருத்துக்கள் மன்னர்களின் கட்டளைகளாக பதிவு பெற்றன.

*“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே ”*

*(புறநானூறு - 183)*

என்ற புகழ் பெற்ற புறநானூற்று பாடலில் *“ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ” என்னும்* சங்க காலப் படைப்பாளன் கற்றலின் உன்னதத்தையும் கற்றுணர்ந்தவரின் முக்கியத்துவத்தையும் பேசுவது அக்காலக்கட்டத்தில் கல்விக்கு அளிக்கப்பட்ட உயர் மதிப்பைக் காட்டுகிறது.

தத்துவக் கவிஞானி திருவள்ளுவர், கல்வி பற்றி பேசும்போது

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை.*

*(திருக்குறள் - 400)*

என்று பதிவு செய்கிறார்.

ஒரு சமுதாயம், நிறைந்த கல்வி கட்டமைப்பால் மட்டுமே நிலையானதாகவும், பாதுகாப்பானதாகவும், முன்னேறியதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும், நாகரிகம் அடைந்ததாகவும் திகழ முடியும் என்பதை பண்டைத் தமிழ்ச் சமுதாயம் அறிந்து வைத்திருந்தது.

இந்தியாவில் ஆங்கிலக் காலனி ஆதிக்கம் வந்த பிறகு, மேற்கத்தியக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கல்வி முறை, அமைப்பு ரீதியாக நிறுவப்பட்டு, முறைப்படுத்தப்

பட்டதுடன் சான்றளிக்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தகுதி நிர்ணயம் செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் கணிதப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றை உள்ளூர் மொழிகளில் கற்றுத் தருவதற்கும் கலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் ஏற்கனவே, கல்விக்கான சாதகமான சூழ்நிலை நிலவியதால் கல்வி நிறுவனங்களை உருவாக்குவது எளிதானது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, கல்வி முறையை மறுகட்டமைப்பு செய்வது அவசியமானது. கல்வித் துறையில் இந்திய சமூகம் விழித்துக் கொண்டு முன்னேற்றத்திற்கான பாதையில் செல்வதற்கு தமிழகம் தலைசிறந்த முன்னோடியாக விளங்கியது. தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களின் பெருமுயற்சியால் தமிழகத்தில் அனைவருக்குமான கல்விச் சேவைகளுக்கான உறுதியான அடித்தளம் அமைக்கப்பட்டது. தமிழகத்தின் உன்னதத் தலைவர்கள் கல்வியை இல்லந்தோறும் கொண்டு செல்ல உணர்வுப் பூர்வமாக எடுத்த பல முயற்சிகளால் பெரும் பயன்கள் விளைந்துள்ளன.

தற்கால அறிவுசார் மற்றும் தகவல் நுட்ப யுகம், கல்வி மேலாண்மையில் பல புதிய பார்வைகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தனிநபர் பொருளாதார முன்னேற்றத்திலும் கல்வியினுடைய தாக்கத்தை அனைவராலும் உணர முடிகிறது. மாறிவரும்

தேவைகளுக்கேற்ப புதிய கருத்துக்களையும், கருது கோள்களையும் கல்வியில் உள்வாங்கும் நிலைமையைத் தற்போது அரசின் கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்துள்ளனர்.

கல்வியின் இயல்பான அடுத்த நகர்வு குழந்தைகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும் என்பதை கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர். சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கு யாவருக்கும் தரமான கல்வி அளித்தல் என்பது கொள்கை வகுப்பாளர்களின் வலுவான நோக்கமாக அமைந்துள்ளது.

பெண் குழந்தைகளை முறையான கல்வி நீரோட்டத்தில் கொண்டு வந்தது அவர்களுக்கான அதிகாரப் பகிர்வினை பெருமளவில் அளித்துள்ளது. கல்வியால், கல்வி வளர்ச்சியால் சமுதாயத்தில் காணப்பட்ட சாதி, மத, பாலின, சமூக வேறுபாட்டு ஒடுக்கு முறைகள் படிப்படியாக உடைத்து எறியப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் நிலவும் பொருளதார ஏற்றத்தாழ்வுகளை கல்வி மேம்பாடு நீக்கி வருகிறது. கல்வி, நீண்ட காலமாக காணப்பட்ட அடிமை நிலைகளிலிருந்து மக்களை விடுவித்ததுடன் சமுதாயத்தில் சில குறிப்பிட்ட பகுதியினருக்கு எதிரான தீமைகளை முற்றிலும் நீக்கி உள்ளது. வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியால் மாணவர் சமுதாயம் சிறகடித்து பறந்து சாதனை புரிய வழிவகை செய்கிறது. இத்தகைய சூழலில் மாணவர்களின் திறமையை

வளர்ந்து வரும் தேவைக்கேற்ப ஒத்திசைக்க வேண்டியது அவசியமாகிறது. அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் உருவாகி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த வசதிகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் பெருமளவில் மேம்படுத்தப் பட்டுள்ளன. கல்வி வசதியின் பரவல் அனைவருக்கும் சென்றடைந்த நிலையில், தரமான கல்வியை அளிப்பது என்ற அணுகுமுறை அடிநாதமாகியுள்ளது. உயர்தரமான கல்வி அளிக்க வேண்டும் என்பதும் கல்விச் சேவையை மிக உன்னதமான வகையில் முழுமையாக அளிக்க வேண்டும் என்பதும் அரசின் முக்கியப் பணியாக மாறியுள்ளது. பள்ளிப் படிப்பு முடிந்த நிலையில் மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர உயர் கல்வி வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனை மையங்களை ஏற்படுத்தி அவர்களின் உள்ளார்ந்த திறன்களை மேம்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு காலகட்டங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக தேசிய மற்றும் உலக அளவில் தமிழகம் பல பாராட்டுகளைப் பெற்றுள்ளது. தமிழகத்தின் கல்வி கொள்கையை வகுப்பதில் பங்காளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து ஆலோசிக்கப் பட்டுள்ளனர். ஆக்கப்பூர்வமான கருத்துக்களும்

ஆலோசனைகளும் அரசின் புதிய முயற்சிகளுக்கு வலுவூட்டுவதாக அமையும்.

இந்தக் கொள்கை முன்னெடுப்புகள் அனைத்தும் தமிழகத்தின் பெருமைமிகு வரலாற்று அடித்தளத்தையும் தத்துவப் பரிமாணங்களையும் உள்வாங்கியுள்ளன. மாபெரும் தலைவர் புரட்சித் தலைவி டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்கள் வகுத்தளித்த தமிழ்நாடு *"தொலைநோக்கு* 2023"-இன் அடிப்படையில், கடந்த கால அனுபவங்களையும், நிகழ்கால சவால்களையும் கருத்தில் கொண்டு கல்வித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப தற்காலத்தில் மாற்றங்களை உருவாக்குவதற்கு அவை இணக்கமாக அமைகின்றன.

எதிர்நோக்கிய விழைவை தரும் என்ற நம்பிக்கையில் கல்வியின் பரிணாம வளர்ச்சியில் முன்னேற்றத்தை நோக்கிய ஒரு பெரும் உயரத்தை எட்டும் வகையில் 2017-18 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு படைக்கப்படுகிறது.

## II.நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2017-18 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 26,932.31 கோடியாகும்.

**2017-18 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்குத் தலைப்பு | | மாநிலச் செலவினங்கள் | வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் | மத்திய அரசு திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| *வருவாய் பகுதி* | | | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 341.41 | | | | 341.41 |
| 2059 | பொதுப் பணிகள் | | 3735 | | | | 3735 |
| 2202 | பொதுக் கல்வி | | | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1359534.33 | | | | 1359534.33 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1256148.92 | 0.01 | 38.08 | 5047.98 | 1261234.99 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 176.74 | | | 2733.8 | 2910.54 |
| | 5 | மொழி வளர்ச்சி | 1447.32 | | 2.52 | | 1449.84 |
| | மொத்தம் - பொதுக் கல்வி | | **2617307.31** | **0.01** | **40.6** | **7781.78** | **2625129.7** |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 175.35 | | | 498.52 | 673.87 |
| 2205 | கலையும், பண்பாடும் | | 8891.37 | | | 0.01 | 8891.38 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 18075.03 | | | | 18075.03 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | 244.71 | | | | 244.71 |
| 2251 | தலைமைச்செயல கம் - சமூகப் பணிகள் | 615.8 | | | | 615.8 |
| நிகர மொத்த வருவாய்ப் பகுதி | | **2649385.98** | **0.01** | **40.6** | **8280.31** | **2657706.9** |
| *மூலதனச் செலவு பகுதி* | | | | | | |
| 4202 | மூலதனச் செலவு | 35270.09 | | 0.01 | 0.01 | 35270.11 |
| மொத்த மூலதனப் பகுதி | | | | | | **35270.11** |
| *கடன்கள் பகுதி* | | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்-களுக்கான கடன்கள் | | | | 0.01 | 0.01 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | | | 0.01 | 0.01 |
| மொத்த கடன்கள் பகுதி | | | | | | **0.02** |
| **நிகர மொத்தம்** | | | | | | **2692977.03** |
| *கூட்டுக – திருப்பி வசூலிப்பவை* | | | | | | |
| | வருவாய் இனத்தின் கீழ் | | | | | 252.17 |
| | மூலதன இனத்தின் கீழ் | | | | | 2.09 |
| | திருப்பி வசூலிப்பவை மொத்தம் | | | | | **254.26** |
| **மானியக் கோரிக்கை எண்.43-இன் நிகர மொத்தம்** | | | | | | **2693231.29** |

## தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) மாநில புத்தாக்க நிதி

| வ. எண் | திட்டம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பள்ளிக் கல்வித் துறையில் வாசித்தல், எழுதுதல், பொருள் உணர்திறன்களுக்கான தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு பணித்தாள்கள் / வகுப்பு கட்டகங்கள் தயாரித்தல் | 48.06 |

# III. கொள்கை மற்றும் திட்டங்கள்
## 1. நலத்திட்டங்கள்

### 1. அறிமுகம்

தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் தங்கள் பள்ளிப்படிப்பை தடையின்றி நிறைவு செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு கீழ்க்காணும் முன்னோடி நலத்திட்டங்களை இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

### 1.1 மடிக்கணினி

2011-12 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 758 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2 சிறப்பு ஊக்கத் தொகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ /மாணவியர்கள் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 2011-12 ஆம் ஆண்டு முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.1500, 11 ஆம் வகுப்பு பயிலும்

மாணவர்களுக்கு ரூ.1500, 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.2000 என சிறப்பு ஊக்கத் தொகை தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு மேல்நிலைக் கல்வி முடிவடைந்தவுடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 314 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.3 நான்கு இணைச் சீருடைகள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவர்கள் அனைவருக்கும் 4 இணைச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 409 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.4 கம்பளிச் சட்டை**

மலைப் பகுதியில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2013-14 ஆம் கல்வி ஆண்டு முதல் விலையில்லா கம்பளிச் சட்டை வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.5 பாடப்புத்தகங்கள்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள்

வழங்கப்படுகிறது. 2012-13 முதல் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு மற்றும் முப்பருவமுறை அறிமுகப்படுத்தப் பட்டதையடுத்து, 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பருவம் I, பருவம் II, பருவம் III என முப்பருவ முறையிலும் மற்றும் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் முழு ஆண்டுக்குமான பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் ஒவ்வொரு கல்வி ஆண்டும் / பருவமும் பள்ளி தொடங்கும் முதல் நாளிலே வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டிலும் தொடர 219.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.6 குறிப்பேடுகள்**

1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2012-13 ஆம் கல்வி ஆண்டு முதல் குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டிலும் தொடர 107.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.7 கல்வி உபகரணப் பொருட்கள்**

*விலையில்லா புவியியல் வரைபடம்*

2012-13 ஆம் **கல்**வியாண்டு முதல் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா புவியியல் வரைபடம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 3.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*புத்தகப்பை*

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா புத்தகப்பை வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்த 110 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*கிரையான் மற்றம் வண்ணபென்சில்*

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் 1 மற்றும் 2 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா கிரையான்கள் மற்றும் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வண்ணபென்சில்கள் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 6.47 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*கணித உபகரணப்பெட்டிகள்*

அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2012-13 ஆம்

கல்வி ஆண்டு முதல் விலையில்லாக் கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வி ஆண்டில் தொடர 9.38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.8 காலணி**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 2012-13 ஆம் கல்வியாண்டு முதல் காலணி வழங்கப் படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டில் தொடர 104 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.9 மிதிவண்டிகள் வழங்குதல்**

ஆண்டுதோறும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் பிற்பட்டோர் நலத் துறை வாயிலாக பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் ஆதிதிராவிட நலத் துறை வாயிலாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை வாயிலாக பொதுப் பிரிவு மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டிலும் தொடர தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.10 புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் சத்துணவுத் திட்டம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டம் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.11 பேருந்து பயண அட்டை**

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தாங்கள் பயிலும் பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாக பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் போக்குவரத்து துறைமூலம் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.12 வருவாய் ஈட்டும் தாய்/ தந்தையை இழந்த மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதி உதவி**

மரணமடைந்த அல்லது விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்ததன் காரணமாக வருவாய் ஈட்டும் பெற்றோரை (தாய் / தந்தை) இழக்க நேரிடும் மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதியுதவித் திட்டமாகும். இவ்வாறான எதிர்பாராத சூழ்நிலையினால் குழந்தைகளின்

கல்வி எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதில் அரசு தீவிரமாக உள்ளது. அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூ.50,000 நிதி உதவியாக அளிக்கப்பட்டு வந்தது. 2014-15 ஆம் ஆண்டு முதல் இந்நிதியுதவித் தொகை ரூ.50,000 யிலிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகையானது மாணவர்களின் பெயரில் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.13 வேலை வாய்ப்பிற்கான பதிவு**

2011-12 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்து செல்லும் மாணவர்கள் தங்களின் சான்றிதழ்களை வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து அவர்களின் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பு பதிவு அட்டையையும் சேர்த்து பள்ளிகளிலேயே பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இப்பதிவு முறையினால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் சான்றிதழ்கள் 100 சதவீதம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவது உறுதி செய்யப்படுகின்றது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.14 சாதி, இருப்பிட மற்றும் வருமானச் சான்று வழங்குதல்

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் மூலமாக சார்ந்த வருவாய் வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியரிடமிருந்து சாதி, இருப்பிட மற்றும் வருமானச் சான்றுகள் பெற்று வழங்கப் படுகின்றன. 2013-14 ஆம் ஆண்டு முதல் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2015-16 ஆம் கல்வியாண்டு முதல் இணைய வழியில் விண்ணப்பம் பெறப்பட்டு இச்சான்றிதழ்கள் வழங்கப்படுவது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டம், 2017-18 ஆம் கல்வியாண்டிலும் தேவையான மாணவர்களுக்கு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.15 மழைக்கால ஆடை, உறைகாலணி மற்றும் காலுறை

மலைப்பிரதேசங்களில் வாழும் மாணாக்கர்கள் மழைக் காலங்களிலும் எவ்வித சிரமமுமின்றி பள்ளிக்கு வருகை புரிய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் மழைக்கால ஆடை, உறைகாலணி, மற்றும் காலுறைகள் வழங்கும் என இவ்வரசு அறிவித்திருந்தது. இத்திட்டம் 2017-18-இல் நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 2. தொடக்கக் கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கம்

"பள்ளியில் கற்றுக் கொண்டது முழுக்க மறந்து போனபின்
ஒருவருக்குள் எது எஞ்சியிருக்கிறதோ, அதுவே கல்வி"

- ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

### 2.1 முன்னுரை

குழந்தைகளின் உள்ளார்ந்த பல்வேறு திறமைகளை வெளிக்கொணர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது தொடக்கக் கல்வியின் முக்கிய குறிக்கோளாகும். குழந்தைகளின் செழுமையான மனதில் மிக உயர்ந்த கருத்துக்களையும், சிந்தனைகளையும் விதைக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு இளம் வயதில் வழங்கப்படும் கல்வியானது எதிர்கால வாழ்க்கைக்கானத் திட்டத்தை வகுப்பதாக அமையும். எனவே, மேற்கண்ட காரணிகளை மனதிற்கொண்டு அவர்களுக்குத் தரமான கல்வி அளிப்பதற்கான உரிய திட்டங்களை வகுக்கப்படவேண்டும்.

### அனைவருக்கும் கல்வி இயக்கம் - தொலைநோக்கு

- அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், இடைநிற்றலின்றி உயர் தொடக்கக் கல்வியை நிறைவு செய்தல்
- அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளித்தல்
- சமூக, பாலின இடைவெளியை முற்றிலும் நீக்குதல்

- பள்ளி செல்லாக் குழந்தைகள் - குறிப்பாக இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், தெருவோர சிறார் மற்றும் இடைநின்ற குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்த்தல்.

## 2.2 செயல்திறன்

கடந்த 6 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இடைவிடா முயற்சிகளால் கீழ்க்காணும் இலக்குகள் எட்டப்பட்டுள்ளன.

- தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஏறத்தாழ 100 விழுக்காடு அளவிற்கு தகுதியுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- மாணவர் சேர்க்கையில் தொடக்கப் பள்ளிகளில் 99.85 விழுக்காடும் நடுநிலைப் பள்ளிகளில் 99.20 விழுக்காடும் எட்டப்பட்டுள்ளது.
- 2002ஆம் ஆண்டில் 5.74 இலட்சமாக இருந்த இடைநின்ற மாணவர்களின் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டில் 41,034 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பள்ளிகளிலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- மாணவர்களின் கற்றல் அடைவு நிலை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

அடிப்படை அளவீடுகளில் இலக்குகள் எட்டப்பட்டுள்ள நிலையில், கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் பொருட்டு, தரமான கற்றல் துணைக்கருவிகள் வழங்குதல், வகுப்பறை நிகழ்வுகளை வலுப்படுத்துதல், மனித வளத்தை உறுதி செய்தல், தேவையான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குதல், பாடத் திட்டங்களை தேவைக்கேற்ப மாற்றி அமைத்தல் என பல நிலைகளில் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.


**2.3 பள்ளி வசதி**

தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-இல் குடியிருப்பிலிருந்து 1 கி.மீ. தொலைவிற்குள் தொடக்கப் பள்ளிகள் நிறுவிடவும் 3 கி.மீ தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளிகள் நிறுவிடவும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் ஓர் அறிவியல் பூர்வமான புவியியல் தகவல் வரைபட முறைமை (GIS) உருவாக்கப்பட்டுள்ளது.

**2.3.1 புவியியல் தகவல் வரைபட முறைமை**

2012-13ஆம் ஆண்டு முதல் புவியியல் தகவல் முறைமை பராமரிக்கப்பட்டு வருகிறது. நிர்வாகம் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கு ஏதுவாக இணைய வழியில் பயன்படுத்தும் வண்ணம் இவ்வரைபட முறைமை உருவாக்கப் பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து 57,583 பள்ளிகளையும், 92,234 குடியிருப்புகளையும் உள்ளடக்கிப் புவியியல் தகவல் வரைபட முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் 89,950 குடியிருப்புகளுக்கு அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளும், 91,040 குடியிருப்புகளுக்கு அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளுக்குப் போக்குவரத்து, பாதுகாவலர் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளி போன்ற வசதிகளை வழங்குவதன் மூலமாகப் பள்ளி வசதிகள் உறுதி செய்யப் பட்டுள்ளன.




புவியியல் தகவல் வரைபடம்

**2.3.2 புதிய பள்ளிகள் தொடங்குதல்**

தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குட்பட்டு புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. கடந்த 6 ஆண்டுகளில் 227 தொடக்கப்

பள்ளிகளும் 116 நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளன.

### 2.3.3 போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகள்

அடர்ந்த வனப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் குழந்தைகளுக்காகப் போக்குவரத்து வசதியும் பாதுகாவலர் வசதியும் 2012-13ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விவரம் பின்வருமாறு :

**போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகள்**

| ஆண்டு | குடியிருப்பு-களின் எண்ணிக்கை | குழந்தை-களின் எண்ணிக்கை | பட்டியல் இனத்தவர் / பழங் குடியினர் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 2012-13 | 360 | 4857 | 3070 | 1.46 |
| 2013-14 | 1133 | 15485 | 8296 | 4.65 |
| 2014-15 | 1287 | 14749 | 8427 | 4.42 |
| 2015-16 | 990 | 10924 | 6487 | 3.29 |
| 2016-17 | 834 | 12796 | 7163 | 3.88 |
| **மொத்தம்** | **4604** | **58811** | **33443** | **17.70** |

### 2.3.4 உண்டு, உறைவிடப் பள்ளிகள்

மக்கள் தொகை மிகவும் குறைவான பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், மலை மற்றும் வனப்பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், நகர்ப்புறங்களில் உள்ள வாய்ப்பு

மறுக்கப்பட்ட குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள் மற்றும் பெரியோர் பாதுகாப்பில்லாமல் வாழும் குழந்தைகள் ஆகியோர் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதி செய்வதற்காக உண்டு உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. தற்பொழுது கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 8 உண்டு உறைவிடப் பள்ளிகள், 645 குழந்தைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் ரூ.1.22 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 மாணவர் சேர்க்கை

### 2.4.1 முக்கிய கல்விக் குறியீடுகள்

கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளால் கீழ்க்காணும் கல்விக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

### 2.4.2 நிகர சேர்க்கை விகிதம்

தொடக்க நிலை வகுப்புகளில் 2001 இல் 93 விழுக்காடாக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2016 இல் 99.85 விழுக்காடாகவும், உயர் தொடக்க நிலை வகுப்புகளில் இதே காலக்கட்டத்தில் 90 விழுக்காடாக இருந்த நிகர சேர்க்கை விகிதம், 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

### 2.4.3 மொத்த சேர்க்கை விகிதம்

மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தைக் கீழ்க்காணும் அட்டவணை மூலம் காணலாம். இவ்விகிதம்

ஒவ்வோர் ஆண்டும் 100 விழுக்காட்டிற்கு அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

மொத்த சேர்க்கை விகிதம்

| ஆண்டு | மாணவர்களின் சேர்க்கை (வகுப்பு 1 முதல் 8 வரை) | பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் |
|---|---|---|---|
| 2011-12 | 9776252 | 9266980 | 105.50 |
| 2012-13 | 9678564 | 9116715 | 106.16 |
| 2013-14 | 9396441 | 8983715 | 104.59 |
| 2014-15 | 9252467 | 8746272 | 105.79 |
| 2015-16 | 9236192 | 8685761 | 106.33 |
| 2016-17 | 9108892 | 8563699 | 106.37 |

### 2.4.4 இடைநிற்றல் விகிதம்

தொடக்க நிலை வகுப்புகளில் 2001ஆம் ஆண்டில் 12 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம், 2016ஆம் ஆண்டில் 0.90 விழுக்காடாகவும், உயர் தொடக்க வகுப்புகளில் இதே காலக் கட்டத்தில் 13 விழுக்காடாக இருந்த இடை நிற்றல் விகிதம் 1.50 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

### 2.4.5 நிறைவு விகிதம்

தொடக்க நிலை வகுப்புகளில் 2001 ஆம் ஆண்டில் 64 விழுக்காடாக இருந்த நிறைவு விகிதம், 2016 ஆம் ஆண்டில் 98.30 விழுக்காடாகவும், உயர் தொடக்க வகுப்புகளில் இதே கால கட்டத்தில் 68 விழுக்காடாக இருந்த நிறைவு விகிதம் 96.70 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது.

### 2.4.6. மாணவர் சேர்க்கையில் பாலின விகிதம்

2016-2017 கல்வியாண்டில் தொடக்கநிலை வகுப்புகளில் மொத்த மாணவர் சேர்க்கையில் 51.45 விழுக்காடு மாணவர்களும், 48.55 விழுக்காடு மாணவிகளும், உயர் தொடக்க வகுப்புகளில் 51.21 விழுக்காடு மாணவர்களும், 48.79 விழுக்காடு மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள்.

## 2.5. இடை நிற்றல்

### 2.5.1. பள்ளி செல்லா/ இடை நின்ற குழந்தைகளைக் கண்டறிதல் மற்றும் பள்ளியில் சேர்த்தல்

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல்/மே மாதங்களிலும், அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களிலும் பள்ளி செல்லாக் குழந்தைகளின் கணக்கெடுப்பு நடத்தப்படுகின்றது. கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட குழந்தைகள் உடனடியாக வயதுக்கேற்ற வகுப்புகளில் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இக்குழந்தைகளுக்கு தேவையின் அடிப்படையில் உண்டு உறைவிட மற்றும் பயிற்சி மையங்களில் மூன்று மாதம் முதல் இரண்டு ஆண்டுகள் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறப்புப் பயிற்சி முடித்த பிறகு, முறையான பள்ளிகள், கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள், மாணவியர் விடுதிகள் மற்றும் அரசு விடுதிகளில் மீள சேர்க்கப்படுகின்றனர்.

### 2.5.2. தக்க வைத்தல்

சேர்க்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் பள்ளிகளில் தொடர்ந்து தக்கவைக்க தீவிர முயற்சிகள்

எடுக்கப்பட்டாலும் பல்வேறு காரணங்களால் குழந்தைகள் சிலர் பள்ளியிலிருந்து இடைநின்று விடுகிறார்கள். இவர்களுக்காக உண்டு உறைவிட மற்றும் பயிற்சி மையங்கள், கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் மூலமாகப் போதிய பயிற்சி அளித்து முறையான பள்ளிகளில் நேரடிச் சேர்க்கை மூலமாகத் தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து முடிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களைத் தக்கவைத்தல் விகிதம் தற்பொழுது குறிப்பிடத்தகுந்த அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இவ்விகிதம் கடந்த ஆண்டில் தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் முறையே 99.10 விழுக்காடு மற்றும் 98.50 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

### 2.5.3. இடைநிற்றலைக் குறைத்தல்

கடந்த 6 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சிறப்புச் செயல்பாடுகள் காரணமாக இடைநின்ற குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இடைநின்ற குழந்தைகளைக் அளவிடுவதற்காக 2014-15 ஆம் ஆண்டில் நடத்திய “தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி”, தமிழ்நாட்டில் இடைநின்ற குழந்தைகளின் அளவு 0.66 விழுக்காடு என கணக்கிடப்பட்டுள்ளது. இது கர்நாடகா (1.49%), ஆந்திரா பிரதேசம் (0.91%), கேரளா (0.82%) மற்றும் அகில இந்திய சராசரியை விட (2.97%) மிகக் குறைவாகும்.

### 2.5.4 சிறப்பு நிகழ்வுகள்

நாகப்பட்டினம் மாவட்டம் பல்லவராயன் பேட்டையில் 2005–06 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் உண்டு உறைவிடப் பள்ளியில் அளிக்கப்பட்ட சிறப்புப் பயிற்சி, நரிக்குறவச் சமூகத்தைச் சார்ந்த 119 குழந்தைகள் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து பெறக் காரணமாக இருந்துள்ளது. இவர்களுள் 7 மாணவிகள் தற்பொழுது மயிலாடுதுறை அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை பயின்று வருகின்றனர்.




நரிக்குறவ சமுதாயத்தை சேர்ந்த கல்லூரி மாணவிகள்

### 2.5.5 இடம்பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி

ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கத்திலிருந்து இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் தொடர் கல்வி பயில்வதை ஊக்குவிக்க அவர்தம் தாய்மொழியில்



இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள்

பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தொழிலாளர்கள் அவர்தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பும்போது குழந்தைகள் எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து கல்வி பயில்வதற்கு ஏற்றவாறு இரு மொழியிலான மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள்

| ஆண்டு | கண்டறியப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | சேர்க்கை எண்ணிக்கை | செலவினம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2013-14 | 9293 | 9186 | 2.00 |
| 2014-15 | 5939 | 5755 | 1.34 |
| 2015-16 | 5089 | 4933 | 1.04 |
| 2016-17 | 5059 | 5028 | 1.40 |

**2.5.6 பாடநூல் வழங்குதல்**

பாடப்புத்தகங்களை அந்தந்த மாநிலங்களிலிருந்து பெற்று அவர்தம் தாய்மொழியிலேயே கல்வி பயில ஏதுவாக இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



ஓரியா பாடப்புத்தகங்கள்



தெலுங்கு பாடப்புத்தகங்கள்



வங்காள பாடப்புத்தகங்கள்

இடம்பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட பிற மொழிப் பாடப் புத்தகங்களின் விவரம் பின்வருமாறு:

**பிற மொழிப் பாடப்புத்தகங்கள்**

| ஆண்டு | ஒரியா | இந்தி | வங்காளம் | தெலுங்கு |
|---|---|---|---|---|
| 2014-15 | 3391 | 1385 | 589 | 185 |
| 2015-16 | 2802 | 594 | 865 | 226 |
| 2016-17 | 2655 | 1227 | 830 | 226 |

### 2.5.7 பெண் கல்விக்கான சிறப்பு முயற்சிகள்

#### கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள்

கிராமப்புறப் பெண்கள் எழுத்தறிவு தேசிய சராசரியான 46.13 விழுக்காட்டை விடக் குறைவாக உள்ள வட்டாரங்களில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யா லயா உண்டு உறைவிடப் பள்ளி 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 10 - 14 வயது பெண் குழந்தைகளுக்குக் கல்வியை வழுங்கி, பாலின வேறுபாட்டைக் குறைப்பது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 வட்டாரங்களில், 61 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டுவருகின்றன. இத்திட்டத்திற்காக ரூ. 24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பள்ளிகளில் கல்விச் செயல்பாடுகளுடன் தையல், பூவேலைப்பாடு, மண்புழு உரம் தயாரித்தல், கணினிக் கல்வி, விளையாட்டு, யோகா மற்றும் கராத்தே போன்ற இணைச் செயல்பாடுகளும் கற்றுத் தரப்படுகின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் மாதமொன்றுக்கு ரூ.100/- ஊக்கத் தொகையாக அவர்தம் வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

மாணவிகள் இப்பள்ளியில் தங்கியிருக்கும் காலத்திற்குக் காப்பீடும் செய்யப்படுகிறது.

இப்பள்ளிகளில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவிகள் தேசிய படிப்புதவித் தொகைக்கான தேர்வு எழுத பயிற்றுவிக்கப் படுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் 68 மாணவிகள் இத்தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். எட்டாம் வகுப்பு முடித்த மாணவிகள் ஒன்பதாம் வகுப்பில் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுவதுடன் அவர்களுக்கு விடுதி வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படுகிறது. 2015-16 ஆம் கல்வியாண்டில் 1536 மாணவிகள் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.10.65 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள மாணவிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவிகள்

| ஆண்டு | மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2011-12 | 4471 |
| 2012-13 | 4461 |
| 2013-14 | 4507 |
| 2014-15 | 4633 |
| 2015-16 | 4614 |
| 2016-17 | 4534 |

## 2.6 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள்

### 2.6.1 உள்ளடங்கிய கல்வி

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு கல்வியுடன் உதவி உபகரணங்கள் வழங்கி, தொடர்ந்து கல்வி கற்க வழிவகை செய்யப்படுகிறது. 1,36,134 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளில், 1,27,864 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 8,270 குழந்தைகள் வீட்டுவழிக் கல்வி மூலமாகப் பயின்று வருகின்றனர். இவர்களுக்காக ரூ. 8.88 இலட்சம் மதிப்பில் தேவையான உதவி உபகரணங்கள் 2016-17 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. இதன் விவரம் பின்வருமாறு:

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள வசதிகள்

| வ. எண் | குழந்தைகளின் எண்ணிக்கை | வசதிகள் |
|---|---|---|
| 1. | 11664 | கற்றல் உபரகணப் பெட்டி |
| 2. | 14452 | பாதுகாவலர் |
| 3. | 14745 | போக்குவரத்து |
| 4. | 293 | பிரெய்லி புத்தகங்கள் |




பிரெய்லி புத்தகங்கள்



கற்றல் அட்டைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆண்டுவாரியாகப் பயின்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:




**2.6.2 பாடப்பொருள் தகவமைத்தல்**

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு ஏற்ற நெகிழ்வான பாடத்திட்டத்தினை வழங்கும் வகையில் பாடப்பொருள் தகவமைத்தல் சார்ந்த பயிற்சி 20,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், 10,002 நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.



இயன்முறை பயிற்சி



ALIMCO அளவீட்டு முகாம்

### 2.6.3 பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி

2016 -17ஆம் ஆண்டில் சுகாதாரத் துறையுடன் இணைந்து மூளைக்காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி 41,300 பெற்றோர்கள் பயனடையும் வகையில் அனைத்து வட்டாரங்களிலும் வழங்கப்பட்டுள்ளது.

### 2.6.4 உள்ளடங்கிய கல்விக்கான மாநில ஆதார வளமையம்

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் சென்னையில் மாநில ஆதார வளமையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெவ்வேறு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உதவி உபகரணங்களுடன் கூடிய மையமாக இது திகழ்கிறது. பேச்சுத் திறன், கேட்டல் மற்றும் பார்வைக் குறைபாடு, மதியிறுக்கம் மற்றும் மூளை முடக்குவாத குழந்தைகள் எனப் பலதரப்பட்ட சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளுக்கு இம்மையத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும் இக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ள எண்ணற்ற இக்குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் ஊடாடும் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளனர்.



யோகா பயிற்சி



மாநில ஆதார வளமையம்

### 2.6.5 ஆரம்ப நிலை செயல்பாடுகள்

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை செயல்பாடுகள், அவர்களின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் அவர்தம் பெற்றோர்களுக்கும் உறுதுணையாக அமைகிறது. மேலும் உதவித் தொழில்நுட்ப உபகரணங்கள், கேட்கும் திறன், குடும்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல், மருத்துவ சேவை, செவிலியர் சேவை, ஊட்டச்சத்து, தொழிற்பயிற்சி, இயன்முறை பயிற்சி, மனநலப் பயிற்சி, பார்வை சிகிச்சை மற்றும் இதர சேவைகளும் வழங்கப்படுகின்றன.

மாநில ஆதார வள மையத்தில் முன்னோட்டப் பயிற்சியாகத் தொடங்கப்பட்ட ஆரம்ப நிலை செயல்பாடுகள் மூலம் குழந்தைகள் நல்ல முன்னேற்றம் அடைந்ததால், தமிழகம் முழுவதும் 85 ஆரம்ப நிலை ஆயத்தப் பயிற்சி மையங்கள் ரூ. 5.78 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.



பெற்றோர்களுக்கு வழிகாட்டல்




மதிப்பீடு செய்தல்

## 2.7 தர மேம்பாடு

கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தல், பாடநூல்களுக்குப் பொருத்தமான கற்றல் உபகரணங்களை வழங்குதல், ஆசிரியர்களுக்குத் திறன் வளர் பயிற்சி வழங்குதல் மற்றும் அவர்களின் தனித்திறன்களை மேம்படுத்துதல் என பல்வேறு விதமான செயல்பாடுகளின் மூலம் தொடக்கக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தர மேம்பாட்டு வழிமுறைகள்




### 2.7.1 எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக்கற்றல்

செயல்வழிக்கற்றல் என்பது குழந்தை மையக் கல்வியாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் கருத்துகளை உள்வாங்கும் வேகம் மாறுபடும். குழந்தைகள் அவரவர் கற்கும் வேகத்திற்குத் தகுந்தவாறு அடிப்படைக் கருத்துகளைக் கற்க வாய்ப்பளிக்கிறது. வகுப்பறையில் வெவ்வேறு வயதுடைய சக குழந்தைகளுடன் பழகுவதனால், சமூகத் திறன் வளர்கிறது. இந்நிலை மாணவர்களின் குழுக் கற்றல், பரிமாற்றம் மற்றும் சுய கற்றலுக்கு அதிக அளவில் வாய்ப்பளிக்கின்றது.

2012 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட முப்பருவக் கல்வி முறைக்கு ஏற்ப, செயல் வழிக் கற்றல் அட்டைகள் எளிமைப்படுத்தப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டன. மாணவர்களின் உள்ளார்ந்த கருத்துகளை வெளிக்கொணர செயல்வழிக் கற்றல் முறை வாய்ப்பளிக்கிறது. மாணவர்களின் ஈடுபாடு, புரிதல் திறன், சுய கற்றல், கருத்துப் பரிமாற்றம் போன்ற செயல் திறன்களை வளர்க்க, செயல்வழிக் கற்றலில் வாய்ப்புள்ளது. இம்முறையை நன்கு செயல்படுத்திட திறன் வளர் பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது வழி கல்விக்கான செயல்வழிக் கற்றல் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பிற மொழிகளில் பயிலும் மாணவர்களின் திறன் மேம்பட்டுள்ளது என்பதை அடைவு ஆய்வுகள் மூலம் அறியமுடிகிறது.

### 2.7.2 செயல்திட்ட வழிக் கற்றல்

அன்றாட வாழ்வில் எழும் சிக்கல்களை கண்டறிந்து அவற்றைக் களையவும், தீர்வு காணும் அணுகுமுறையைப் பெறவும், அதனை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவும் செயல்திட்ட வழிக் கற்றல் உதவுகிறது. இப்படைப்புகள் “புத்தாக்கத்திற்கான வடிவமைப்பு” எனும் உலகளாவிய அமைப்பால் நடத்தப்படும் தேசிய அளவிலான போட்டிக்கு இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

### 2.7.3 முப்பருவக் கல்வி

முப்பருவக்கல்வி முறை 1 முதல் 8 வகுப்பு வரை 2012-13 ஆம் கல்வியாண்டிலும், 9ஆம் வகுப்பிற்கு 2013-14ஆம் கல்வியாண்டிலும் நடைமுறைபடுத்தப்பட்டதன் விளைவாக மாணவர்களின் கற்றல் அடைவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை மாநில அளவிலான ஆய்வுகள் உறுதி படுத்துகின்றன. மேலும், இது மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைத்தது மட்டுமின்றி, கற்றலில் கூடுதல் கவனம் செலுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.7.4 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தேசிய கலைத்திட்ட வரைவு 2005-இன் பரிந்துரையின் அடிப்படையில், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வகுப்புகளுக்கு 2012-13 ஆம் ஆண்டிலும், 9 ஆம் வகுப்பிற்கு 2013-14 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்மதிப்பீட்டுமுறை, கற்றலை மனனத்தின் திசையிலிருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைக்கிறது.

இம்முறை, கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளின் பரிமாணங்களை மதிப்பீடு செய்கிறது. மேலும், குழந்தையின் தனிப்பட்ட மதிப்பீட்டுத் தேவைக்கேற்ப நெகிழ்வான முறையாக அமைந்துள்ளது.

### 2.7.5 புத்தகப் பூங்கொத்து

குழந்தைகளின் வாசிப்புத் திறனை மேம்படுத்த, பள்ளி வேலை நேரங்களில் புத்தகப் பூங்கொத்து முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் எளிதில் எடுத்து பயன்படுத்தும் வகையில் வைக்கப்பட்டுள்ள இப்புத்தகங்கள் வாசிப்புத் திறன், சொல் வளம், பொது அறிவு, உயர்நிலை சிந்தனைத் திறன், கற்பனை மற்றும் படைப்பாற்றல் திறன்களை மேம்படுத்துகிறது.

இம்முறை குழந்தைகளின் சுய வாசித்தலை ஊக்கப் படுத்துகிறது. இப்புத்தகப் பூங்கொத்தில், கதைகள், விவசாயம், சாலைப்பாதுகாப்பு, பாரம்பரிய விளையாட்டுகள், ஒழுக்க நெறிகள், படைப்பாற்றல், இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் சமூக நெறி போன்ற புத்தகங்கள் உள்ளன.


வாசிப்பு நேரம்



புத்தகப் பூங்கொத்து

### 2.7.6 கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

மாணவர்கள் எளிதாக கற்பதற்கு கீழ்க்கண்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தபடுகிறது.

- கணித உபகரணப் பெட்டி
- அறிவியல் உபகரணப் பெட்டி
- அசைப்படக் குறுந்தகடுகள்
- நடமாடும் அறிவியல் ஆய்வகம்

### 2.7.7 தற்காப்புக் கலை பயிற்சி

நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 30,000 பெண் குழந்தைகளுக்கு 2016-17 ஆம் ஆண்டில் தற்காப்புக் கலையாக (கராத்தே) கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 2.7.8 ஆங்கில மொழி கற்றலுக்கான சிறப்பு முயற்சிகள்

குழந்தைகள் எளிதாக ஆங்கிலத்தில் பேச, கேட்க, கலந்துரையாட, உச்சரிப்பை அடிப்படையாகக் கொண்ட 43 குறுந்தகடுகள் உருவாக்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. இதன்மூலம் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

### 2.7.9 ஆங்கிலவழிக் கல்வி

2012 – 13 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது 4,84,498 குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழியில் பயின்று வருகின்றார்கள். ஆங்கில வழிக் கற்பித்தலுக்கான பயிற்சி, ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 2.7.10 காலமுறை மதிப்பீடு

மாணவர்களின் வாசித்தல், எழுதுதல் திறன் மற்றும் அடிப்படை கணித அறிவு போன்றவற்றை அறிய குறிப்பிட்ட கால இடைவெளியில் அடைவுத் தேர்வுகள் நடத்தப் படுகின்றன.

இந்த ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் ஜுலை / ஆகஸ்டு மற்றும் பிப்ரவரி / மார்ச் மாதங்களில் நடத்தப்படுகின்றது. மேலும், இது ஆசிரியர்கள் குறைதீர் கற்பித்தலை மேற்கொண்டு, மாணவர்களின் அடைவுநிலையை மேம்படுத்த உதவுகிறது.

### 2.7.11 மாநில அடைவுத் திறனாய்வு

மாணவர்களின் கற்றல் அடைவு நிலையை அளவீடு செய்வதற்கு மாநில அளவிலான திறன் அடைவு மதிப்பீடு, தெரிவு செய்யப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திறன்களில் நடத்தப்படுகிறது.

- சரளமாக வாசித்தல்.
- கேட்ட தகவல்களை நினைவில் கொள்ளல்.
- இலக்கணம்
- மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துகளை எடுத்துரைத்தல்.
- எழுத்துகளை உச்சரித்தல்.
- கணித அடிப்படைத் திறன்கள்.
- அறிவியல் சார்ந்த அறிவு மற்றும் செயல்திறன்கள்.

### ஆய்வின் வெளிப்பாடு

2013 முதல் 2015 வரை நடத்தப்பட்ட மாநில அடைவுத் திறனாய்வு முடிவுகளின் படி 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் மாணவர்கள் பெற்ற சராசரி மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

பெற்றுள்ள விவரம் கீழ்க்கண்ட அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

**வகுப்பு – 3**

| ஆண்டு | பாடங்கள் | | |
|---|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் |
| 2013 | 84 | 72 | 77 |
| 2014 | 90 | 83 | 88 |
| 2015 | 95 | 93 | 95 |

**வகுப்பு – 5**

| ஆண்டு | பாடங்கள் | | |
|---|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் |
| 2013 | 64 | 67 | 69 |
| 2014 | 83 | 75 | 75 |
| 2015 | 94 | 89 | 92 |

**வகுப்பு – 8**

| ஆண்டு | பாடங்கள் | | |
|---|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் |
| 2013 | 72 | 43 | 40 |
| 2014 | 77 | 67 | 66 |
| 2015 | 89 | 82 | 84 |

### 2.7.12 ஆசிரியர் செயல்திறன்

ஆசிரியர்களின் சுயமதிப்பீட்டிற்காக கீழ்க்காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன

- குழந்தைகளுக்கான கற்றல் அனுபவங்களை வடிவமைத்தல்.
- பாடப்பகுதியினைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அதனைப் பற்றிய அறிவு.

- கற்றல் மேம்பாட்டு உத்திகள்.
- மாணவர் - ஆசிரியருக்கிடையேயான உறவு.
- ஆசிரியப் பணித் திறன் முன்னேற்றம்.
- பள்ளி வளர்ச்சி.
- ஆசிரியர் வருகை.
- சுத்தம் மற்றும் சுகாதாரம்.

ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நிகழ்வுகளில் மேற் கொள்ள வேண்டிய செயல்திட்டங்களை மேம்படுத்திக் கொள்ளவும், வகுப்பறை நிர்வாகத்தை வளப்படுத்தவும் இந்த சுயமதிப்பீடு, ஆசிரியர்கள் தங்கள் இலக்கினை அடைய உதவுகிறது.

### 2.7.13 பள்ளித் தரமதிப்பீட்டுத் திட்டம்

இத்திட்டம் பள்ளியை மதிப்பீடு செய்வதற்கான ஒரு விரிவான செயற்கருவியாகும். ஒவ்வொரு பள்ளியின் முக்கியச் செயல்திறன் பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்தவும், அப்பள்ளியிலுள்ள குறைகளைக் களையவும், புதிய உத்திகளைக் கையாண்டு நிவர்த்தி செய்யவும் இக்கட்டமைப்பு உதவுகிறது.

### 2.7.14 ஆசிரியர் பணியிடைப் பயிற்சி

ஆசிரியர் பணியிடைப் பயிற்சி, தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு குறு வளமையம் மற்றும் வட்டார வளமைய அளவில் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. மாநில ஆசிரியர் கல்வியியல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

நிறுவனத்துடன் இணைந்து அனைவருக்கும் கல்வி இயக்கத்தால் கட்டகங்கள் தயாரிக்கப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**(அ) கற்றல் கற்பித்தல் முறைகள்**

கற்பித்தலில் புதுமை முறைகளான செயல்வழிக் கற்றல், படைப்பாற்றல் கல்வி போன்ற அணுகு முறைகள் குறித்தான பயிற்சிகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**(ஆ) பாடப்பொருள்**

தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் கேட்டல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் போன்ற திறன்களை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வகுப்பறையில் அறிவியல் மற்றும் கணித பாடங்களை திறம்பட கற்பிப்பதற்கு பல்லூடகத்தை பயன்படுத்தி பயிற்சி வழங்கப்படுகிறது.

**(இ) பள்ளி சுகாதாரம் மற்றும் குழந்தை உளவியல்**

2017-18 ஆம் கல்வியாண்டில் நமது பண்பாடு, பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வு, பள்ளி சுகாதாரம், உடல் நலம் பேணுதல், மன அழுத்த மேலாண்மை மற்றும் நன்னெறிக் கல்வி போன்ற பயிற்சிகள் அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட உள்ளன.

**(ஈ) தலைமை ஆசிரியர்களுக்கான பயிற்சி**

2017-18 ஆம் கல்வியாண்டில், ‘தலைமைப்பண்பு வளர்த்தல்’ பயிற்சியானது புதுதில்லி, தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படும். உயர் தொடக்க வகுப்புத் தலைமை ஆசிரியர்கள் 6950 பேர் இப்பயிற்சியினால் பயன் பெறுவர்.

**(உ) ஆசிரியர் பயிற்றுநர்களின் திறன் மேம்பாடு**

குறுவள மையங்களில் பணியாற்றும் அனைத்து ஆசிரியப் பயிற்றுநர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

**2.7.15 ஆசிரியர் நியமனம்**

தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். எனவே ஆசிரியர்களைத் தகுதித் தேர்வின் மூலமாக தெரிவு செய்யும் முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**2.7.16 பகுதிநேரப் பயிற்றுநர்கள்**


குழந்தைகளின் பன்முகத் திறன்களை வளர்க்கும் விதமாக 6,7,8 வகுப்புகளில் இசை, ஓவியம், கலை, விளையாட்டு மற்றும் கணினி ஆகிய புலங்களில் பகுதி நேர பயிற்றுநர்கள் மூலமாக குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**2.7.17 ஆசிரியர் - மாணவர் விகிதம்**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 தொடக்க நிலை வகுப்புகளில் 1:30


என்ற ஆசிரியர் மாணவர் விகிதத்தையும், உயர் தொடக்க வகுப்புகளில் 1:35 என்ற ஆசிரியர் மாணவர் விகிதத்தையும் வலியுறுத்துகிறது. தரமான கற்றல் கற்பித்தலை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது தலையாய முன்னுரிமையாக கருதப்படுவதால், சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ள விகிதத்தைவிட சிறப்பாக, தொடக்கநிலை வகுப்புகளில் 1:24.93 எனவும், உயர் தொடக்க வகுப்புகளில் 1:25.21 எனவும் ஆசிரியர் மாணவர் விகிதம் அமைந்துள்ளது. பல்வேறு ஆண்டுகளுக்கான ஆசிரியர் மாணவர் விகிதம் கீழே தரப்பட்டுள்ளது.

**ஆசிரியர் – மாணவர் விகிதம் – தொடக்க நிலை**




***ஆதாரம்:*** *U-DISE*

ஆசிரியர் – மாணவர் விகிதம் – நடுநிலை நிலை பள்ளிகள்




*ஆதாரம்: U-DISE*

### 2.7.18 பள்ளிகளில் தகவல் தொழில் நுட்பம்



கணினி பயிற்சி

**கணினி வழிக் கற்றல்**

மாணவர்கள் தற்போதைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் சிறப்பான கணினி அறிவைப் பெறும் வகையில் பள்ளிகளில் கணினி வழிக் கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கணினி வழிக்கல்வியை அளிக்கும் விதமாக 9982 அரசுப் பள்ளிகளில் 26,366 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.7.19. ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சி

மாணவர்களுக்குக் கணினிவழிக் கல்வி வழங்குவதற்காகக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. மைக்ரோசாப்ட், தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இன்டெல் போன்ற தனியார் நிறுவனங்களுடன் இணைந்து, இதுவரை 1,16,127 ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சி

### 2.7.20. அறிவியல் கண்காட்சி

மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தவும், திறன்வாய்ந்த மாணவர்களை அடையாளம் காணவும், அன்றாட வாழ்க்கை அனுபவங்களை அறிவியலுடன் தொடர்புபடுத்தவும் "தேசியக் கட்டமைப்பில்

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கணிதத்தின் பங்கு" எனும் தலைப்பில் குறுவள அளவில் ஒவ்வோர் ஆண்டும் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.



பரிசு வென்றவர்கள்

### 2.7.21 மாணவர்களுக்கான தொழில்நுட்ப மன்றப் போட்டிகள்

மாணவர்களை அறிவியல், கணக்கு மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த செயல்பாடுகளில் உற்சாகத்துடன் பங்கேற்கச் செய்ய இம்மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 'ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பயன்பாடு'





போட்டிகளில் பங்கேற்றவர்கள்

என்னும் தலைப்பில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 2.7.22. பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்

மாணவர்களின் திறன் மற்றும் உள்ளார்ந்த ஆளுமைத் திறன்களை வெளிப்படுத்தி, மேம்படுத்திக்கொள்ளும் வகையில் ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 32,656 அரசு









போட்டிகள் மற்றும் பரிசு வென்றவர்கள்

மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2016-2017 ஆம் கல்வி ஆண்டில், ரூ. 51.14 இலட்சம் மதிப்பில் நடத்தப்பட்டுள்ளன.

## 2.8 பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.8.1 உட்கட்டமைப்பு வசதிகள்

2011 - 2016 ஆம் ஆண்டு வரை அரசுப் பள்ளிகளில், புதிய பள்ளிக் கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ரூ. 1002.11 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. தற்போது ரூ. 70.11 கோடி செலவில், 4602 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மாணவியர் கழிப்பறை



இரண்டு வகுப்பறைக் கட்டிடம்



கூடுதல் வகுப்பறைக் கட்டிடம்

### 2.8.2. சுவர் சித்திரங்கள் வரைதல்

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் குழந்தைகள் ஆங்கிலச் சொற்களை ஓசையுடன் தெளிவாக உச்சரிக்கத்தக்க வகையில் குழந்தை நேய சுவர் சித்திரங்கள் 2184 பள்ளிகளில் ரூ.3.28 கோடி மதிப்பீட்டில் வரையப்பட்டுள்ளது. மாணவர்கள் மகிழ்ந்து விளையாடிக் கற்கவும், ஆங்கிலச் சொற்களை மிகச் சரியாக உச்சரிப்பதற்கும், இச்சுவர் சித்திரங்கள் பெரிதும் துணையாக உள்ளன.



சுவர் சித்திரங்கள்

### 2.8.3. சிறப்பு முயற்சிகள்

'பாலா' என்னும் புதுமைத் திட்டம் 2013-14 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் வகுப்பறை சூழலில் கற்றலுக்கு உகந்த ஒரு வெளியினை ஏற்படுத்துகிறது.



'பாலா வகுப்பறை'

இச்சூழல் மாணவர்களைக் பள்ளிக்கு ஈர்ப்பது மட்டுமல்லாமல் அவர்களைப் பள்ளி நேரம் கடந்தும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுத்தி, தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது.

### 2.8.4. பள்ளி மானியம் மற்றும் பராமரிப்பு மானியம்

அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்திட, ஆண்டுதோறும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி வகுப்பறைகளில் கற்போருக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் 2016-2017 ஆம் ஆண்டில், பள்ளி மானியமாக ரூ. 30.41 கோடி தொடக்கப் பிரிவுகள் உள்ள வகுப்பறைகளை மேம்படுத்தவும், பராமரிப்பு

மானியமாக ரூ.27.51. கோடி உள்கட்டமைப்பு வசதிகளை பராமரிக்கவும் வழங்கப்பட்டுள்ளது.

## 2.9 நிர்வாகம்

### 2.9.1 தொடக்கக் கல்வி நிர்வாகம்

தொடக்க, நடுநிலைப் பள்ளிகள், 32 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் 836 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் வாயிலாக தொடக்க கல்வி இயக்ககத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. 35,414 தொடக்கப் பள்ளிகளில் 29.10 லட்சம் மாணவர்களும், 9,708 நடுநிலைப் பள்ளிகளில் 17.42 இலட்சம் மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். தொடக்கக் கல்விப் பணியில் 2.23 இலட்சம் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். .

### 2.9.2 அலுவலகக் கட்டடங்கள்

30 மாவட்டங்களில் தொடக்கக் கல்வி அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களிலும், 2 தொடக்கக் கல்வி அலுவலகங்கள் வாடகை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. 413 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுள், 99 அலுவலகங்கள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2012-13 ஆம் ஆண்டு முதல் 2015-16ஆம் ஆண்டு வரை, 3 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும், 8 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் ரூ.2.24 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

**2.9.3 கணினி மற்றும் இணையதள வசதி**

2015-16 ஆம் ஆண்டில் 413 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கும், கணினி மற்றும் இணையதள வசதிகள் ரூ.4.36 கோடி செலவில் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இதற்கான நிதி உதவியை அளித்துள்ளது.

**2.9.4 மாற்றுச் சான்றிதழ்**

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பள்ளியை விட்டுச் செல்லும் போது வழங்கப்படும் "பதிவுத்தாள்" நடைமுறை மாற்றப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வழங்கப்படும் "மாற்றுச் சான்றிதழ்" முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**2.9.5 இணையதள வழி மாறுதல் கலந்தாய்வு**

இக்கல்வி ஆண்டுக்கான ஆசிரியர் பணியிட மாறுதல்கள் இணையதள வழி கலந்தாய்வு மூலம் வெளிப்படையான முறையில் நடத்தப்பட்டுள்ளது. இவ்விணைய வழிக் கலந்தாய்வில் 237 உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் 3600 ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் மாறுதல் மற்றும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மாணவர்கள் நலன் கருதி இக்கலந்தாய்வு பள்ளி திறப்பதற்கு முன்பாகவே கோடை விடுமுறையில் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் ஆசிரியர்- மாணவர் விகிதம் என்பது ஒரு முக்கியமான தரக் குறியீடாகும். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-இல் ஆசிரியர் -

மாணவர் விகிதம் தொடக்க நிலை வகுப்பில் 1:30 எனவும் மற்றும் உயர் தொடக்க நிலை வகுப்பில் 1:35 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பள்ளிவாரியாக மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களின் தேவை இறுதி செய்யப்பட்டு உபரியாகக் கணக்கிடப்பட்ட 1569 ஆசிரியர்கள் இணையவழிக் கலந்தாய்வில் கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் மூலம் மாறுதல் செய்யப்பட்டுள்ளனர்.

### 2.9.6 கற்பித்தல் நாட்கள்

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கான கற்பித்தல் நாட்கள் சிறு வயதுக் குழந்தைகளின் நலன் கருதி 220 நாட்களிலிருந்து 210 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உயர்/மேல்நிலைப் பள்ளிகளிலும், தொடக்க / நடுநிலை பள்ளிகளிலும் ஒரே சீரான பணி நாள் நடைமுறை அமையும். குறைக்கப்பட்டுள்ள இந்த 10 கற்பித்தல் நாட்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் மற்றும் குறுவளமைய அளவிலான பயிற்சிகளுக்குப் பயன் படுத்தப்படும்.

### 2.9.7 கல்வி மேலாண்மை தகவல் முறைமை

கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை வழியாக அனைத்துப் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு, திறன் அட்டை வழங்கப்படஉள்ளது. பல்வேறு

துறைகளுக்கிடையேயும், துறைகளுக்குள்ளேயும் அலுவலக ரீதியான தொடர்பு கொள்ளவும், பள்ளிகளிலுள்ள சிறந்த நடைமுறைகளைச் செயல்படுத்தவும், இடைநின்ற குழந்தைகளைக் கண்காணிக்கவும் இத்திட்டம் பயன் படுகின்றது.

### 2.10 சமுதாய பங்கேற்பு

#### 2.10.1 பள்ளி மேலாண்மைக் குழு

கல்வி மேலாண்மையை கடைக்கோடிக்கும் பரவலாக்குதலில் சமுதாயப் பங்கேற்பு அவசியமானதாகும். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 இல் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளையும், கல்வி உரிமையினையும் உறுதி செய்யும் பொறுப்பு பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் உள்ளூர் நிர்வாக அமைப்புகளைச் சார்ந்துள்ளது. 42,167 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

#### 2.10.2 சமுதாயப் பங்கேற்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மாணவர்களிடையே நல்ல பண்புகளை வளர்க்கும் வகையில் பள்ளி ஆண்டு விழா, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வீதி நாடகங்கள், கிராமக் கல்வித் திருவிழாக்கள், கண்காட்சிகள் மற்றும் போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

### 2.10.3 சமுதாயப் பங்களிப்பு



கல்விச்சீர் விழா



நூலகம்



திறன்மிகு வகுப்பறை



கை கழுவும் வசதி

பள்ளி வளர்ச்சிக்காக நிலம் தானமாக பெறுதல், கட்டடம் மற்றும் கழிப்பறை கட்டுதல், வாகன வசதி, கல்விச் சீர், விளையாட்டுப் பொருள்கள் வழங்குதல், மாணவர்கள் கை கழுவும் வசதி ஏற்படுத்துதல், திறன் பலகை வசதி மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான கணினி, நூல்கள், கற்றல் உபகரணங்கள் போன்றவை ரூ. 305.08 கோடி மதிப்பில் சமுதாயப் பங்களிப்பாகப் பெறப்பட்டுள்ளன.

### 2.11. வரவு செலவு

2017-18 ஆம் ஆண்டிற்கு, தொடக்கக் கல்விக்கென ரூ.11,073.81 கோடியும், அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கென ரூ.2778.43 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.12. முடிவுரை

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மிகுந்த கவனத்துடன் செயல்படுத்தி வருகிறது. வகுப்பறைச் செயல்பாடுகளை வலுவூட்டும் வகையில் தேவையான ஆசிரியர்களை நியமனம் செய்வதுடன் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. தொடக்கக் கல்வித் துறை மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கமும் இணைந்து மாணவர்களின் கற்றல் அடைவினை மேம்படுத்தப் பெருமுயற்சி எடுத்து வருகிறது. மாணவர்களின் உள்ளார்ந்த திறமையையும் அவர்களின் படைப்பாற்றலையும் வெளிக் கொணரும் வகையில் பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

## 3. இடைநிலை, மேல்நிலைக் கல்வி மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

"கல்வி என்பது வாழ்வதற்கு தயார் செய்வது அல்ல; வாழ்க்கையே கல்விதான்"

- ஜான் டூயி

### 3.1 இடைநிலைக் கல்வியின் முக்கியத்துவம்

ஒரு சமுதாயம் தொடர்ந்து வளர்ச்சி பெறுவதற்கு ஆதாரமாக விளங்குவது கல்வியே ஆகும். வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான படிநிலைகளுள் ஒன்றாகக் கல்வி திகழ்கிறது. சமூக வாழ்விற்குத் தேவையான செயல்திறன்களுடன் குழந்தைகளைக் கல்வி செதுக்குகிறது. குழந்தைகளின் கல்விப் பயணத்தில் மிக முக்கிய கட்டமாக இடைநிலைக் கல்வி திகழ்கிறது. மேலும், குழந்தைகளின் எதிர்காலம் இடைநிலைக் கல்வி நிலையில் அவர்கள் பெறும் கல்வியின் தரத்தைச் சார்ந்தே அமைகிறது.

பல்வேறு தளங்களில் இயங்கக் கூடிய அறிவார்ந்த திறன்கள் மட்டுமின்றி அவற்றினூடே ஊடுருவி செயலாற்றக் கூடிய அடிப்படைத் திறன்களை தருவதிலும் இடைநிலைக் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. மேலும் கல்வியாளர்கள் வகுத்துள்ளபடி, குழந்தைகளிடம் கல்வியை வேரூன்றச் செய்வதோடு, அவர்களிடம் மக்களாட்சிக்குரிய குடிமைப்பண்பு மற்றும் தலைமைப்பண்பு ஆகியவற்றை ஆழப்பதிப்பதிலும் சமூக வாழ்விற்குச் செழுமையும் வளமும் சேர்க்கப் பங்கேற்கும் வகையில் அவர்களின் ஆற்றலை வளர்ப்பதிலும் இடைநிலைக் கல்வி வல்லமையுடையதாக விளங்குகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இடைநிலைக்கல்வியை மேம்படுத்துவதற்காக முன்னெப்போதும் இல்லாத அளவில் குறிப்பிடத் தக்க நிதியினை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. அரசு செயல்படுத்தி வரும் மாணவருக்கான பாடநூல்கள், குறிப்பேடுகள், காலணிகள், சத்துணவு, புத்தகப் பைகள், வடிவியல் கருவிப்பெட்டிகள், நில வரை பட நூல்கள், மிதிவண்டிகள், மடிக்கணினிகள், வண்ணப்பென்சில்கள், வண்ணக்குச்சிகள், சிறப்பு ஊக்கத் தொகை, பேருந்துப் பயண அட்டைகள் போன்ற நலத்திட்டங்கள் கல்விக் கொள்கையில் மாநில அரசு கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டிற்கு சான்றாக விளங்குகிறது.

### 3.1.1 இடைநிலைக் கல்விக்கான தொலைநோக்கு

குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்கள் மற்றும் ஆற்றல்களை அனைத்து வகைகளிலும் முழுமையாக மேம்படுத்துவதே இடைநிலைக் கல்வியின் நோக்கமாகும். ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய முழுத்திறன்களைப் பயன்படுத்தி உயர்வடையும் வகையில் இடைநிலைக் கல்வியினை முழுமையானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் உருவாக்கிட மாநில அரசு உறுதி பூண்டுள்ளது. உயர்ந்த மதிப்புகள் அடிப்படையாகக் கொண்ட அறிவாற்றல், சமூகம், உளவியல் மற்றும் உடலியல் சார்ந்த பண்புகளை மாணவர்களிடம் உருவாக்கும் கல்வி முறையை மாநில அரசு தன்னுடைய தொலைநோக்காகக் கொண்டுள்ளது. அரசின் நோக்கங்களிலும், முயற்சிகளிலும் அனைவருக்கும்

இடைநிலைக் கல்வித் திட்டம் துணைநிற்கிறது. கல்வியில் தரம், சம வாய்ப்பு மற்றும் அனைவருக்குமான கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதின் வாயிலாக, வகுப்பறைகளின் சமூகக் கலாச்சாரச் சூழல், அறிவு, விழுமியங்கள் மற்றும் திறன்கள் பற்றிய எண்ணம் ஆகியவற்றில் மாற்றங்களைக் காணும் வகையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டம் வகுப்பறைகளுக்கு உள்ளும் புறமும் மாணவர் பெற்ற அறிவுக்கிடையே தொடர்பையும் உருவாக்கி வருகிறது.

### 3.1.2 குறிக்கோள்கள்

மாநில அரசு தொலைநோக்கினை எய்திடும் வகையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திற்காக கீழ்க்கண்ட நோக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

- அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மாணவர்களுக்கு இனிமையான மற்றும் பயன் தரத்தக்க கற்றல் சூழ்நிலையை உறுதி செய்தல்.

- பாலினப் பாகுபாடு, சமூக – பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற இடர்களால் எந்த ஒரு குழந்தையும் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை அடையமுடியாமல்

அல்லது விடுபட்டுப் போகாமல் இருப்பதை உறுதி செய்தல்.

- உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் மாணவர்களின் இடைநிற்றலை முழுவதுமாகக் குறைத்து 100 விழுக்காடு தக்க வைத்தல்.
- வேலை வாய்ப்பிற்கான மென் திறன்கள் மற்றும் தொழில் திறன்களோடு கூடிய தரமான மற்றும் வாழ்வுசார் கல்வியை வழங்குதல்.
- சிறப்பு அணுகுமுறைகளின் வாயிலாக இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.
- கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் மாதிரிப் பள்ளிகளையும் பெண்களுக்கான தங்கும் விடுதிகளையும் நிறுவுவதின் மூலம் சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து சமநிலையை எய்துதல்.
- அறிவியல் செயல்திட்ட வழி கற்றல் மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல்.
- கற்றலுக்கும் மதிப்பீட்டிற்காகவும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, முப்பருவக் கல்விமுறை

ஆகியவற்றைப் பின்பற்றி குழந்தைகள் தங்களின் கல்விசார் செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் இணைகலைத் திட்டச் செயல்பாடுகள் ஆகியவற்றில் தம் உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்குதல்.

- மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை தூண்டுதல்.

- மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கும் வகையில் தேவையான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு அளித்தல்.

- மாணவர்களிடையே உடல் நலம் குறித்த விழிப்புணர்வைப் பரவச் செய்து அவர்களிடம் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை வளர்த்தல்.

- கட்டணமில்லாப் போக்குவரத்து வசதி, மற்றும் தேவையின் அடிப்படையில் விடுதி வசதி ஆகியவற்றை வழங்கி 100 விழுக்காடு பள்ளி செல்வதை உறுதி செய்தல்.

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வியை உறுதிசெய்தல்.

### 3.2 செயல்பாடுகள்

#### 3.2.1 பள்ளி வசதி மற்றும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பள்ளி வசதியை ஏற்படுத்துவதே இடைநிலைக் கல்வியைப் பரவலாக்குவதற்கான அடிப்படையாகும். 5 கி.மீ. தொலைவுக்குள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்துவதே அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இதற்காக, பள்ளிகள் இல்லாத குடியிருப்புகளைக் கண்டறிய பள்ளி புவியியல் தகவல் முறைமை (GIS) பயன்படுத்தப்படுகிறது. பள்ளிகளில்லாத இக்குடியிருப்புகளில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுவதன் வாயிலாகப் பள்ளி வசதிகள் வழங்கப்படுகின்றன.

இக்குறிக்கோளை அடையும் வகையில் 2011-12 ஆம் கல்வியாண்டு முதல் 2016-17ஆம் கல்வியாண்டுவரை 829 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. அவற்றுள் 571 பள்ளிகள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் வாயிலாகவும் மற்றுமுள்ள 258 பள்ளிகள் மாநில நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

இதேபோல், 2011-12 ஆம் கல்வியாண்டு முதல் 2016-17ஆம் கல்வியாண்டு வரையில் 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

**தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்**

| கல்வியாண்டு | நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியாகதரம் உயத்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை | | உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக தரம் உயத்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | மாநில அரசு | அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் | மாநில அரசு |
| 2011-12 | 158 | 552 | 100 |
| 2012-13 | --- | --- | 100 |
| 2013-14 | 50 | --- | 100 |
| 2014-15 | 50 | --- | 102 |
| 2016-17 | --- | 19 | --- |
| **மொத்தம்** | **258** | **571** | **402** |

### 3.2.2 தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர் நியமனம்

புதியதாகத் தரம் உயர்த்தப்பட்ட 402 மேல்நிலைப் பள்ளிகளின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் 3618 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை மாநில அரசு உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் பாடங்களில் 9 முதுகலை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இப்பள்ளிகளுக்குத் தலைமை ஏற்கவும் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளவும் 402 தலைமை ஆசிரியர் பணியிடங்கள்

தோற்றுவிக்கப்பட்டு நிரப்பபட்டன. அவ்வாறே 829 தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 4145 பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 3.2.3 மாணவர் சேர்க்கை – உயர்வு


மாணவர் சேர்க்கையை உயர்த்தும் வகையில் மாநில அரசு புதுமையான பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவையாவன:

- 14 வகையான மாணவர் நலத்திட்டங்கள்.
- பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளில் புதிய பள்ளிகளை ஏற்படுத்துதல்.
- பாடவாரியாக ஆசிரியர்களை நியமித்தல்.
- கூடுதலாக ஆசிரியர் அல்லாத பணியாளர்களை நியமித்தல்.
- தற்போது இயங்கிவரும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகளை ஏற்படுத்துதல்.
- அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்விப் பிரிவுகளை விரிவுபடுத்துதல்.
- மெல்லக் கற்போருக்கான மாற்றுக் கற்பித்தல் திட்டம்.
- திறன் மிகு மாணவர்களுக்கான TANEXCEL திட்டம்.
- தேசிய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளுக்கு ஆயத்தப்படுத்த உதவுதல்.


- பள்ளியின் தரத்தை மேம்படுத்தும் வண்ணம், தலைமையாசிரியர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல்.
- வசதி வாய்ப்புகளற்ற சமூகப் பின்னணி கொண்ட மாணவியர்க்கு, உயர்கல்விக்கான வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- சிறுபான்மைப் பிரிவு மாணவர்கள் கற்றலுக்குத் தனிக்கவனம் செலுத்துதல்.
- பொதுத் தேர்வுகளில் அரசுப் பள்ளிகளின் செயல்திறனை உயர்த்துவதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல்.
- பள்ளி அளவிலான கல்விச் செயல்பாடுகளில் சமுதாயத்தின் பங்கேற்பைத் திரட்டுதல்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வியை அளித்தல்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு கூடுதல் வசதிகளுடன் கூடிய உதவிஅறைகள் மற்றும் உதவியாளர்களைஅளித்தல்.

கடந்த பல ஆண்டுகளில் மாணவர் சேர்க்கையை படிப்படியாக அதிகரிக்க இம்முன்னோடித் திட்டங்கள் காரணிகளாக அமைந்துள்ளன. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கைப் பதிவுகள் ஆரோக்கியமானதாகவும் ஊக்கம் அளிப்பதாகவும் காணப் படுகின்றன. இடைநிலை அளவில் கடந்த 2009–10ஆம் கல்வியாண்டில் 21,84,077-ஆக இருந்த மாணவர் சேர்க்கை,

2016-17ஆம் கல்வியாண்டில் 22,51,962-ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று, மேல்நிலைக் கல்வியில் 2009-10ஆம் கல்வியாண்டில் 13,67,965-ஆக இருந்த மாணவர் சேர்க்கை 2016-17ஆம் கல்வியாண்டில் 18,10,212-ஆக உயர்ந்துள்ளது.




ஆதாரம் : UDISE




ஆதாரம் : UDISE

### 3.2.4 கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் மாதிரிப் பள்ளிகள்

மாதிரிப் பள்ளிகள், அவற்றின் பெயருக்கேற்றவாறு தற்சார்புடனும், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடனும் தரமான மற்றும் உகந்த கற்றல் சூழல்களுடன் கூடிய பிற வசதிகளையும் கொண்டும் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில், 44 வட்டாரங்கள் கல்வியில் பின்தங்கிய வட்டாரங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வட்டாரங்களில் பள்ளி வசதியையும் தரமான இடைநிலைக் கல்வியையும் வழங்கும் பொருட்டு மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட 44 மாதிரிப் பள்ளிகளின் கட்டுமானத்திற்காக ரூ.190.92 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



மாதிரிப்பள்ளி, தரங்கம்பட்டி, கரூர் மாவட்டம்

### 3.2.5 மாணவியர் விடுதிகள்

13 மாவட்டங்களில் உள்ள 44 கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள பெண் குழந்தைகளுக்கு கல்வி

வாய்ப்பினை வழங்கும் பொருட்டு 2009-10ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



மாணவியர் விடுதி, கடவூர், கரூர் மாவட்டம்

9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 14 முதல் 18 வயதுக்குட்பட்ட, பட்டியல் இன, பழங்குடியின, இதர பின்தங்கிய மற்றும் சிறுபான்மையின மாணவியர்களையும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளோர்களையும் இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இவ்விடுதியில் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவியருக்கு சேர முன்னுரிமை தரப்படுகிறது. மேலும் குறைந்தது 50% மாணவியர் பட்டியல் இன, பழங்குடியின, இதர பின்தங்கிய மற்றும் சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

இவ்விடுதிகளில் மாணவியருக்கு, நவீன சமையற் கூடம், சூரிய ஆற்றலில் இயங்கும் சுடுநீர்க் கருவி, குடிநீர்

சுத்திகரிப்பு கருவி, தடையற்ற மின்சார வசதி, கண்காணிப்புக் கேமிரா, கழிவெரிக்கும் சாதனம் மற்றும் பிற நவீன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

அனைத்து மாணவியர் விடுதிகளும் மாநில அரசால் வழங்கப்பட்ட சரிவிகித ஊட்டச்சத்துள்ள உணவுப்பட்டியலைப் பின்பற்றுகின்றன. விடுதியின் பொதுச் சுத்தம் அதிலும் குறிப்பாக சமையற்கூடத்தின் சுத்தத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாணவியருக்குத் தொடர்ந்து உடல்நலச் பரிசோதனை செய்யப்படுவதோடு அவர்களின் நலவாழ்வை உறுதி செய்யும் நோக்கோடு மாணவியர் தகவல் அட்டையும் பராமரிக்கப்படுகிறது. இவ்விடுதியிலுள்ள அனைத்து மாணவியரும் குழு மருத்துவ ஆயுள்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளனர்.

### 3.2.6 தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம், 2006

'தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம், 2006', 2006-07 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின் வாயிலாக, முதலாம் வகுப்பு மாணவர்கள் பாடத்திட்டம் பகுதி 1-இன் கீழ் தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட்டு, 2015-16 ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு வரை இது விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பிற கல்வி வாரியங்களின் கீழ் செயல்படும் மழலையர், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2015-16 ஆம் ஆண்டு முதல் 1-ம்

வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை படிப்படியாக தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**3.2.7 அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழி பிரிவுகள்**

2012-13ஆம் கல்வியாண்டில் 6-ஆம் வகுப்பில் ஆங்கில வழி பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொதுமக்களிடமிருந்து கிடைத்த வரவேற்பையும் மாணவர் சேர்க்கையில் ஏற்பட்ட உயர்வையும் கருத்தில் கொண்டு, அடுத்தடுத்த கல்வி ஆண்டுகளில் ஆங்கிலவழி பிரிவுகள் கூடுதலாகப் பல அரசுப் பள்ளிகளுக்கு 10ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டன. தற்பொழுது, 3,916 அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் பிரிவுகள் உள்ளன.

**3.2.8 (அ) ஆசிரியர் மற்றும் அமைச்சுப் பணியாளர் நியமனம்**

அரசுப் பள்ளிகளில் தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிப்பதை மாநில அரசு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறது. பள்ளிக் கல்வித் துறையின் தேவைக்கேற்ப ஆசிரியர் தேர்வு வாரியம் ஆசிரியர்களைத் தெரிவு செய்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு போதுமான எண்ணிக்கையில் பாடவாரி ஆசிரியர்களை நியமனம் செய்துள்ளது. குறிப்பிடத் தக்க இந்நியமன நடவடிக்கையால் இடைநிலைக் கல்வியில் மாணவர் ஆசிரியர் விகிதம் 20:1 என்ற நிலையை அடைந்துள்ளது.

மேலும், அரசுப் பள்ளிகளில் உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடத்திற்கு அரசு தேர்வுத் துறை நடத்திய எழுத்துத்

தேர்வின் அடிப்படையில் 4122 நபர்கள் வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டனர். கருணை அடிப்படை நியமனத்தில் 82 இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

### 3.2.8 (ஆ) ஆசிரியர் பணியிட மாறுதல் மற்றும் பதவி உயர்வு

2017-18 ஆம் கல்வியாண்டிற்கான அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மாறுதல் மற்றும் பதவி உயர்விற்கான கலந்தாய்வு பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே மே மாதத்தில் வெளிப்படையான முறையில் இணையவழியில் நடத்தப்பட்டு 9122 அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியிட மாறுதல் மற்றும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

### 3.2.9 பள்ளி உட்கட்டமைப்பு

தரமான கல்வி வழங்குவதற்கு ஏற்ற சூழலை அமைத்துத் தருவது அடிப்படைத் தேவையாகும். கற்போர்க்கு உகந்த சூழலில் கற்றல் நடைபெற மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்குவதில் மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநில அரசு நபார்டு மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியோடு கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையிலான பள்ளிகளில் உட்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

### 3.2.9 (அ) நபார்டு திட்ட உதவிகள்

நபார்டு திட்டத்தின் நிதி உதவியோடு கூடுதல் வகுப்பறைகள், தளவாடங்கள், ஆய்வகங்கள், அறிவியல் ஆய்வகக் கருவிகள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச் சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கட்டம் வாரியான விவரங்கள் பின்வருமாறு:

நபார்டு திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள்

| கட்டம் | ஆண்டு | பள்ளிகளின் எண்ணிக்கை | வகுப்பறைகளின் எண்ணிக்கை | அறிவியல் ஆய்வகங்களின் எண்ணிக்கை | கழிப்பறைகளின் எண்ணிக்கை | குடிநீர் அலகுகளின் எண்ணிக்கை | சுற்றுச் சுவர் நீளம் (மீட்டரில்) | மதிப்பு (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 2012 | 131 | 1,508 | 112 | 244 | 71 | 43,252 | 152.73 |
| 12 | 2014 | 210 | 1,335 | 184 | 603 | 99 | 50,110 | 247.75 |
| 13 | 2015 | 155 | 1,303 | 127 | 324 | 80 | 44,052 | 208.62 |
| 13 அ | 2015 | 416 | --- | --- | 784 | 376 | --- | 41.58 |
| 14 | 2016 | 228 | 2,001 | 218 | 238 | 77 | 88,013 | 355.58 |
| 15 | 2017 | 149 | 1,639 | 149 | 298 | --- | --- | 251.92 |
| **மொத்தம்** | | **1,289** | **7,786** | **790** | **2,491** | **703** | **2,25,427** | **1,258.18** |

### 3.2.9 (ஆ) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளிகளுக்குத் தேவையான பலவித உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதியைத் தமிழக அரசு பல்வேறு தலைப்புகளில் ஒதுக்கியுள்ளது.

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பணிகளை முடிக்கும் வகையில் மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ. 1496.13 கோடி வழங்கியுள்ளது.

ஆண்டுவாரியாக நிதி ஒதுக்கீடு விபரம்

**(ரூ. கோடியில்)**

| கல்வியாண்டு | விபரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | ஏற்பளிப்பு குழு ஒப்பளிப்பு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|
| 2009-10 | புதிய பள்ளிகள் | 200 | 116.24 | 87.18 | 29.06 | 18.02 |
| 2010-11 | புதிய பள்ளிகள் | 344 | 366.08 | 274.56 | 91.52 | 451.18 |
| | பள்ளிகளுக்கான கூடுதல் வசதிகள் | 837 | | | | |
| 2011-12 | புதிய பள்ளிகள் | 552 | 325.66 | 63.57 | 42.38 | 616.31 |
| | புதிய பள்ளிகள் | 158 | --- | --- | --- | 267.52 |
| | மாதிரிப் பள்ளிகள் கட்டம்-1 | 18 | 54 | 40.50 | 13.50 | 4.52 |
| | மாதிரிப் பள்ளிகள் கட்டம்-2 | 26 | 78.52 | 29.45 | 9.81 | 93.14 |

| கல்வியாண்டு | விபரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | ஏற்பளிப்பு குழு ஒப்பளிப்பு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|
| | மாணவியர் விடுதி | 44 | 61.10 | 54.99 | 6.11 | 45.44 |
| 2016-17 | புதிய பள்ளிகள் | 19 | 24.85 | 14.91 | 9.94 | --- |
| | பள்ளிகளுக்கான கூடுதல் வசதிகள் | 54 | 52.02 | 31.21 | 20.81 | --- |
| **மொத்தம்** | | | **1078.47** | **596.37** | **223.13** | **1496.13** |

### 3.2.10 இடைநிலைக் கல்வி நிலையில் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி

இடைநிலைக் கல்வி நிலையில் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி ஒரு சிறப்புத் திட்டமாகும். அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் சரிநிகர் கல்வியை வழங்குவதற்கான மாநில அரசின் கொள்கையில் பல நலத்திட்ட உதவிகள் இடம் பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

- சிறப்பு ஆசிரியர்களை நியமித்தல்.
- மாற்றுத் திறனாளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.
- மருத்துவ மதிப்பீடு முகாம்கள்.
- மாற்றுத் திறனுக்கு ஏற்ற வகையில் துணைச் சாதனங்கள் வழங்குதல்.
- பாதுகாவலர் மற்றும் போக்குவரத்து வசதிக்கான படி வழங்குதல்.

- உதவியாளரை நியமித்தல்.
- வாசிப்பு உதவியாளர் படி.
- தளவாட வசதிகள் அடங்கிய வகுப்பறைகளை ஏற்படுத்துதல்.

### 3.3 இடைநிலைக் கல்விக்கான குறியீடுகள்

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை உருவாக்கியுள்ள "மதிப்பீடு வரைவு ஆவணம்", இடைநிலைக் கல்வியில் முன்னேற்றத்தை அளவிடத் திறன் வாய்ந்த கருவியாகும். கீழ்க்கண்ட 7 செயல்திறன் குறியீடுகளின் உதவியுடன் இம்முன்னேற்றத்தை இது கணக்கிடுகிறது.

1. இடைநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை
2. இடைநிலைக் கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம்
3. பாலினச் சமநிலைக்குறியீடு
4. பாலினச் சமத்துவக் குறியீடு
5. பட்டியல் இனத்தோர் - சமூக சமத்துவக் குறியீடு
6. பழங்குடியினர் - சமூக சமத்துவக் குறியீடு
7. இடைநிலைக் கல்வி அடைவு விகிதம்

செயல்திறன் குறியீடுகளின் அடிப்படையில் தமிழகம் இடைநிலைக் கல்வியில் அடைந்துள்ள முன்னேற்றத்தை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை விளக்குகிறது.

**மதிப்பீடு வரைவு ஆவணக்குறியீடு (RFD) (இடைநிலைக் கல்வி)**

| குறியீடு | 2009-10 | 2016-17 |
|---|---|---|
| மாணவர் சேர்க்கை | 21,84,077 | 22,51,962 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் | 85.81 | 93.67 |
| பாலினச்சமநிலைக்குறியீடு | 1.02 | 1.06 |
| பாலினச் சமத்துவக் குறியீடு | 1.01 | 1.03 |
| பட்டியல் இனத்தோர் - சமூக சமத்துவக் குறியீடு | 1.06 | 1.09 |
| பழங்குடியினர் - சமூக சமத்துவக் குறியீடு | 0.67 | 0.90 |
| இடைநிலைக்கல்வி அடைவு விகிதம் | 86.26 | 98.58 |

மேற்கண்ட 7 குறியீடுகளின் பகுப்பாய்வு முடிவுகள் 2009-10 ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 2016-17-இல் தமிழகக் கல்வித்துறையின் நிலையான, மதிப்பிடத்தக்க, ஆரோக்கியமான கல்வி வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

### 3.3.1 இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதம்

மாநில அரசு, கல்வியை பரந்த தொலைநோக்கோடு அணுகி வருகிறது. பள்ளிகளில் மாணவர் நேயச் சூழலை நிறுவுவதில் அரசு வெற்றி கண்டுள்ளதால் இடைநிற்றல் விகிதம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

**இடைநிற்றல் விகிதம்**

| கல்வியாண்டு | ஆண்கள் | பெண்கள் | சராசரி |
|---|---|---|---|
| 2010-11 | 11.01 | 11.4 | 11.21 |
| 2016-17 | 4.54 | 2.95 | 3.75 |

### 3.3.2 இடைநிலைக் கல்வியில் தக்க வைத்தல் விகிதம்

புதிய கற்றல் கற்பித்தல் திட்டங்கள் மற்றும் பிற புதிய உத்திகள் பள்ளிகளின் அகச்செயல்திறனைப் வலுவூட்டியதன் விளைவாக கணிசமான அளவில் தக்கவைத்தல் விகிதம் உயர்ந்துள்ளது.

**தக்கவைத்தல் விகிதம்**

| கல்வியாண்டு | ஆண்கள் | பெண்கள் | சராசரி |
|---|---|---|---|
| 2010-11 | 88.99 | 88.60 | 88.75 |
| 2016-17 | 95.46 | 97.05 | 96.25 |

### 3.3.3 மாணவர்-ஆசிரியர் விகிதம்

தேசிய அளவிலான விதிமுறைகளின்படி மாணவர் ஆசிரியர் விகிதம் 40:1 ஆக உள்ளது. ஆனால் மாநில அளவிலான மாணவர் ஆசிரியர் விகிதம் 20:1 ஆகத் திகழ்கிறது. தேவையின் அடிப்படையில் ஆசிரியர்களைப் பணி அமர்த்துவதில் மாநில அரசு முன்னோடியாகத் திகழ்வதோடு அனைத்துப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற பாடவாரியான ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பதையும் உறுதி செய்துள்ளது.

## 3.4 கல்வி தர மேம்பாடு

கல்வியில் ஆய்வுகளையும் புதுமைகளையும் உருவாக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் மாநில அரசு இடையறாத முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. கல்வித் தர மேம்பாட்டிற்கான செயல்பாடுகள் என்பது ஒரு தொடர் நிகழ்வாகும். இதனடிப்படையில் மாநில அரசு கல்வி முறையில் பல்வேறு புதுமைகளை புகுத்தி செயல்படுத்தி வருகிறது.

### 3.4.1 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையும் முப்பருவக்கல்வி முறையும்

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை மாணவர்களின் கல்வித் திறனை மட்டுமல்லாது அவர்களின் ஆளுமைத் திறன்கள் மற்றும் இயல்புகள் ஆகியவற்றையும் முழுமையாக மதிப்பிட உதவும் கருவியாகும்.

மேலும், மாணவர்கள் நாள்தோறும் சுமந்து வந்த புத்தகச் சுமையைக் குறைக்கும் வண்ணம் மாநில அரசால் முப்பருவக் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முப்பருவக் கல்வி முறை ஒரு கல்வியாண்டை மூன்று இணையான பருவங்களாகப் பகுக்கிறது. ஒவ்வொரு பருவத்திற்கும் தனித்தனி பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களின் சுமையைக் குறைப்பதாலும், பாடங்களைப் படிப்பதில் இனிய அனுபவம் பெறுவதாலும் இத்திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 3.4.2 ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு

வகுப்பறைச் செயல்பாடுகளில் தரத்தை உறுதி செய்ய அனைத்து ஆசிரியர்களுக்கும் தொடர்ச்சியான மற்றும் நீடித்த பணி மேம்பாடு அவசியமாகும். கடந்த 6 ஆண்டுகளில் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ள ஆசிரியர் பணியிடைத் திறன் மேம்பாட்டுக்கான பயிற்சிக் கட்டகத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் மூலம் ரூ.51.61 கோடி செலவில் 10 நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.3 மாணவர்க்கான நடமாடும் ஆலோசனை வாகனங்கள்

வளரிளம் பருவத்தின் தொடக்கம் எளிதில் உணர்ச்சி வயப்படும் காலம் ஆகும். வாழ்க்கையின் இந்த நிலையில், வளரிளம் பருவ மாணவர் பல்வேறு வகையான சவால்களால் தாக்குறவும் அவற்றால் அவர்களின் கல்வி அடைவுகள் பாதிப்படையவும் கூடும். மாணவர்கள் இக்காலகட்டத்தைக் கடந்திட, அவர்களுக்கு வழிகாட்டுதலும் உண்மையான உதவியும் உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டும். மேலும், இவ்வளரிளம் பருவத்தினர் உளநலம் பேணும் வகையிலும், கல்வியில் முன்னேற்றம் காணும் வகையிலும், வழிகாட்டல் திட்டமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

மாநிலத்தில் 32 மாவட்டங்களும், 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இம்மண்டலங்களுக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளும் பயன்பெறும் வகையில் அனைத்து வசதிகளுடன்

கூடிய 17 நடமாடும் உளவியல் ஆலோசனை வாகனங்கள் இயங்கி வருகின்றன.

இந்நடமாடும் உளவியல் ஆலோசனை வாகனங்களில் தொலைக்காட்சிப்பெட்டி, குறுந்தகடு இயக்கி போன்ற நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 2016-17ஆம் கல்வியாண்டில் மாநிலம் முழுவதிலுமிருந்து 1242 பள்ளிகளைச் சேர்ந்த 2,31,542 மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



நடமாடும் உளவியல் ஆலோசனை மையம்

### 3.4.4 மாநிலப் பொதுக்கல்வி வாரியம்

மாநிலப் பொதுக்கல்வி வாரியம், பாடத்திட்ட வடிவமைப்பு, கலைத்திட்டக் கட்டமைப்பு மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கிய பாடநூல்களுக்கு ஒப்பளிப்பு வழங்குதல் ஆகியவற்றை

முறைப்படுத்தும் ஆணைக்குழுவாகச் செயல்படுகிறது. இவையன்றி தனிப்பட்ட வெளியீட்டாளர்களின் நூல்கள் பரிந்துரைக்கப்பட்ட கலைத்திட்டத்தைப் பின்பற்றியுள்ளனவா என கூர்ந்தாய்வு செய்து ஒப்பளிப்பும் வழங்குகிறது.

### 3.4.5 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தேர்ச்சியினை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

*அ. பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாணவர்களின் செயல்திறன்*

கடந்த ஆண்டுகளில் அரசுத் தேர்வுகளில் உயர்வடைந்துள்ள மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்குச் சான்றாக விளங்குகின்றது. பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் 2013-இல் 89%ஆக இருந்த தேர்ச்சி விழுக்காடு 2017-இல் 94.4% ஆக உயர்ந்துள்ளது.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களில் மொழிப்பாடத்தில் 69 மாணவர்களும், கணிதத்தில் 13,759 மாணவர்களும், அறிவியலில் 17,481 மாணவர்களும் மற்றும் சமூக அறிவியலில் 61,115 மாணவர்களும் நூறு விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் மாணவர்களின் செயல்திறன் குறிப்பிடத்தக்க மாற்றம் அடைந்துள்ளது. இதேபோன்று, பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் 2013-இல் 88.1%ஆக இருந்த தேர்ச்சி விழுக்காடு 2017-இல் 92.1% ஆக அதிகரித்துள்ளது.

*ஆ. நூறு விழுக்காடு தேர்ச்சி பெற்ற பள்ளிகள்*

அரசுப் பொதுத்தேர்வில், நூறு விழுக்காடு பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது.

பள்ளிக் கல்வியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் அரசுத் தேர்வுகளின் முடிவுகளில் பிரதிபலித்துள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளின் அரசுப் பள்ளித் தேர்வு முடிவுகளைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.

நூறு விழுக்காடு பெற்ற அரசுப் பள்ளிகள் எண்ணிக்கை

| **கல்வியாண்டு** | **அரசுப் பள்ளிகள்** | |
|---|---|---|
| | **பத்தாம் வகுப்பு** | **பன்னிரண்டாம் வகுப்பு** |
| 2011-12 | 362 | 54 |
| 2012-13 | 453 | 115 |
| 2013-14 | 558 | 166 |
| 2014-15 | 1,164 | 187 |
| 2015-16 | 1,467 | 266 |
| 2016-17 | 1,557 | 292 |

ஆதாரம் - DGE

### 3.5 சிறப்புத் திட்டங்கள்

பல்வேறு மாணவர் மையப் புதுமைகளை உருவாக்குவதிலும் செயல்படுத்துவதிலும் அரசு வெற்றி கண்டுவந்துள்ளது.

### 3.5.1 TANEXCEL திட்டம்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை மாநிலத்தில் முதலிடம் பெறும் வகையில் தயார் செய்வது இத்திட்டத்தின்

குறிக்கோளாகும். இத்திட்டத்தின் மூலம் 2016-17ஆம் ஆண்டில் 6700 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 3.5.2 மேம்படுத்தப்பட்ட பங்கேற்பு மற்றும் மெல்லக் கற்போர் அடைவுத்திறன்திட்டம்

சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய மாணவர்களின் பள்ளி வருகையை மேம்படுத்தும் வண்ணம் அவர்களை ஈர்ப்பதற்காக மேம்படுத்தப்பட்ட பங்கேற்பு திட்டம் என்னும் புதுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் 2016-17ல் மெல்லக் கற்போருக்காகத் தொடங்கப்பட்ட மெல்லக்கற்போர் அடைவுத் திறன் திட்டம் 2017-18ஆம் ஆண்டில் சிறப்புக் கவன மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## 3.6 கல்வி இணைச் செயல்பாடுகள்

### 3.6.1 சதுரங்க விளையாட்டு

சதுரங்க விளையாட்டு அறிவாற்றல் மற்றும் செயல்முறை சார்ந்த திறன்களை அறிமுகப்படுத்த உதவும் வழிமுறையாகும். இவ்விளையாட்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், நுண்ணாய்வுச் சிந்தனை மற்றும் வகைமை அறிதல், முன் தயாரிப்பு, வெளி விழிப்புணர்வு, கருத்துக் குவிப்பு மற்றும் ஒருமுகச் சிந்தனை ஆகியவற்றை மேம்படுத்த மாணவர்களுக்கு உதவுகிறது. இது ஒரு மதிப்புமிகு திறனாக மட்டுமின்றி மாணவர்கள் எதிர்காலத்தில் பள்ளி மற்றும்

போட்டித் தேர்வுகளை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளும் வகையில் மன உறுதியை வளர்த்திடும்.

2012-13-ஆம் கல்வியாண்டிலிருந்து சதுரங்க விளையாட்டு இடைநிலைக் கல்விச் செயல்பாடுகளின் ஓர் அங்கமாகவே விளங்குகிறது. 2013-14 ஆம் கல்வியாண்டு முதல் 7 முதல் 17 வயது வரை உள்ள மாணவர்களுக்கிடையே பல்வேறு நிலைகளில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு சதுரங்கப் போட்டிகளை நடத்துவதற்கு ரூ.22 இலட்சத்தை வழங்கி வருகிறது.

### 3.6.2 மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

மாணவர்களிடையே விளையாட்டு உணர்வு ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்கி நல்வழிப் படுத்துகிறது

பள்ளிக் கல்வித் துறை ஆண்டுதோறும் குடியரசுத் தினத் தடகளப் போட்டிகள், குடியரசு தினக் குழுப் போட்டிகள் மற்றும் பாரதியார் தினப் போட்டிகளைக் பல்வேறு நிலைகளில் நடத்துகிறது. இப்போட்டிகளில் வெற்றி பெறும் சிறந்த சாதனையாளர்களுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன. 6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை பயிலும் 11 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களுக்கு 26 வகையான போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை அடையாளம்

காண்பதோடு அவர்களை பள்ளி விளையாட்டுகள் தொடர்பான தேசிய கூட்டமைப்பு நடத்தும் அகில இந்திய அளவிலான போட்டிகளில் பங்கேற்கவும் பயிற்சி அளிக்கிறது. இப்போட்டிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு பெருமைக்குரிய சாதனைகளைப் படைத்துள்ளது.

2013-14 ஆம் ஆண்டு முதல் அரசு குடியரசு தின தடகளப் போட்டிகள், குடியரசு தினக்குழுப் போட்டிகள், பாரதியார் தினப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.10 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது. மேலும் இந்த நிதி ஒதுக்கீடானது மாணவர்களுக்குத் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.6.3 யோகா

மாணவர்களின் உணர்வுகளைச் சமநிலைப் படுத்துவதற்கான முக்கிய கூறாக யோகா திகழ்வதை அரசு கருத்தில் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் யோகா நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



**பள்ளிகளில் யோகாப் பயிற்சி**

### 3.6.4 சாரண, சாரணியர் இயக்கம்

தமிழகத்தில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கம் செயல்பட்டுவருகிறது. இவ்வியக்கம், மாணவர்களிடம் அவர்களின் வளரும் பருவத்திற்கேற்ப, உள்ளார்ந்த திறன், விரும்பத்தக்க குணநலன், குடியுரிமை, குடிமை உணர்வு, உதவும் மனப்பான்மை, சுயகட்டுப்பாடு, தலைமைப் பண்பு மற்றும் நாட்டுப்பற்று ஆகியவற்றைக் கற்பிக்கிறது. மாணவர்கள் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்லியல் சின்னங்களை சுத்தப்படுத்துதல், மரக்கன்றுகளை நடுதல் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பிற்கு உதவுதல் போன்ற சமூக நலப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அரசு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தில் பணியாளர்களின் உழைப்பூதியத்திற்கும், அலுவலகப் பராமரிப்புச் செலவிற்கும் ரூ.7 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சிறந்து விளங்கும் சாரண, சாரணியர்களுக்குத் தமிழக ஆளுநர் அவர்களால் “இராஜ்ய புரஸ்கார்” விருது வழங்கப்பட்டு வருகிறது. தமிழகச் சாரண, சாரணியர் தேசிய அளவிலான முகாம்களில் பங்கேற்பதை ஊக்குவிக்க ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.6.5 சுற்றுச்சூழல் மன்றம்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் அதற்கான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும் தேவையான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த சுற்றுச் சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 11,460 பள்ளிகளில் சுற்றுச் சூழல் மன்றங்கள் செயல்பட்டுவருகின்றன. சுற்றுச் சூழல் மன்றச் செயல்பாடுகளுக்காக சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை வாயிலாக ஒவ்வொரு பள்ளிக்கும் ஆண்டுதோறும் ரூ. 5,000 வழங்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை ஆகியவை இணைந்து மரக்கன்றுகள் நடுதல், பள்ளிகளில் தோட்டங்களை உருவாக்கி பராமரித்தல் போன்ற பசுமைச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரசால் வடிவமைத்துச் செயல்படுத்தப்படும் சுற்றுச்சூழல் செயல்திட்டங்களின் சமுதாயத் தூதுவர்களாக மாணவர்கள் விளங்குகின்றனர்.

### 3.6.6 இளஞ் செஞ்சிலுவைச் சங்கம்

உடல் நலம், சேவை மற்றும் நட்புறவு ஆகியவை இளஞ் செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்களாகும். மாநிலம் முழுவதும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 3,19,850 மாணவர்களைக் கொண்ட 6,397 இளஞ் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் உள்ளன. பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகளின் வாயிலாக மாணவர்களுக்கு விழுமியங்களை ஊட்டவேண்டும் என்பதை தேசிய கலைத் திட்ட கட்டமைப்பு வலியுறுத்துகிறது. தேசிய கலைத் திட்டக் கட்டமைப்பு 2005-இன் எதிர்பார்ப்பின்படி, இளஞ் செஞ்சிலுவைச் சங்கத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் இளநிலையாளர்களாகவும் விளங்குகின்றனர். இள நிலையாளர்களாக விளங்கும் மாணவர்களுக்கு சாலைப் பாதுகாப்புப் பயிற்சி முதலுதவிப் பயிற்சி, தீ விபத்துப் பாதுகாப்புப் பயிற்சி, பேரிடர் மேலாண்மைப் பயிற்சி, கண் மற்றும் இரத்த தானத்தின் முக்கியத்துவம், சுற்றுச் சூழல் மாசுபடுவதிலிருந்து காப்பாற்றுதல், வன அழித்தலை தடுத்தல் போன்றவை சார்ந்து திறன் வளர்க்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 3.6.7 இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டம்

இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டம் மாணவர்களின் பன்முகத்தன்மையைக் கருத்தில் கொண்டு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, வினாடி வினாப்போட்டி, வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசைப் போட்டி, கவிதை எழுதுதல் போட்டி, பாரம்பரிய மற்றும் கிராமிய நடனப்போட்டி, நடிப்புப் போட்டி ஆகிய 10 விதமான போட்டிகள் மீது தனிக்கவனம் செலுத்துகிறது. ஆண்டு தோறும் இப்போட்டிகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்டு, இறுதிப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. 2016-17ஆம் கல்வியாண்டில் கோயம்புத்தூரில் இப்போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டப் பெற்றனர்.

### 3.6.8 நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம், மாணவர்களின் ஆளுமைத்திறனை வளர்ப்பதோடு சமூகத் தொண்டுகளான மருத்துவ முகாம், இரத்ததான முகாம், மாணவர்களுக்கும் மக்களுக்குமான நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்றவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 1,953 அலகுகளில் 97,650 மாணவத் தொண்டர்கள் உள்ளனர். திட்டச் செயல்பாடுகளுக்காக ரூ.2.44 கோடியும், சிறப்பு முகாம்களுக்காக ரூ.2.19 கோடியும் ஆண்டு மானியமாக வழங்கப்படுகிறது. 2016-17ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் 1891 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 3.7 பிற செயல்பாடுகள்

### 3.7.1 அறிவியல் கண்காட்சி

எதிர்காலக் கல்விக்கான தொலைநோக்கில், தமிழ்நாடு அரசு மாணவர்களின் அறிவியல் உளப்பாங்கை வளர்ப்பதற்கும் அவர்களின் உள்ளார்ந்த அறிவியல் வேட்கை, புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை காட்சிப்படுத்தக் களம் அமைத்துத் கொடுப்பதற்கும் அடித்தளமிட ஆர்வம் காட்டி வருகிறது. அறிவியல் கண்காட்சி மாணவர்களின் படைப்புத் திறனைக் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்கிறது. இக்கண்காட்சிகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்படுகின்றன.




பள்ளிகளில் அறிவியல் கண்காட்சி

2016-17ஆம் கல்வியாண்டில் மாநில அளவில் அறிவியல் கண்காட்சி "தேசிய வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கணிதத்தின் பங்கு" என்னும் தலைப்பில் மதுரையில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில் சிறந்த படைப்பாகத் தேர்வு செய்யப்பட்டவை புதுச்சேரியில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் பங்கு பெற்றன. அவ்வாறே, தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் தேர்வு

பெற்ற சிறந்த படைப்புகள் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சியில் பங்கு பெற்றன.

### 3.7.2 பெற்றோர் ஆசிரியர் கழகம்

பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளிக்கும் அது பயனளிக்கும் சமுதாயத்திற்கும் பாலமாக செயல்படுகிறது. இக்கழகம் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளையும் ஆர்வத்தையும் அறிந்து கொள்வதற்கும், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் தரத்தை மேம்படுத்தத் தேவையான திட்டங்களை வகுப்பதற்கும் உதவுகிறது. மேலும் இக்கழகம் பள்ளிகளின் சிறப்பான செயல்பாட்டிற்குத் தேவையான வளங்களைத் திரட்டுவதற்குப் பள்ளி நிர்வாகத்திற்குத் துணைபுரிகிறது. மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகமானது அரசுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு உதவும் வகையில் வினா வங்கிப் புத்தகங்கள் மற்றும் மாதிரி வினாத் தாள்கள் தயாரிக்க உதவிபுரிகிறது.

### 3.7.3 ஆசிரியர் இல்லம்

சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள ஆசிரியர் இல்லங்கள் ஆசிரியர் சமூகத்திற்கு பயனடையும் வகையில் அமைந்துள்ளன. பல்வேறு பணிகள் காரணமாக சென்னை மற்றும் திருச்சி போன்ற பெரு நகரங்களுக்கு வருகைதரும் ஆசிரியர்கள் குறைந்த கட்டணத்தில் வசதியாகத் தங்குவதற்கு ஆசிரியர் இல்லங்கள் பயன்படுகின்றன. கோயம்புத்தூர் மாநகருக்கும் இந்த வசதி விரிவுபடுத்தப்படவுள்ளது.

### 3.8 நிதி ஒதுக்கீடு

மாநில அரசு கடந்த ஆறு ஆண்டுகளாகப் பள்ளிக் கல்வித்துறைக்கு அதிக அளவில் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றது. பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு 2017-18-ஆம் நிதியாண்டில் ரூ.11,721.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போல் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு 2017-18-ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,193.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

*“கல்வி ஒரு ஆற்றல்மிகு ஆயுதம். இதனைக்கொண்டு உலகையே மாற்ற இயலும்”*

*– நெல்சன் மண்டேலா*

## 4.1 அறிமுகம்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் முற்றிலும் சுயநிதி அடிப்படையில் இயங்கும் பள்ளிகளாகும். தொடக்கத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. மெட்ரிகுலேசன் பள்ளிகள் தமது தனித்தன்மையுடன் இவ்விரு பல்கலைக்கழகங்களுடன் இணைப்பு பெற்றிருப்பினும், நிதி சார்ந்தும், செயல்பாடுகள் சார்ந்தும் தன்னாட்சியுடன் செயல்பட அனுமதிக்கப்பட்டன. நிர்வாக வசதிக்காக இப்பள்ளிகள் 1978ஆம் ஆண்டு பள்ளிக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. அத்தருணத்தில் சுமார் 20 மெட்ரிகுலேசன் பள்ளிகள் மட்டுமே செயல்பட்டுவந்தன. இப்பள்ளிகள் மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு 1978-இன் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருந்ததால், மெட்ரிகுலேசன் பள்ளிகளைச் சீரிய முறையில் கண்காணிக்க 2001ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது 4,268 மெட்ரிகுலேசன் பள்ளிகள் 39,18,221 குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## 4.2 தொலைநோக்கு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தரமான கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்யுமுகத்தான் முழுக்கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுதல், உட்கட்டமைப்பு வசதிகள் சிறந்த முறையில் ஏற்படுத்தப்படுதல் ஆகியவை அரசால் கண்காணிக்கப்பட்டு உறுதி செய்யப் படுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது உறுதி செய்யப் படுகிறது.

## 4.3 குறிக்கோள்கள்

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப் படுவதை உறுதி செய்ய இவ்வியக்ககம் கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் செயல்படுகிறது.

- முழுக்கல்வித்தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப் படுவதை உறுதிசெய்தல்.
- குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அடிப்படை வசதிகள் சிறந்த முறையில் ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- குழந்தைகள் இனிய முறையில் கற்றல் செயல் பாட்டினைப் பெறத்தக்கவகையில் கற்றல்-கற்பித்தலுக்கு உகந்த சூழலை உருவாக்குதல்.

- குழந்தைகள் பன்முக வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாடு அடையத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்.
- புதிதாக மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் அனுமதி வழங்குதல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 நடைமுறைப்படுத்துவதில் மாநில முதன்மைத் தொடர்பு அலுவலராக கடமையாற்றுதல்.

## 4.4 தரமான கல்வி வழங்கச் சிறப்பு முயற்சிகள்

### 4.4.1 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை

2012-13ஆம் ஆண்டில் மதிப்பீடு முறையில் திருப்புமுனையாகத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடுமுறை ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கு அறிமுகப் படுத்தப்பட்டு, 2013-14ஆம் கல்வி ஆண்டில் இது ஒன்பதாம் வகுப்பிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. கல்வி சார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் குழந்தைகள் முழுமையான கல்வி வளர்ச்சி பெறும் வகையில் தொடர் மற்றும் முழுமையான

மதிப்பீடுக் கல்வி முறை மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பின்பற்றப்பட்டுவருகிறது.

### 4.4.2 முப்பருவக் கல்வி முறை

தரமான கல்வி என்ற அடைவையும், குழந்தைகளுக்கு அதிகப்படியான புத்தகச் சுமையைக் குறைக்கவும் ஒரு புதிய முப்பருவக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 9 வரையுள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பாடக் கருத்துகளைப் புரிந்து படிப்பதை ஊக்கப்படுத்தும் முகத்தான் முப்பருவக் கல்வி முறையைப் பின்பற்றிக் கல்வி போதிக்கப்படுகிறது.

### 4.4.3 நூலக வசதி

அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் நூலகம் இயங்க வேண்டுமென மாநில அரசால் வலியுறுத்தப்படுகிறது. பல்வேறு தலைப்புகளிலான நூல்கள், நாளேடுகள், வரைபடங்கள், ஆவணங்கள், குறுந்தகடுகள், மின் நூல்கள், இதர குறிப்புதவி நூல்கள் இவையனைத்தும் பள்ளி நூலகத்தில் இடம் பெற வேண்டும். பாடங்கள் தொடர்பான நூல்களை நாடிச்சென்று மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை நூலகம் ஏற்படுத்துகிறது. ஆய்வு அலுவலர்கள் குறிப்பிட்ட இடைவெளியில் மெட்ரிகுலேசன் பள்ளிகளைப் பார்வை மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளும்போது, மெட்ரிகுலேசன் பள்ளிகளில் குறைந்தது 1500 நூல்கள் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்

பள்ளிகளில் குறைந்தது 3000 நூல்கள் இருப்பதை உறுதி செய்கின்றனர்.

### 4.4.4 கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதிகள்

மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்பப் பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் சுத்தமான கழிப்பறைகளும், குடிநீர் வசதிகளும் ஏற்படுத்த வேண்டுமென அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகளிலும் மேற்கூறிய வசதிகள் இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

### 4.4.5 மாணவர்களுக்கு விலையில்லாப் பேருந்து பயண அட்டை வழங்குதல்

பள்ளி மாணவர்கள், பேருந்தில் பள்ளிக்குச் சென்றுவர விலையில்லாப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் எவ்விதச் சிரமமும் இன்றிப் பள்ளிகளுக்கு வந்து செல்ல இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2016-17ஆம் கல்வி ஆண்டில் 3,23,584 மாணவர்கள் இந்த வசதியைப் பெற்றுள்ளனர்.

### 4.4.6 பள்ளி வாகனப் பயணத்தில் மாணவர்களின் பாதுகாப்பு

பள்ளி மாணவர்கள் பயணத்தின் போது அவர்களது பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (ஒழுங்குமுறை மற்றும் பள்ளிப் பேருந்துகள் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள், 2012 அரசால் ஏற்படுத்தப்பட்டது. விபத்துக்களின்றிப் பள்ளி வாகனங்களை இயக்குவதை உறுதி செய்ய வாகன ஓட்டுநர்களுக்கும், உதவியாளர்களுக்கும்

போக்குவரத்துத்துறை அலுவலர்களின் உதவியுடன் மாவட்ட அளவில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாதுகாப்பாக வாகனங்களை இயக்குதல் மற்றும் குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, **23,358** ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 4.5 நிர்வாகப் பொறுப்புகள்


### 4.5.1 புதிய பள்ளிகள் தொடங்க மற்றும் பள்ளிகளைத் தரம் உயர்த்த அனுமதி வழங்குதல்


அரசால் வரையறுக்கப்பட்ட விதிகளை நிறைவு செய்யும் நிலையில், புதிய மெட்ரிகுலேசன் பள்ளி தொடங்க அனுமதி மற்றும் தற்போது செயல்பட்டு வரும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 2016-17ஆம் கல்வி ஆண்டில் 94 புதிய பள்ளிகள் தொடங்கவும் 100 மெட்ரிகுலேசன் பள்ளிகள் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

### 4.5.2 அங்கீகாரம்

அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பின் புதியதாகத் தொடங்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு ஆரம்ப அங்கீகாரமும், மூன்று ஆண்டுகளுக்கொருமுறை தொடர் அங்கீகாரமும் வழங்கப்படுகிறது.

இவ்வியக்ககத்தின் கீழ்க் கடந்த ஐந்து ஆண்டுகளில் இயங்கும் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு.



### 4.5.3 குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 தமிழ்நாட்டில் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 தமிழக அரசால் வகுக்கப்பட்டது.

இச்சட்டத்தின் பிரிவு 12, துணைப் பிரிவு (1) (சி)யினைக் குறிப்பாக எடுத்துக்காட்ட அரசாணை வெளியிடப்பட்டது. இதில், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, சிறுபான்மை அல்லாத தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 25 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்வது குறித்த சட்டப்பூர்வ முறையினை நடைமுறை படுத்துவது தொடர்பாக, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீட்டின் கீழ் 2013-14ஆம் ஆண்டு முதல் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | மொத்த இடங்களில் 25% ஒதுக்கீடு | சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| 2013-2014 | 1,07,157 | 49,864 | 46.5 |
| 2014-2015 | 1,16,004 | 86,729 | 74.7 |
| 2015-2016 | 1,17,232 | 94,811 | 80.6 |
| 2016-2017 | 1,19,043 | 97,506 | 81.9 |

அரசால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் விளைவாக 25 விழுக்காடு ஒதுக்கீட்டின் கீழ்ச் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருகிறது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு மத்திய மாநில அரசுகளால் கூட்டாக மேற் கொள்ளப்பட வேண்டும். வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகளின் நலன் கருதி, 2013-14, 2014-15 மற்றும் 2015-16 ஆகிய ஆண்டுகளில் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கான தொகை ரூ.221.99 கோடி மாநில அரசால் பள்ளிகளுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது.

### 4.5.4 இணைய வழியில் விண்ணப்பித்தல்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படுவதையும், 25% இட ஒதுக்கீட்டின் கீழ் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினை சேர்ந்த தகுதியான குழந்தைகள் சேர்க்கை செய்யப்படுவதை உறுதி செய்யவும் தற்போது கூடுதல் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. சேர்க்கை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்ய 2017-18ஆம் ஆண்டு முதல் இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 4.5.5 தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழு

தனியார் சுயநிதிப் பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்களை முறைப்படுத்த, தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம்,

2009 இயற்றப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதிபதி அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவால் அனைத்து வகைத் தனியார் சுயநிதிப் பள்ளிகளிலும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், கூடுதலான கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூல் செய்வதாகத் தனியார் சுயநிதிப் பள்ளிகள் மீது புகார் பெறப்பட்டால், அது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுத் தேவையான ஆணைகள் இக்குழுவால் வழங்கப்படுகிறது.

**4.6 நிதி ஒதுக்கீடு**

2017-18 ஆம் ஆண்டிற்கு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**4.7 முடிவுரை**

மெட்ரிகுலேசன் பள்ளிகள் சிறந்தமுறையில் செயல்படுவதும், பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான கற்றல் சூழல் அமைவதும், ஒட்டுமொத்த வளர்ச்சி அடைவதும் இயக்ககத்தால் அரசின் சீரிய வழிகாட்டுதலின்படி கண்காணிக்கப்படுகிறது.

# 5.அரசுத் தேர்வுகள்

வெற்றி என்பது முடிவல்ல அது ஒரு நீண்ட பயணம்

## 5.1 அறிமுகம்

மாநில பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான இடைநிலை மற்றும் மேல்நிலை பொதுத்தேர்வுகளை அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தி வருகின்றது. மிக முக்கியமான இவ்விரண்டு தேர்வுகள் மட்டுமின்றி இதர 32 தேர்வுகளையும் நடத்தி மதிப்பெண் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் உயர்கல்வி தொடர்வதற்கும் வேலை வாய்ப்பு பெறுவதற்குமான மிக முக்கிய மற்றும் மதிப்பு வாய்ந்த ஆவணங்களாகும்.

1975 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கிய அரசுத் தேர்வுகள் இயக்ககம், பல புதுமையான முறைகளைத் திறம்படப் புகுத்தியதன் வாயிலாகத் தேர்வுகளை மந்தணத்தன்மையுடன் நடத்துவதில் சிறப்பான முன்னேற்றம் அடைந்து உள்ளது. தேர்வுப்பணிகளில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளை உணர்ந்து பல புதிய முயற்சிகள் தொழில் நுட்ப உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.

## 5.2 தொலைநோக்கு

தேர்வுகளை நேர்மையாகவும், நியாயமாகவும் நடத்துவதை உறுதிசெய்யும் வகையில் தேர்வுப்பணிகளை

அவ்வப்போது மேம்படுத்தி அவற்றின் பாதுகாப்பு, மந்தணத் தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிசெய்தல்.

### 5.3 குறிக்கோள்கள்

தேர்வு தொடக்கம் முதல் தேர்வுமுடிவுகள் வெளியிடுதல் வரையுள்ள அனைத்து நிலைகளிலும் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் வாயிலாகப் பொதுத் தேர்வுகளை நேர்மையான முறையிலும், வெளிப்படையாகவும் நடத்துதல், குறித்த காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிட்டு மதிப்பெண் சான்றிதழ்களைத் தேர்வர்களுக்கு விநியோகித்தல்.

### 5.4 பொறுப்புகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 34 வகையான தேர்வுகளை நடத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. 2016-17- ஆம் ஆண்டில் 19,59,599 மாணவர்கள் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளை எழுதியுள்ளனர்.

மாநிலம் முழுவதும் செயல்படும் 7 மண்டல அலுவலகங்களில் தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தேர்விற்கான செலவினம்செய்தல், தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்னர் மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம் போன்ற முக்கியப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

### 5.5 இணையதள உருவாக்கம்

மாணவர் சமுதாயம் பயன்பெறும் வகையில் www.dge.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு அதில்

தேர்வுகள், தேர்வுகளுக்கான கால அட்டவணை, விண்ணப்பப் படிவங்களின் மாதிரிப்படிவம், கட்டண விவரங்கள், சான்றிட்ட மதிப்பெண் நகல், புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் பெறுதலுக்கான நடைமுறைகள், பொதுத் தேர்வுகளுக்கான மாதிரி வினாத்தாட்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் மற்றும் பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவியல் பாடச் செய்முறை தேர்விற்கான அறிவுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி இணையதளத்தின் வாயிலாக, தேர்வுகள் எழுதவுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் தனித் தேர்வர்களது பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்குத் தேவையான விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 5.6 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள், விண்ணப்பிக்கும் வழிமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களின் தேவையை உணர்ந்து தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கென மாநிலம் முழுவதும் 213 சேவை மையங்கள் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

### 5.7 தேர்வர்களுக்கு நிரந்தரப் பதிவெண் வழங்குதல்

தேர்வர்களுக்கு அவர்கள் தேர்ச்சி பெறும் வரை ஒவ்வொரு பருவத் தேர்வின் போதும் தனித்தனிப் பதிவெண்

வழங்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது. மார்ச் 2016 பொதுத் தேர்வுகள் முதல் தேர்வர்களுக்கு நிரந்தரப் பதிவெண் வழங்கப்பட்டு, அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெறும் வரை, அப்பதிவெண்ணைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5.8 இணையத் தளம் வாயிலாக தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்தல்

தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு விநியோக மையங்களுக்கு நேரில் சென்று தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் முறை நீக்கப்பட்டு, தற்போது தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை இணையதளத்தில் நேரடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிகள், தங்களது அனைத்து மாணவர்களின் நுழைவுச் சீட்டுகளையும் பதிவிறக்கம் செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5.9 முறைகேடுகளைத் தவிர்த்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

ஆள்மாறாட்டத்தைத் தவிர்த்திடும் பொருட்டும் தேர்வர்கள் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் எழுதுவதைத் தவிர்த்திடும் பொருட்டும் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:-

- விடைத்தாளில் தேர்வரின் புகைப்படத்துடன் கூடிய முகப்புத் தாள் அறிமுகப்படுத்துதல்
- ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாள்

- பாடங்களுக்கேற்ப முதன்மை விடைப்புத்தகங்கள் வழங்குதல்

## 5.10 சிறையிலேயே தனித் தேர்வு மையம் அமைத்தல்

சிறைவாசிகளும் கல்வியில் ஏற்றம் கண்டிட, சிறையிலேயே தேர்வு மையம் அமைக்கப்பட்டுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. நடைபெற்று முடிந்த மார்ச் 2017, மேல்நிலைப் பொதுத் தேர்வினை 98 சிறைவாசிகள் திருச்சி, பாளையங்கோட்டை, வேலூர், கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் புழல் மத்தியச் சிறைகளில் தேர்வெழுதியுள்ளனர். மார்ச் 2017 இடைநிலை பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் 229 சிறைவாசிகள் பாளையங்கோட்டை, திருச்சி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் புழல் மத்தியச் சிறைகளில் தேர்வெழுதியுள்ளனர்.

## 5.11 தேர்வுக் கட்டுப்பாட்டு அறை

மேல்நிலை / இடைநிலை பொதுத் தேர்வுகள் நடைபெறும் காலங்களில் பொதுத் தேர்வுகளை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடத்துவதற்கான அவசியமான தேவைகளுக்குத் தேர்வுக் காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் தொடங்கும் நாள் முதல் தேர்வுகள் முடியும் வரை, இக்கட்டுப்பாட்டு அறை காலை 8.00 மணி முதல் இரவு 8.00

மணி வரை செயல்படுகிறது. பெறப்படும் புகார்களின் அடிப்படையில் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது

**5.12 தமிழ்வழியில் பயிலும் மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்**

இடைநிலை / மேல்நிலைப் பொதுத்தேர்வினைத் தமிழ் வழியில் பயின்று தேர்வெழுதும் பள்ளி மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. மார்ச் 2017, மேல்நிலைப் பொதுத் தேர்வில் 5,69,304 பள்ளி மாணாக்கரும், இடைநிலை பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் 6,19,721 பள்ளி மாணாக்கரும் பயனடைந்துள்ளனர்.

**5.13 சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வெழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்**

இடைநிலை / மேல்நிலைப் பொதுத்தேர்வெழுதும் கற்றலில் குறைபாடுடைய தேர்வர்கள், கண்பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் இதர குறைபாடுள்ள தேர்வர்கள் தேர்வெழுதுவதற்குக் கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது. மேலும், அனைத்துப் பாடங்களுக்கும் சொல்வதை கேட்டு எழுதுபவர் நியமனம், ஏதேனம் ஒரு மொழிப்பாட விலக்களிப்பு, கணிப்பான் பயன்படுத்த அனுமதியும் வழங்கப்படுகிறது. மார்ச் 2017, மேல்நிலைப் பொதுத் தேர்வில் 2,227 மாற்றுத்திறனாளி தேர்வர்களும், இடைநிலை பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வில் 4,190 சிறப்பு கவனம் தேவைப்படும் தேர்வர்களும் பயனடைந்துள்ளனர்.

### 5.14 விடைத்தாட்களை எடுத்துச்செல்ல வாகனங்கள் பயன்படுத்துதல்

ஒவ்வொரு தேர்வு நாளன்றும் தேர்வு முடிவுற்றவுடன் வாகனங்களைப் பயன்படுத்தி விடைத்தாள் கட்டுகளை, விடைத்தாள் சேகரிப்பு மையங்களில் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், விடைத்தாள் கட்டுகள் அனைத்தும் பாதுகாப்பாகவும் குறித்த நேரத்திலும் எடுத்துச் செல்வது உறுதி செய்யப்படுகிறது.

### 5.15 தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

மாணவர்கள் எவ்விதச் சிரமமுமின்றித் தேர்வு முடிவுகளை இணைய வழி வாயிலாகத் தெரிந்துகொள்ளப் பின்வரும் இணையத் தளங்களில் சிறப்பான வழிவகை செய்யப்பட்டுள்ளது. www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in, www.tnresults.nic.in.

### 5.16 தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்

மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பித்திட ஏதுவாக **மார்ச்** 2015 தேர்வுகள் முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தேர்வுகள் http://www.dge.tn.nic.in இணையதள வாயிலாகத் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தற்காலிகச் சான்றிதழ் தேர்வு

முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மட்டுமே செல்லத்தக்கவையாகும்.

### 5.17 மேல்நிலை தேர்வில் விடைத்தாட்கள் கணினிப்பிரதி, மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்தல்

மேல்நிலைப் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டப்பிறகு மாணவர்கள் விடைத்தாட்களின் நகல் பெறுவதற்கும் மறுமதிப்பீடு மற்றும் மதிப்பெண் மறுகூட்டல் வேண்டி விண்ணப்பித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்களது விடைத்தாள் கணினிப்பிரதி செய்யப்பட்டு, இணையதளம் வாயிலாகப் பதிவேற்றம் செய்யும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் தங்களது விடைத்தாள் நகலைப் பதிவிறக்கம் செய்து, திருத்தப்பட்ட விடைத்தாட்களைச் சரிபார்த்த பின்னர் தேவைப்படின் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்திட முடியும்.

### 5.18 கூடுதல் பாதுகாப்புத் தன்மையுடன் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்

மதிப்பெண் சான்றிதழ்களை மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தன்மையுடன் வெளியிட நடவடிக்கை மேற்கொண்டதால், மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மையினை எளிதாகக் கண்டுபிடிக்க முடிகின்றது. மேலும் கூடுதலாக மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு தன்மையுடன், இருபரிமாண பட்டைக்கோடு முறையுடனும், தேர்வர்களின்

புகைப்படத்துடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

### 5.19 ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்

பலமுறை தேர்வெழுதி அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 5.20 பிற தேர்வுகள்

#### 5.20.1 ஜுன் / ஜுலை மாதங்களில் சிறப்புத் துணைத் தேர்வு நடத்துதல்

மார்ச் / ஏப்ரல் மாதங்களில் நடத்தப்படும் இடைநிலை / மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில் தோல்வியுறும் மாணவர்கள் அக்கல்வியாண்டிலேயே அவர்தம் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு உதவியாக உடனடிச் சிறப்புத் துணைத்தேர்வு ஜுன்/ஜுலை மாதத்தில் நடத்தப்படுகிறது.

#### 5.20.2 தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு

ஆண்டுதோறும் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வும் நடத்தப்படுகிறது. ஜுன் 2017-இல் நடைபெறவுள்ள இத்தேர்வில் 24,175 தேர்வர்கள் தேர்வெழுத விண்ணப்பித்துள்ளனர். இத்தேர்வர்கள் விடைத்தாள் கணினி பிரதி பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

### 5.20.3 எட்டாம் வகுப்புத் தேர்வு

குறைந்தபட்சக் கல்வித் தகுதியினை வழங்குவதற்கும், வேலைவாய்ப்புக்காகவும், அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காகவும், எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு நடத்தப்பட்டு வருகின்றது.

### 5.20.4 அரசுத் தொழில் நுட்பத் தேர்வு

தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கும், வேலைவாய்ப்புக்காகவும், ஓவியம், தையல், விவசாயம், இசை, அச்சுக்கலை, கைத்தறி, நெசவு மற்றும் பிற பாடப்பிரிவுகளில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகள் கீழ்நிலை மற்றும் மேல்நிலை ஆகிய இரண்டு நிலைகளில் நடத்தப்படுகிறது. ஜுன் 2017 தேர்விற்கு 11,651 தேர்வர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

### 5.20.5 தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு

ஊரக மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் செப்டம்பரில் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஊரக மாணவர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மிகாமல் இருக்கும் பட்சத்தில், இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் மேற்படி எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு,

ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தற்போது மாணவர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க அனுமதிக்கப் படுகின்றனர். 2016-இல் நடைபெற்ற இத்தேர்வினை 53,887 மாணவர்கள் எழுதியதில், தேர்ச்சிப் பெற்ற 3,100 மாணவர்கள் உதவித்தொகை பெற்றுள்ளனர்.

### 5.20.6 தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு

தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு நடத்தப்பட்டு மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏழாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்று எட்டாம் வகுப்பில் பயிலும் (பட்டியலின மற்றும் பழங்குடியின மாணவர்கள் 50% மதிப்பெண்கள் மற்றும் ஏனையோர் 55% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்) மாணவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் தேர்வெழுதலாம். தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.6000/-(மாதந்தோறும் ரூ.500/- வீதம்) உதவித்தொகையாக ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆண்டுதோறும் 6695 மாணவர்களுக்கு

படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 2016-இல் நடைபெற்ற இத்தேர்வினை 1,55,366 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### 5.20.7 தேசிய அளவிலான திறனறித் தேர்வு

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் தேசிய அளவிலான முதல்நிலைத் திறனறித் தேர்வினை தமிழகத்தில் நடத்த, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு அமைப்பாக செயல்படுகிறது. மத்திய/மாநிலப் பள்ளி குழுமங்களில் 10-ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதி படைத்தவர்கள் ஆவர்.

முதல்நிலைத் தேர்வுக்கான முடிவுகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டு, பின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்நேர்காணலில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 11 மற்றும் 12-ஆம் வகுப்பு வரை மாதந்தோறும் ரூ.1250/-ம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பிற்கு மாதந்தோறும் ரூ.2,000/-மும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது.

2016-இல் நடைபெற்ற இத்தேர்வினை 1,55,699 மாணவர்கள் எழுதியதில், 237 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

### 5.21 இதர சான்றிதழ்கள்

#### 5.21.1 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்

10 மற்றும் 12-ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகளில் தேர்ச்சியடைந்து பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்களுக்குப் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் வழங்கப்படுகின்றது. விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

#### 5.21.2 மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதிச் சான்றிதழ்

மதிப்பெண் சான்றிதழ்களைத் தவறவிடும் தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

#### 5.21.3 மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை வழங்குதல்

உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் நியமன அதிகாரிகள் மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மைக் குறித்த

அறிக்கையினைக் கோரும் பட்சத்தில் அவ்வறிக்கை வழங்கப்பட்டு வருகிறது.

## 5.22 நடுவணரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் நடுவணரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் பல தேர்வுகளை சென்னையில் நடத்திட, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது.

## 5.23 புதிய முயற்சிகள்

### 5.23.1 தரப்பட்டியல் நடைமுறையினைக் கைவிடுதல்

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வித் தேர்வுகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான தரப் பட்டியல் அறிவிக்கும் நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வந்தது.

காலப்போக்கில் இந்தத் தரங்களைப் பெற பல்வேறு கல்வி நிறுவனங்கள் தமக்குள் ஒரு போட்டியினை வளர்த்துக் கொள்ளும் நிலையாக அது உருவெடுத்தது. இதனால் மாணவர்கள் உளவியல் ரீதியான இறுக்கத்திற்கு உள்ளானார்கள். மாணவர்களுக்கு ஏற்படும் அதீத மன அழுத்தங்களைக் குறைக்கும் வகையிலும், ஆரோக்கியமற்ற போட்டிச் சூழல்களைத் தவிர்க்கும் வகையிலும் 2016-17ஆம்

கல்வி ஆண்டு முதல் தரப்பட்டியல் அறிவிக்கும் நடைமுறை கைவிடப்பட்டது.

### 5.23.2 மேல்நிலை முதலாமாண்டுக்கு பொதுத் தேர்வினை அறிமுகப்படுத்துதல்

1978-79-இல் தொடங்கப்பட்ட மேல்நிலைக்கல்வி முறையில் அன்றைய சூழலைக் கருத்தில் கொண்டு இரண்டாம் ஆண்டில் மட்டும் மாநில அளவில் அரசுப் பொதுத்தேர்வு நடத்திடலாம் என முடிவு செய்யப்பட்டு 1980-ஆம் ஆண்டு முதல் மேல்நிலை இரண்டாமாண்டில் மாணவர்கள் பொதுத்தேர்வு எழுதி வருகின்றனர்.

மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வு மதிப்பெண்கள் உயர்கல்வி சேர்க்கைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால் உயர் கல்விக்கு அடிப்படையாக அமையும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பாடத் திட்டத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை முதலாம் ஆண்டு பாடங்களுக்குக் கொடுப்பதில்லை என்பதால் உயர்கல்வியில் மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்றும் அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளைச் சந்திக்க மேல்நிலை முதலாம் ஆண்டில் பொதுத்தேர்வுகள் நடத்துவது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் மேல்நிலைக் கல்வி அளவில், தான் விரும்பி எடுத்த விருப்பப் பாடங்களில் மாணவர்கள் வலுவான அடித்தளம் பெறவேண்டியது அவர்களுடைய எதிர்கால கல்விக்கு மிக அவசியமானதால் 2017-18-ஆம் கல்வியாண்டில் இருந்து

மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்படும்.

### 5.23.3 தேர்வுக்கால அட்டவணை வெளியிடுதல்

அனைத்து மாணவர்களும் எவ்வித மன அழுத்தமுமின்றி தேர்வு எழுதுவதற்கு ஆசிரியர்கள் முன்னதாகவே மாணவர்களை தயார் செய்யும் வகையில் 2017-18-ஆம் கல்வியாண்டிற்கான இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான தேர்வுக்கால அட்டவணை கல்வியாண்டின் துவக்கத்திலேயே வெளியிடப்பட்டன.

| பொதுத்தேர்வு | தேர்வு | | தேர்வு முடிவு வெளியிடப்படும் தேதி |
|---|---|---|---|
| | தொடங்கும் தேதி | முடிவடையும் தேதி | |
| மேல்நிலை பொதுத்தேர்வு – இரண்டாம் ஆண்டு | 01.03.2018 | 06.04.2018 | 16.05.2018 |
| மேல்நிலை பொதுத்தேர்வு – முதலாம் ஆண்டு | 07.03.2018 | 16.04.2018 | 30.05.2018 |
| இடைநிலை பொதுத் தேர்வு – பத்தாம் வகுப்பு | 16.03.2018 | 20.04.2018 | 23.05.2018 |

### 5.23.4 தமிழில் மதிப்பெண்சான்றிதழ்

மார்ச் 2017 பொதுத்தேர்வு முதல் மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் பெயர் மற்றும் பாடங்கள் தமிழிலும் அச்சிட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

### 5.23.5 மின் ஆளுமை வாயிலாக சான்றிதழ்கள்

- தமிழ்நாட்டில் பயின்று இடம் பெயர்ந்து பிற மாநிலங்களுக்குக் கல்வி பயிலச் செல்லும் தேர்வர்களுக்கு மின் ஆளுகை வாயிலாக புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.
- சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கும் மின் ஆளுகை வாயிலாக விண்ணப்பிக்க வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

### 5.23.6 தேர்வு முடிவுகளை குறுஞ்செய்தியாக அனுப்புதல்

மார்ச் 2017, மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்கள், தேர்வு முடிவுகளை விரைவில் அறியும் வண்ணம் அவர்கள் தேர்வெழுத விண்ணப்பித்தபோது பதிவு செய்த அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டது

### 5.23.7 மின் ஆவணக் காப்பகம்

காகித ஆவணங்களைப் பயன்படுத்தும் நடை முறையினை நீக்கவும், மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை மின்னணு முறையில் அறியவும், 'மின் ஆவணக் காப்பகம்' உதவுகிறது. மார்ச் 2017 முதல் மேல்நிலை மற்றும் இடைநிலைப் பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வுகள் மின் ஆவணக் காப்பகக் கணக்கு உடைய மாணாக்கர் மதிப்பெண் சான்றிதழ்களை மின்னணு முறையில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தரவுக்

களஞ்சியத்திலிருந்து நேரடியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

தேர்வர்கள் மின்னணு மதிப்பெண் சான்றிதழை எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்வதற்கும், இணைய வழியாகப் பகிர்ந்து கொள்வதற்கும் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தரவுக்களஞ்சியத்திலிருந்து மின்னணு முறையில் நேரடியாக வழங்குவதால் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது.

## 5.24 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

2017-18 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 87.35 கோடி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.25 முடிவுரை

ஒவ்வொரு நடவடிக்கையும் மாணவர்கள் பெற்றோர் மற்றும் சமுதாயத்தின் நலன் கருதியே செயல்பட்டு கடந்த வருடங்களில் பல புதுமையான முயற்சிகளைப் புகுத்தித் தேர்வுகளை நடத்துவதிலும், தேர்வு முடிவுகளை வெளியிடுவதிலும் வெளிப்படைத்தன்மையை நிரூபித்துக் கொண்டு இருக்கின்றது.

# 6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

"எழுத்தறிவு மட்டுமே கல்வி ஆகாது. எழுத்தறிவு கல்வியின் முடிவும் அல்ல தொடக்கமும் அல்ல. ஒரு குழந்தை மற்றும் மனிதனின் உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகியவற்றிலுள்ள மிகச்சிறந்ததை வெளிக் கொணர்வதே கல்வியாகும்".

– மகாத்மா காந்தி

## 6.1 முன்னுரை

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககமானது, 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எழுத்தறிவை வழங்குதல் என்கிற உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 1976 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. தமிழ்நாட்டில், கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் எழுத்தறிவின்மை நிலையை நீக்கிடும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கற்போர், தான் பெற்ற கல்விசார் திறன்களைத் தொடர்ந்து தக்க வைத்திடவும், அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பதை ஊக்குவித்திடும் வகையிலும், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், கற்போருக்கான மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம், மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், முழு எழுத்தறிவு இயக்கம், தொடர்கல்வி மற்றும் வளர்கல்வி ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

கற்போரின் திறன்களை மேம்பாடு அடையச் செய்திடும் வகையிலும், அவர்களைத் தொடர்ந்து வருவாய் ஈட்டச்செய்திடும் வகையிலும், பற்பல வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதை உறுதி செய்திடும் வகையிலும், தொழிற்திறன் பயிற்சி வழங்குதலை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 6.2 தொலைநோக்கு

முழு எழுத்தறிவு நிலையை அடைந்திடும் வகையில் அடிப்படை எழுத்தறிவு, தொழிற்திறன் கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலில் முன்னேற்றத்தை உருவாக்குதல்.

## 6.3 குறிக்கோள்கள்

- வயதுவந்தோருக்கு அடிப்படைக் கல்வியை வழங்கிட வழிவகை செய்தல்.
- கற்போர் பள்ளிக் கல்விக்கு நிகரான கல்வியை இயல்பாகப் பெறச் செய்தல்.
- தொழிற்திறன் பயிற்சிகளின் வாயிலாக வருவாய்த் திறனை மேம்படச் செய்தல்.
- கற்போரை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் தயார் செய்தல்.

## 6.4 கற்கும் பாரதம் திட்டம்

2001-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், பெண்கள் எழுத்தறிவு 50 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பெற்றிருந்த தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர்,

விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 3, 5 மற்றும் 8 ஆகிய வகுப்புகளுக்கு நிகரான கல்வியை பள்ளிக்கல்வி முறைக்கு வெளியே கற்போர் பெற வழிவகை செய்கிறது. இத்திட்டத்தில், 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற பின்தங்கியோருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு வாரியான கணக்கெடுப்பின் படி, 24.57 இலட்சம் எழுத்தறிவு பெறாத வயது வந்தோரை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரூ. 145.39 கோடி மொத்தத் திட்ட மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதிப்பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.4.1 கற்றல் மையங்கள்

கிராமப் பஞ்சாயத்து அளவில் 3602 வயது வந்தோர் கல்வி மையங்கள் மூலம் மேலாண்மை, கல்வி மற்றும் தொழில் நுட்பச் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் எழுத்தறிவு மற்றும் வாழ்நாள் முழுவதும் தொடர்கல்வியைக் கற்போருக்குக் கள அளவில் வழங்கிடும் பொருட்டு, 9 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் அடிப்படைக் கல்வி, தொழிற்திறன் மேம்பாடு மற்றும் சமநிலைக்கல்வி ஆகிய

கல்விசார் செயல்பாடுகள் கற்போருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 6.4.2 கற்போருக்கான அடிப்படை எழுத்தறிவு

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடத்திட்டத்தினைக் கொண்டு வயதுவந்தோர் கல்வி மையங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு அளிக்கப்படுகிறது. அடிப்படை எழுத்தறிவுத் திட்டத்தில் படித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படைக் கணக்குத் திறன்களை உள்ளடக்கியுள்ள பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 300 மணி நேரம் பயிற்சி வழங்கி ஆண்டுதோறும் ஆகஸ்ட் மற்றும் மார்ச் மாதங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

### 6.4.3 தொழில் நுட்பங்களின் ஒருங்கிணைப்பு

2012ஆம் ஆண்டில், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த கற்றல் உபகரணங்களின் வாயிலாகக் கற்போர் நவீன முறையில் கல்வியைப் பெற்றிடும் வகையில் அரியலூர், தருமபுரி, ஈரோடு, சேலம், பெரம்பலூர், திருவண்ணாமலை, மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் 40 வயதுவந்தோர் கல்வி மையங்களுக்குக் கணினிகள் மற்றும் இதர பொருள்களை ரூ.1 கோடி மதிப்பில் வழங்கி வசதிகள் செய்யப்பட்டு அவை மாதிரி வயதுவந்தோர் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இம்மையங்களில், கற்போருக்கு மேற்குறிப்பிட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பொருட்களைப் பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இம்முறையானது, கல்லாதோர் மத்தியில் கல்வி கற்கும் திறனை மேலும் உயர்த்திட உதவியாக உள்ளது. மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக இது வரை 23,576 கற்போர் பயனடைந்துள்ளனர்.

### 6.4.4 மனிதவளம்

கற்கும் பாரதம் திட்டத்தின் கீழ், திட்ட விதிகளின்படி, 26 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், 100 ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்களும், 5389 மையப்பொறுப்பாளர்களும் மதிப்பூதிய அடிப்படையில் 9 மாவட்டங்களில், பணிபுரிந்து வருகின்றனர்.

### 6.4.5 சமநிலைக் கல்வித் திட்டம்

சமநிலைக் கல்வித் திட்டமானது, விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய 4 மாவட்டங்களில் 64 ஒன்றியங்களிலுள்ள 900 வயதுவந்தோர் கல்வி மையங்களின் வாயிலாக 18000 கற்போருக்கு 3-ஆம் வகுப்பிற்கு நிகரான கல்வியை வழங்கிடும் வகையில் 900 மைய பயிற்றுநர்களைக் கொண்டு முன்னோட்ட அடிப்படையில் ரூ 3.48 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது.

தமிழ், கணக்கு, சூழ்நிலையியல் மற்றும் கணினி அடிப்படைத்திறன்கள் ஆகிய நான்கு பாடப் புத்தகங்கள் கற்போருக்கு வழங்கி, மையப் பயிற்றுநர்களால் நேரடி





சமநிலைக் கல்வித் திட்டம்



கற்போருக்கான எழுத்துத் தேர்வு

வகுப்புகளின் வாயிலாகப் பயிற்றுவிக்கப்பட்டு, ஏப்ரல்-2017ஆம் மாதம் இறுதித் தேர்வு நடத்தப்பட்டது.

### 6.4.6 திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள்

கற்போர் மையங்களானது, 9 மாவட்டங்களில் உள்ள 3602 கிராமப் பஞ்சாயத்துகளில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவுக்

கல்வியோடு செயற்கை ஆபரணத் தயாரிப்பு, பினாயில் தயாரித்தல், சோப்பு எண்ணெய் மற்றும் சோப்புப் பவுடர் தயாரித்தல், மெழுகு மற்றும் ஊதுபத்தி தயாரித்தல், மென்பொம்மைகள் தயாரித்தல், சம்கி வேலைப்பாடு பயிற்சி, பூவேலைப்பாடு மற்றும் தையல் பயிற்சி ஆகிய தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தொழிற்திறன் பயிற்சி உபகரணங்களான தையல் இயந்திரங்கள், பொம்மைகள் செய்ய தேவையான செய்பொருள்கள், செயற்கை ஆபரணத் தயாரிப்புப் பொருள்கள் மற்றும் பிற தொழிற்திறன் பயிற்சி சார்ந்த உபகரணங்கள் வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பெண்கள், எழுதுதல் மற்றும் படித்தல் ஆகிய செயல்பாடுகளைக் கற்றுக்கொள்வதோடு, அவர்கள் தங்கள் வாழ்க்கை சார்ந்த அன்றாடத் தேவைகளுக்கு சுயமாக வருவாய் ஈட்டும் வகையில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.



ஆபரணத் தயாரிப்பு

மேலும், கற்போருக்கு தொழிற்திறன் பயிற்சிகளோடு தனிநபர் ஊடக இயக்கம் மூலமாக நிதி அறிவுத்திறன் கல்வி, சட்ட அறிவு, கடமைகள் மற்றும் உரிமைகள், தேர்தல் விழிப்புணர்வுக் கல்வி, பேரிடர் மேலாண்மை மற்றும் குடிமைப் பாதுகாப்பு ஆகியனவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.4.7 அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு


தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையம் மற்றும் தேசிய திறந்தநிலைப்பள்ளி நிறுவனம் இணைந்து கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வினை நடத்திச் சான்றிதழ் வழங்குகிறது. தமிழகத்தில், இத்திட்டம் செயல்படும் 9 மாவட்டங்களில், கடந்த மார்ச் – 2017 வரை மொத்தம் 23.89 இலட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவை முடித்துத் தேசிய திறந்தநிலைப் பள்ளி நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்றுள்ளனர்.






அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு

தமிழக அரசினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம், அடிப்படை எழுத்தறிவைப் பெற்ற கற்போரின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு தொடர்ந்து அதிகரித்து வருவதை அறிய முடிகிறது.




ஆதாரம்: பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

**அடிப்படை எழுத்தறிவில் சாதனைச் சுவடு**


லட்சுமி அம்மாவின் முயற்சி

பெயர் : லட்சுமி.
ஊர் : வெள்ளிரவெளி

லட்சுமி

''...வெள்ளிரவெளி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளியில் செயல்பட்டு வரும் கற்கும் பாரதம் எழுத்தறிவு மைய மாலை நேர வகுப்புகளில் நான் எழுதப் படிக்கக் கற்று வருகிறேன். இதன் மூலம் நான் தினசரி செய்தித்தாள் பேருந்து எண் மற்றும் சுவரொட்டி தகவல் என பல செய்திகளை நான் படிக்கிறேன். கற்கும் பாரத திட்டத்திற்கு எனது நன்றி...''

- திருமதி. லட்சுமி
  கற்போர், வெள்ளிரவெளி
  வயதுவந்தோர் கல்வி மையம்
  திருப்பூர் மாவட்டம்

### 6.5 புதுமைச் செயல்பாடுகள்

2016-17ஆம் ஆண்டில், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 10 வயதுவந்தோர் கல்வி மையங்களானது ரூ. 25 இலட்சம் செலவில் மாதிரி வயதுவந்தோர் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.




மாதிரி வயதுவந்தோர் கல்வி மையம்

### 6.6 வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் தாக்கம்

தமிழக அரசானது, பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியதன் விளைவாக வயதுவந்தோர் எழுத்தறிவு விழுக்காட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது. கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்ட 9 மாவட்டங்களில் எழுத்தறிவு விழுக்காட்டில் உண்டாகியுள்ள குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தைக் கீழ்க்காண் வரைபடத்தின் வாயிலாகக் காணலாம்.


### எழுத்தறிவு விழுக்காட்டில் வளர்ச்சி




ஆதாரம்: 2001 மற்றும் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

தமிழக அரசின் பல்வேறு தொடர் முயற்சிகளின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் பெண்கள் எழுத்தறிவு விழுக்காட்டில் தொடர்ச்சியான வளர்ச்சி அடைந்து வருவதைப் பின்வரும் வரைபடத்தின் வாயிலாகக் காணலாம்.

### பெண்கள் எழுத்தறிவு விழுக்காட்டில் வளர்ச்சி




ஆதாரம்: 2001 மற்றும் 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு

## 6.7 சாதனைகள்

வயதுவந்தோர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காகத் தேசிய எழுத்தறிவு விருதுகளை 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் தமிழ்நாடு பெற்றுள்ளது.

பல்வேறு நிலைகளில் மாநிலம் பெற்ற விருதுகள்

| ஆண்டு | சிறந்த மாநிலம் | சிறந்த மாவட்டம் | சிறந்த கிராமப் பஞ்சாயத்து |
|---|---|---|---|
| 2013 | -- | அரியலூர் | குப்பாண்டம் பாளையம் கிராமப் பஞ்சாயத்து, அந்தியூர் ஒன்றியம், ஈரோடு மாவட்டம் |
| 2015 | தமிழ்நாடு | தருமபுரி | பாலமலை கிராமப் பஞ்சாயத்து, கொளத்தூர் ஒன்றியம், சேலம் மாவட்டம் |
| 2016 | -- | -- | வட்டமுத்தாம்பட்டி கிராமப் பஞ்சாயத்து, சேலம் ஊரக ஒன்றியம், சேலம் மாவட்டம் |







தேசிய எழுத்தறிவு விருது-2016

### 6.8 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

2017-18 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.29.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.9 முடிவுரை

வயதுவந்தோர் கல்வித் திட்டமானது கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்குவதோடு நில்லாமல், அவர்களைப் பல்வேறு திறன்களில் மேம்பட்டவர்களாகவும் உருவாக்குகிறது. கற்போரின், கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகளானது, சமுதாயத்தின் நல்ல விழுமியங்களுடன் கூடிய குடிமக்களாகவும், முழுமையான வளர்ச்சி பெற்றவர்களாகவும் மாற்றுகிறது. தனி மனித மதிப்பு மற்றும் மக்களாட்சி சார்ந்த உரிமைகள் ஆகியவற்றில் சிறப்பான முன்னேற்றத்தைக் கல்வி உருவாக்குகின்றது.

# 7. பொது நூலகங்கள்

**"பல்கலைக்கழகம் என்பது நூலகத்தைச் சுற்றி அமைந்த கட்டடங்களின் தொகுப்பே "**

**- ஷெல்பி ஃபுட்**

## 7.1 அறிமுகம்

சுதந்திரம், செழுமை மற்றும் சமூக வளர்ச்சியானது மானுட சமுதாயத்தின் விழுமியத்தைக் குறிப்பதாகும். தெளிந்த, அறிவார்ந்த குடிமக்களே மக்களாட்சியில் ஆக்கப்பூர்வமாக பங்கேற்கவும், அதன் வளர்ச்சியில் ஈடுபடவும் இயலும். சமூக வளர்ச்சியானது தரமான கல்வி, பண்பாடு, கலாச்சாரம் தொடர்புடைய அறிவினை அளவற்று பெறும் வழிகளைச் சார்ந்து அமைகிறது. இவ்வழிகளை அடையும் அறிவுக் கூர்மையின் நுழைவு வாயிலாக பொது நூலகம் இயங்குகிறது. வாழ்நாள் கற்றலை அடிப்படையாகவும், சுய முடிவெடுக்கும் திறனை உருவாக்கவும், கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்தவும் மற்றும் நல்ல சமூக உருவாக்கத்தின் மையமாக பொது நூலகங்கள் செயல்படுகின்றன.

"குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்கு சிறந்த வாசிப்பு" என்ற குறிக்கோளின்படி பொது நூலகத் துறையானது சமூக வளர்ச்சியில் பங்கெடுத்து வருகிறது.

## 7.2 குறிக்கோள்கள்

- நிறைந்த நூலகப் பணியின் மூலம் அனைத்து தரப்பினரின் தகவல் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

- பழைய மற்றும் அரிய நூல்களை மின்மயமாக்கி, பாதுகாத்தல்.
- 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் நூலகங்களை அமைத்து செயல்படுத்துதல்.
- நூலகங்களில் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கச் செய்தல்.
- நூலகங்களில் தரமான நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் நூல்களை வாங்கி வழங்குதல்.
- நூலகங்களில் நவீன தொழில் நுட்பத்தினை புகுத்தி நூலகச் சேவையினை மேம்படுத்துதல்.

## 7.3 இலக்கு

தகவல், எழுத்தறிவு, கல்வி மற்றும் கலாச்சார கருப்பொருளை மையமாகக் கொண்டு பொது நூலகச் சேவையானது பின்வரும் இலக்குகளை உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது.

- குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- அனைத்து தரப்பினருக்கும் சுயகற்றல் மற்றும் முறையான கல்விக்கு துணை நிற்றல்.
- தனிமனித படைப்பாற்றலை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே கற்பனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுதல்.
- பாரம்பரிய கலாச்சார விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் கலைகள், அறிவியல் சாதனைகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.

- நடத்து கலைகளின் வளர்ச்சிக்கு உதவுதல்.
- அனைத்து தரப்பினருக்குமான கலை, இலக்கிய, கல்வி சார்ந்த செயல்பாடுகளில் பங்கெடுத்தல்.

### 7.4 நூலக இயக்கம்

"தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948"-இன்படி, தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டன. பொது நூலகங்களின் சேவையை மேம்படுத்தும் நோக்கில் 1972-ஆம் ஆண்டில் பொது நூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. பொது நூலக இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் தமிழகமெங்கும் பின்வரும் நூலகங்கள் செயல்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கன்னிமாரா பொது நூலகம் | 1 |
| 2. | அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| 3. | மாவட்ட மைய நூலகங்கள் | 32 |
| 4. | கிளை நூலகங்கள் | 1926 |
| 5. | நடமாடும் நூலகங்கள் | 14 |
| 6. | ஊர்ப்புற நூலகங்கள் | 1914 |
| 7. | பகுதி நேர நூலகங்கள் | 715 |
| | **மொத்தம்** | **4603** |

இவை தவிர, மக்களின் பயன்பாட்டிற்காக மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் மற்றும் கடவுச் சீட்டு அலுவலகங்கள் ஆகிய இடங்களில் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 7.4.1 கன்னிமாரா பொது நூலகம்

தமிழ்நாட்டின் மாநில மைய நூலகமாக கன்னிமாரா பொது நூலகம் செயல்பட்டு வருகிறது. சென்னை எழும்பூரிலுள்ள அருங்காட்சியக வளாகத்தில் இயங்கி வரும் இந்நூலகம் 1896-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் குறிப்புதவி நூலகமாக விளங்கிய இந்நூலகம், 1930ஆம் ஆண்டு முதல் பொது மக்களுக்கு நூல்களை இரவல் வழங்கும் நூலகமாக செயல்பட்டு வருகிறது.



கன்னிமாரா பொது நூலகம்

கன்னிமாரா பொது நூலகத்தில் இலக்கியம், வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த 8,35,980 புத்தகங்கள் உள்ளன. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாக செயல்பட்டுவரும் இந்நூலகத்திற்கு, நூல்கள் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) விநியோகச் சட்டம் 1954-இன்படி இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள்,

செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியானது இலவசமாகப் பெறப்படுவதன் காரணமாக, அதனை வாசிக்கும் ஆர்வமுடைய வாசகர்களின் வருகையானது இன்றளவும் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

நூலகச் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப் பட்டுள்ளதால் இந்நூலகத்தைப் பயன்படுத்தும் பொது மக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்து வருகிறது. 2016-17-ஆம் ஆண்டில் 5,86,012 வாசகர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும், 2016-17-ஆம் ஆண்டில் 3,02,053 நூல்கள் இரவலாக வழங்கப்பட்டு, மொத்தம் 38,18,125 நூல்கள் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. கன்னிமாரா பொது நூலகத்தில் அரிய நூல்கள் பிரிவு, நுண்படப் பிரிவு, பாடநூல்கள் பிரிவு, பருவ இதழ்கள் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, குடிமைப்பணி கல்வி மையம், குழந்தைகள் பிரிவு ஆகிய பல்வேறு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாசகர் வட்டமானது, நூலக ஆர்வலர்களுக்குத் தேவையான மற்றும் பயனுள்ள பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இந்நூலகத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் www.connemarapubliclibrarychennai.com எனும் இணையத் தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### 7.4.2 அண்ணா நூற்றாண்டு நூலகம்

சென்னை கோட்டூர்புரத்தில் 3.48 இலட்சம் சதுரஅடி பரப்பளவில், ரூ.178.78 கோடி செலவில் கட்டப்பட்ட,

தென்காசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம், 9 தளங்களைக் கொண்டு மாபெரும் வளாகத்தில் அமைந்துள்ளது. இந்நூலகத்தில் அதிநவீன கலையரங்கம், திறந்தவெளி அரங்கம், சிறிய மாநாட்டுக் கூடம், புத்தக வெளியீட்டு அரங்கம், உணவு வளாகம், ஆராய்ச்சியாளர்களுக்கான தங்கும் விடுதி ஆகிய வசதிகளுடன் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.



அண்ணா நூற்றாண்டு நூலகம்

இந்நூலகத்தில் 3,79,286 தலைப்புகளில் 5,70,990 எண்ணிக்கை கொண்ட அனைத்து வகையான நூல்கள் இடம் பெற்றுள்ளன. வாசகர்களின் தேவைக்கேற்ப நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பார்வையற்றோர் பிரிவு, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, பாடநூல் பிரிவு, தமிழ் மற்றும் தென்னிந்திய மொழி நூல்கள் பிரிவு, ஓலைச்சுவடிகள் பிரிவு, போட்டித் தேர்வு பிரிவு, அரிய நூல்கள் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பகுதி ஆகிய

பிரிவுகளுடன் அனைத்து தரப்பினரையும் கவரும் விதமாக இந்நூலகம் அமைந்துள்ளது.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் குழந்தைகள் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் குழந்தைகளுக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.



குழந்தைகள் பிரிவு - அண்ணா நூற்றாண்டு நூலகம்

மேலும், பார்வையற்றோர் பிரிவைப் பயன்படுத்தும் 1,600க்கும் அதிகமான வாசகர்கள் பல்வேறு தரப்பட்ட போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெறும் பொருட்டு, தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்கள் மின்னஞ்சல் வழியாக ஒலி வடிவில் பெறும் வகையிலும், பதிவு செய்யப்பட்ட ஒலி வடிவக் குறிப்புகளும் பார்வையற்றோர் பிரிவில் இடம்பெற்றுள்ளன.

சொந்த நூல் படிக்கும் பிரிவானது, வாசகர்களின் வசதியினைக் கருத்தில் கொண்டு 40 இருக்கைகளிலிருந்து 160 இருக்கைகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அண்ணா

நூற்றாண்டு நூலகத்தினை பயன்படுத்தும் 175-க்கும் மேற்பட்ட வாசகர்கள் பல்வேறு வகைப்பட்ட மாநில மற்றும் மத்திய அரசுப் பணிகளில் தேர்வு பெற்றுள்ளனர்.

இந்நூலகத்திலுள்ள மாநாட்டுக் கூடம், கருத்தரங்கு கூடம், திறந்தவெளி கலையரங்கம் முதலியவற்றில் பொதுப் பணித் துறை நிர்ணயித்த வாடகை வீதத்தில் அரசு விழாக்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், பள்ளி ஆண்டு விழா மற்றும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, தேசிய, மாநில அளவிலான கருத்தரங்குகள், சிறந்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நடத்தும் கருத்தரங்குகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

நாளொன்றுக்கு சராசரியாக 1,200 வாசகர்கள் இந்நூலகத்தினை பயன்படுத்தி வருகின்றனர். இந்நூலகம் குறித்துத் தேவையான அனைத்துத் தகவல்களையும் www.annacentenarylibrary.com என்ற இணையத் தளத்தின் மூலம் நூலக ஆர்வலர்கள் அறிந்து கொள்ளலாம்.

2015-16-ஆம் ஆண்டில், வாசகர்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் உடனடியாகப் பெறுவதற்கு, இந்நூலகத்தில் மின் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சென்னை பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த அரசு கீழ்திசைச் சுவடிகள் நூலகமானது முழுமையாக அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது, இந்நூலகத்திற்கு ரூ.2.00 கோடி மதிப்பில் மருத்துவம், பொறியியல் மற்றும் சட்டம் உட்பட பல்வேறு பிரிவுகளில் 3,594 தலைப்புகளில் நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

வாரந்தோறும் சனிக்கிழமை, "பொன்மாலைப் பொழுது" என்ற தலைப்பில் பல்வேறு சிறந்த துறைகளில் ஆளுமைகளுடனான நிகழ்ச்சிகள் மற்றும் ஞாயிற்றுக் கிழமை தோறும் போட்டித் தேர்விற்குத் தயாராகும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### 7.4.3 மாவட்ட மைய நூலகங்கள்

ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் பொது மக்களின் வாழ்நாள் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட மைய நூலகங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக சேவையாற்றி வருகின்றன. ஒரு மாவட்டத்தின் அனைத்து வகை நூலகங்களுக்குமான புதிய நூல்கள் மாவட்ட மைய நூலகத்தின் வாயிலாகப் பெறப்பட்டு, பகுத்து வழங்கப் படுகின்றன.

### 7.4.4 கிளை நூலகங்கள்

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் மொத்தம் 1,926 கிளை நூலகங்கள் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. இந்நூலகங்கள் புத்தகப் பிரிவு, நாளிதழ் மற்றும் பருவ இதழ் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளன.

பெரும்பாலான நூலகங்களில் இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் வாசகர்கள் பயன்பாட்டின் அடிப்படையில், தாலுகா தலைமையிடங்களில் செயல்பட்டு வரும் 295 கிளை நூலகங்கள் முழு நேர கிளை நூலகங்களாக செயல்படுகின்றன. 2011 முதல் 2016 வரையுள்ள காலகட்டத்தில் 516 மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

### 7.4.5 ஊர்ப்புற நூலகங்கள்

குக்கிராமங்களின் நூலகத் தேவையினை உணர்ந்து, கிராமங்களில் வசிக்கும் பொது மக்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தி, கிராமப்புற மாணவர்களை சிறந்த கல்வியாளர்களாக உருவாக்க ஏற்படுத்தப்பட்ட சீரிய நூலகத் திட்டமே ஊர்ப்புற நூலகத் திட்டமாகும். தமிழகத்தில் 1,914 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 1,157 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.




ஆலம்பாளையம் ஊர்ப்புற நூலகம் - திருப்பூர் மாவட்டம்

### 7.4.6 பகுதி நேர நூலகங்கள்

சிற்றூர்களில் வாழும் பொது மக்களிடையே புத்தக அறிமுகத்தை ஏற்படுத்தி, வாசிப்புத் தன்மையினை வளர்க்கும் விதமாகவும், அன்றாட நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும், 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படுகின்றன. தமிழகத்தில் தற்போது 715 பகுதிநேர நூலகங்கள் மக்கள் சேவையில் மகத்தான பணியினைச் செய்து வருகின்றன.

### 7.4.7 நடமாடும் நூலகங்கள்

மலைப்பிரதேசங்கள் போன்ற நூலக வசதி குறைவாக உள்ள இடங்கள் மற்றும் நூலகத்திற்கு வர இயலாத பொதுமக்களின் அறியாமையினை அகற்றி கல்வி அறிவை வளர்த்திட, தமிழகத்தில் நடமாடும் நூலகம் என்ற புதிய வடிவிலான நூலகம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மேலவாசல் கிராமத்தைச் சேர்ந்த திரு.கனகசபை பிள்ளை என்பவரால் உருவாக்கப்பட்டு, "இந்தியாவின் நூலக அறிவியலின் தந்தை" என்றழைக்கப்படும் முனைவர் எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களால் 1931-இல் தொடங்கப்பட்டது.

இந்நூலகச் சேவையினை விரிவுபடுத்தும் நோக்கில், 2014-15-ஆம் ஆண்டு ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் நூலக வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. தற்போது, தமிழகத்தில் மொத்தம் 14 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன.

### 7.4.8 தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

1535 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, இந்தியாவின் பழம்பெரும் நூலகங்களில் ஒன்றான தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையமானது, மன்னர் சரபோஜி (1798-1832) காலத்தில் அன்னாரது பேராதரவினால் உலகின் தலைசிறந்த நூலகங்களில் ஒன்றாக உருவெடுத்தது. 1918 ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் இந்நூலகம், 1986-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975-இன்படி பதிவு பெற்ற சங்கமாக செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டியம் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சுமார் 47,334 ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. மேலும், இந்நூலகத்தில் கலை, பண்பாடு மற்றும் இலக்கியம் தொடர்பான புத்தகங்கள் மற்றும் சித்திரங்கள் உள்ளன.

இந்நூலகத்தின் வளர்ச்சிக்காகவும், பணியாளர் நலனுக்காகவும் 2013-14-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு இந்நூலகத்திற்கான மானியத்தை ரூ.40.00 இலட்சத்திலிருந்து ரூ.75.00 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது. இந்நூலகத்தினை சர்வேதேச ஆய்வு மையமாக தரம் உயர்த்த 2013-ஆம் ஆண்டில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை

அமைச்சர் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.




சரசுவதி மகால் நூலகம்

இந்நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள தொன்மை வாய்ந்த அரிய நூல்கள் மற்றும் ஓலைச் சுவடிகளை, சாதாரண மக்கள் முதல் ஆராய்ச்சியாளர்கள் வரை பயன்படுத்தும் வகையில், 2014-15 ஆம் ஆண்டில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய நூல்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன.

### 7.4.9 டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

தமிழறிஞர் மற்றும் நூல் ஆராய்ச்சியாளரான டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவாக 1943-ஆம் ஆண்டு இந்நூலகம் தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் தமிழறிஞர்கள் பலர் அன்னாருக்கு எழுதிய 3,000-க்கும்

மேற்பட்ட கடிதங்கள், உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள், 1,832 நூல்கள், 939 ஏட்டுச் சுவடிகள் மற்றும் பல அரிய தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், 1923-ஆம் ஆண்டு முதலான பழைய அரிய அச்சு நூல்கள் மற்றும் கடிதங்கள் ஆகியவை குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2016-17-ஆம் ஆண்டில் இந்நூலகத்திற்கு ரூ.17.30 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

### 7.4.10 மறைமலையடிகள் நூலகம், சென்னை

கன்னிமாரா பொது நூலக வளாகத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வரும் மறைமலையடிகள் நூலகமானது அரிய தமிழ் நூல்களின் களஞ்சியமாக விளங்கி வருகிறது. இந்நூலகத்தில் சங்க இலக்கியம், திருக்குறள், இலக்கண நூல்கள், புராணங்கள், இதழியல், வாழ்க்கை வரலாறு, நாலடியார், திருவாசகம், மொழி பெயர்ப்பிற்கான தமிழ் மூலநூல்கள், 100 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான அரிய அகராதிகள், மருத்துவ நூல்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் என சுமார் 80,000 நூல்கள் உள்ளன.

3,528 உறுப்பினர்களைக் கொண்ட இந்நூலகத்தை ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நூலகப் பராமரிப்பிற்காக ஆண்டு தோறும் ரூபாய் ஒரு இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 7.5 நிதி

### 7.5.1 நூலக நிதி

பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் நூலக வரியே ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948, பிரிவு 12(1)(a)-இன்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கும் சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் புதுப்பித்தல், நூலகங்களுக்குத் தேவையான எழுது பொருட்கள், நுகர் பொருட்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், மேலும் நூலகர்கள், ஊர்புற நூலகர், பகுதிநேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் நூலக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நேரடியாக நூலக நிதியிலிருந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது. 2016-17-ஆம் ஆண்டிற்கான நூலக வரியாக ரூ.74.57 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

### 7.5.2 பொது நிதி

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இன், தமிழ்நாடு பொது நூலகத் திருத்தச் சட்டம் 2001, பிரிவு 14 A மற்றும் தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950 இல் விதி 23-A(1) ஆகியவற்றின்படி, நிதி நிலையில் நலிவடைந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் பொருட்டு ''பொது நிதி'' உருவாக்கப்பட்டு, அதிக வருவாய் உள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நூலக வரி

வசூலில் 20% க்கு மிகாமல் பெறப்படும் பொது நிதியானது, குறைந்த வருவாயில் நலிவுற்ற நிலையில் உள்ள மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவிடப்படுகிறது.

### 7.5.3 இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்

கொல்கொத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மத்திய அரசின் "இராஜா ராம்மோகன் ராய் நூலக" அறக்கட்டளையானது, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வரும் பொது நூலகங்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நூல்கள் வாங்குதல், தளவாடங்கள் வாங்குதல், நூலகர்களுக்கு சிறப்பு பயிற்சியளித்தல், கருத்தரங்கு நடத்துதல், நூலகக் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களில் குழந்தைகள் பிரிவு உருவாக்குதல், 25 / 50 / 75 / 100 ஆண்டுகள் நிறைவடைந்த நூலகங்களுக்கு விழா கொண்டாடுதல் மற்றும் நூலகத்தின் அடிப்படை வசதியினை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கி, பொது நூலகங்களை ஊக்குவித்து வருகிறது.

இவ்வறக்கட்டளையானது ஆண்டுதோறும் இணை மானியமாக ரூ.3.00 கோடி வழங்கி வருகிறது. இத்துடன் தமிழக நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து தனது பங்காக ரூ.3.00 கோடி வழங்குகிறது.

7.6 சாதனைகள்

- **சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான பிரிவு**

  சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

- **மாநில ஆதார வள மையத்தில் நூலகம்**

  சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென சிறப்பு நூலகம் ஒன்று, சென்னையில் மாநில ஆதார வளமையத்தில் 2013-ஆம் ஆண்டு ரூ.17.00 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது.

- **மாதிரி நூலகங்கள்**

  தமிழ்நாட்டில், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட மைய நூலகங்கள் தலா ரூ.50.00 இலட்சம் மதிப்பில் மாதிரி நூலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- **நவீனமயமாக்கப்பட்ட குழந்தைகள் பிரிவு**

  திருச்சிராப்பள்ளி, ஈரோடு, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களில் செயல்பட்டு வரும் சிறுவர் பிரிவுகள் மொத்தம் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

- **நூல்கள் பாதுகாப்பு மையம்**

  ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்காக பழமையான மற்றும் அரியவகை நூல்களை பாதுகாக்கும் பொருட்டு, முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பில் “நூல்கள் பாதுகாப்பு மையம்” உருவாக்கப்பட்டுள்ளது.

- **மின் நூல் படிப்பான்**

  கன்னிமாரா பொது நூலகத்தில் 18 மின் நூல் படிப்பான்கள் மற்றும் 32 மாவட்ட மைய நூலகங்களில் தலா 4 மின் நூல் படிப்பான்கள் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

- **இலவச இணையதள வசதி**

  கன்னிமாரா பொது நூலகம் மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களின் இணையதள வசதியினைப் பயன்படுத்தி, போட்டித் தேர்வுகளுக்கு இலவசமாக விண்ணப்பிக்கும் முறையானது செயல்பட்டு வருகிறது.

- **குடிமைப்பணி கல்வி மையத்தில் போட்டித் தேர்வு பயிற்சிகள்**

  கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், மற்றும் 273 கிளை நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக, கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்ட மைய நூலகங்களிலுள்ள குடிமைப்பணிப் பிரிவிற்கு



போட்டித் தேர்வு பயிற்சி – கரூர்

மாவட்டத்திற்கு ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் தோற்றுவிக்கப்பட்டுள்ள "போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள்" மூலம் 7,002 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

- **மாவட்ட மைய நூலகங்களில் "சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு"**

தமிழ்நாட்டிலுள்ள பொது நூலகங்களைப் பயன்படுத்தி வரும் நகர்ப்புற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், அவர்களுக்குச் சொந்தமான நூல்களை, நூலகங்களில் வைத்து படிப்பதற்கான சூழ்நிலையினை உருவாக்கும் பொருட்டு, முதற்கட்டமாக, சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய 12 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகங்களுக்கு ரூ.2.40 இலட்சம்

மதிப்பில் "சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு, 1,33,512 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

## 7.7 செயல்பாடுகள்

### 7.7.1 நூலகக் கட்டமைப்பு

தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் 4,603 பொது நூலகங்களில் 1,753 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 2,516 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும், 320 நூலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருவதோடு, 14 நடமாடும் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.



மாவட்ட மைய நூலகம் - கன்னியாகுமரி

துறையின் தொலைநோக்கு பார்வையான, "அனைத்து நூலகங்களும் சொந்தக் கட்டடத்தில் செயல்படுத்துதல்" என்ற இலக்குடன், 2016-17-ஆம் ஆண்டில் ரூ.135.73 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், ரூ.22.21 இலட்சம் மதிப்பில் கட்டடங்கள் பராமரிக்கவும் செலவிடப்பட்டுள்ளது.

**7.7.2 கணினிமயமாக்கம்**

மாநில மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளையின் இணை மானிய நிதியுதவியின் அடிப்படையில் இணையதளம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட வசதிகளுடன் பொது நூலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்ட மைய நூலகங்கள் அனைத்தும் இணையதள இணைப்பு வாயிலாக இணைக்கப்பட்டு, அந்நூலகங்களில் உள்ள நூல்கள் பற்றிய தகவல்களை இணையதளம் வாயிலாக பொது மக்கள் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**7.7.3 வாசகர் வட்டம்**

நூலகச் செயல்பாடுகளில் பொதுமக்களின் ஆதரவும், பங்களிப்பும் இருக்கும் வகையில், அனைத்து நூலகங்களிலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்களைக் கொண்டு “வாசகர் வட்டம்” என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.

புதிய நூலகங்கள் உருவாவதற்கும், பொது மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி, நூலகத்தை வாசகர்கள் முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், புத்தகங்களுக்கும் வாசகர்களுக்குமான பிணைப்பினை உறுதிப்படுத்துவதற்கும், பொது நூலகத் துறையுடன்

கைகோர்த்து துணை நிற்கும் வாசகர் வட்டங்கள் வாயிலாக புதிய நூல்கள் மற்றும் படைப்பாளிகள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி, மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கதை சொல்லுதல், வினாடி வினா போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு இன்றியமையாத நிகழ்ச்சிகள் அனைத்து நூலகங்களிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.


வாசிக்க, சுவாசிக்க நிகழ்ச்சி – கரூர் வாசகர் வட்டம்

மேலும், தமிழகத்தில் நூலக இயக்கம் வளர மிகுந்த முனைப்பும், ஈடுபாடும் கொண்ட வாசகர் வட்டத் தலைவர்களை ஊக்குவிக்கும் வகையில், 2014-15-ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று வாசகர் வட்டத் தலைவர்களுக்கு "நூலக ஆர்வலர்" என்ற விருதானது, கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 7.7.4 நூலக உறுப்பினர் மற்றும் புரவலர் சேர்க்கை

மக்களின் தேவைகளை அறிந்து, நூலகச் சேவையினை மென்மேலும் விரிவுபடுத்துவதற்கு, பொது நூலகங்களில் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் சேர்க்கையினை துரிதப்படுத்துவது மிகவும் அத்தியாவசியம் ஆகும். பொது நூலகத் துறையின் தீவிர முயற்சியின் காரணமாக, 2011-12-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை 22,75,705 மற்றும் புரவலர்கள் எண்ணிக்கை 57,609 ஆகும். குறிப்பாக, 2016-17-ஆம் ஆண்டில் 2,92,725 உறுப்பினர்களும் 3,821 புரவலர்களும் மற்றும் 34 பெரும் புரவலர்களும் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

## 7.8. புதிய முயற்சிகள்

### 7.8.1 போட்டித் தேர்வுக்கு தயாராகும் வாசகர்களுக்கான பருவ இதழ்கள்

போட்டித் தேர்விற்குத் தயாராகும் அனைத்து பகுதி வாசகர்களுக்கும் ஒரே மாதிரியான முன்னணி ஆங்கில பருவ இதழ்கள் கிடைக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதி உதவியுடன் ரூ.2 கோடி மதிப்பில் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு 61 பருவ இதழ்களும், 241 முழுநேர கிளை நூலகங்களுக்கு 34 பருவ இதழ்களும் மற்றும் 320 கிளை நூலகங்களுக்கு 19 பருவ இதழ்களும் வாங்கப்பட்டுள்ளன.

### 7.8.2 அச்சு மற்றும் இணைய வழி நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு, தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழக நிதி உதவியுடன் ரூ.1.30 கோடி மதிப்பில் அச்சு மற்றும் இணைய வழியான நூல்கள், தேசிய மற்றும் சர்வதேச பருவ இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள் வாங்கப்பட்டுள்ளன.

## 7.9 விழாக்கள்

### 7.9.1 பொது நூலக தினம்

பல சமூக சீர்திருத்தங்கள் செய்து, கல்வியில் பெருநாட்டம் கொண்ட புகழ்பெற்ற சமூக சீர்திருத்தவாதி இராஜா ராம்மோகன் ராய் அவர்களின் பெருமையினை இவ்வுலகிற்கு உணர்த்தும் வண்ணம், அவர் பிறந்த நாளான மே 22 ஆம் நாளில் தமிழகத்தின் அனைத்து நூலகங்களிலும் “பொது நூலக தினம்” கொண்டாடப்படுகிறது.

### 7.9.2 நூலகர் தினம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இயற்றியவரும், நூலகவியலின் விதிகள் மற்றும் “கோலன் நூற்பகுப்பாக்க முறை”யினை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியவரும், “இந்திய நூலக அறிவியலின் தந்தை” என்று போற்றப் படுபவருமான முனைவர். சீர்காழி இராமாமிருதம் அரங்கநாதன் அவர்களைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில், அவர் பிறந்த நாளான ஆகஸ்டு 12 ஆம் நாள் “நூலகர் தினமாக”

அனைத்து நூலகங்களிலும் மிகவும் பெருமிதத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

### 7.9.3 தேசிய நூலக வார விழா

நமது அன்றாட வாழ்க்கையோடு ஒட்டி, உறவாடும் நூல்களையும், அதனைப் பாதுகாக்கும் நூலகங்களையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், நூலகங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் நவம்பர் 14 ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் வரை "தேசிய நூலக வார விழா" கொண்டாடப்பட்டு வருகிறது.




தேசிய நூலக வார விழா

இவ்விழாவில் இசையரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், விழிப்புணர்வுப் பேரணி, கலை நிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி, கருத்தரங்கம், நூல் அறிமுகங்கள், படைப்பாளிகள் அறிமுகம் போன்ற நிகழ்சிகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

### 7.9.4 உலக புத்தக தினம்

உலக புத்தக தின விழாவானது, ஏப்ரல் 23-ஆம் நாளில் அனைத்து நூலகங்களிலும் கொண்டாடப்படுகிறது. தமிழில் முன்னணி எழுத்தாளர்கள், சாகித்திய அகாதமி மற்றும் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர்கள் இந்நிகழ்ச்சியில் சிறப்பிக்கப் படுகிறார்கள்.

## 7.10 விருதுகள்

### 7.10.1 முனைவர் எஸ். ஆர். அரங்கநாதன் விருது

நூல்களையும், நூலகங்களையும் பாதுகாப்பதோடு, புத்தகங்களையும், வாசகர்களையும் இணைக்கும் பாலமாகவும், முழு மனதுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்றி வரும் நூலகர்களை பாராட்டி, கௌரவிக்கும் வகையில், ஆண்டு தோறும் சிறந்த நூலகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய நூலக வார விழாவில் ரூ.2,000/- பணமுடிப்புடன் வெள்ளிப் பதக்கம் அடங்கிய “முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது” வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 7.10.2 சிறந்த நூலகங்களுக்கு பரிசு

பொது நூலக இயக்ககத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு, அதிக உறுப்பினர் சேர்க்கை, அதிக புரவலர் சேர்க்கை மற்றும் அதிக நன்கொடைகள் (இலவச காலிமனைகள், கட்டடங்கள் மற்றும் தளவாடங்கள்) பெற்று, அர்ப்பணிப்புடன் செயல்படும் மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள் மற்றும் ஊர்ப்புற நூலகங்களுக்கு 2012-13-ஆம்

ஆண்டு முதல் ஆண்டு தோறும் "கேடயங்கள்" வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

### 7.10.3 கொடையாளர் / பெரும்புரவலர் / புரவலர்களுக்குப் பட்டயங்கள்

தமிழகத்திலுள்ள பொது நூலகங்களின் வளர்ச்சியில் பொது மக்களும் பங்குகொள்ளும் வகையில், நூலகங்களுக்கு ரூ.10,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.1,000/- நன்கொடையாக அளிப்பவருக்கு, முறையே கொடையாளர், பெரும் புரவலர் மற்றும் புரவலர் சான்றிதழ் (பட்டயம்) வழங்கப்படுகிறது. இந்த நன்கொடைகள் வங்கிகளில் வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, அதன் வட்டியானது, நூலகங்களுக்கு பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

### 7.11 வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு

2017-18 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், பொது நூலக இயக்ககத்திற்கு ரூ.88.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.12 முடிவுரை

தமிழகத்தில் பொது நூலகங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்த சேவையினை வழங்குவதாலும், குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு, அவர்களது கல்வி மற்றும் பணி முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதல் சேவையை வழங்குவதில் பெரும்பங்காற்றுவதாலும் பொது நூலகங்களின் வளர்ச்சி மிக இன்றியமையாததாகும்.

# 8. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

"ஆசிரியரது தாக்கம் அழிவில்லாதது
அதன் தாக்கம் எந்த எல்லையைத் தொடும் என்பதை
அவராலேயே கணிக்க இயலாது"

- ஹென்றி ஆடம்ஸ்.

## 8.1 அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழகப் பள்ளிக்கல்வித்துறையை இந்தியாவில் முதன்மை இடத்தில் நிலைநிறுத்துவதற்கென கணினிவழிக் கற்றல் எனும் தளத்திலிருந்து மெய்நிகர் வகுப்பறைகள், கருத்துப் பரிமாற்ற அடிப்படையிலான ஆசிரியர் பயிற்சி, கணினிசார் கற்றல் வளங்கள் கொண்ட வகுப்பறை மேம்பாடு போன்ற தொழில்நுட்ப அடிப்படையில், கல்வியை நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து மாணவர்கள் புரிந்து கற்றுக்கொள்ளும் வகையிலான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

## 8.2 குறிக்கோள்கள்

- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகள், கல்வியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்களால்

உருவாக்கப்பட்ட பயிற்சிக் கையேடுகளைத் தொடர்ந்து மதிப்பீடு செய்தல்

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, தகவல் தொழில் நுட்ப தளத்தைப் பயன்படுத்திக் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்தல்
- பொருத்தமான மின்னியல் பாடப் பொருள்களைத் தேவைக்கேற்பவும் வயது நிலைக்கேற்பவும் உருவாக்கி அனைத்து ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்
- கல்விச் செயற்கைக்கோள் வாயிலாக மேலாய்வு செய்யவும், கல்வியாளர்களுடன் இடைவினை புரியவும் தொழில்நுட்ப வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துதல்
- மாநில அளவிலிருந்து ஒன்றிய அளவு வரையிலும் தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையிலும் அனைத்து நிலைகளிலும் தேவைக்கேற்ற பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்துதல்
- கல்விச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தகுதி மற்றும் திறமை வாய்ந்த மனித

வளத்தைக் கண்டறிய, தகவல் தொகுப்பு உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து புதுப்பித்தல்

- தெரிவு செய்யப்பட்டுள்ள மனித வளத்தின் திறன் மேம்பாட்டிற்குக் கணினிவழிக் கற்றல்தளம் மற்றும் ஊடாட்டுப் பலகைகளைப் பயன்படுத்திப் பயிற்சிச் செயல்பாடுகளைக் கொண்டு சேர்த்தல்
- தொலைநோக்கு 2023இன் இலக்கை அடையவும் கணினிவழிக் கற்றல் முறைகளுக்கேற்பத் தொடர்ந்து மாற்றங்களை மேற்கொள்ளவும் கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்களை உருவாக்குதல் மற்றும் மறு சீரமைத்தல்
- அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து தேசிய அடைவு ஆய்வு முடிவுகளை ஆய்வுக்கு உட்படுத்தி, தேசிய அளவில் மாணவர்கள் திறம்படச் செயல்படாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலை மாணவர்களின் கற்றலை மேம்படுத்துதல்
- அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணித்திறன் மேம்படத் தேவையான பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்
- ஆசிரியர்களது புதுமையான கற்றல் கற்பித்தல் உத்திகளை அடையாளங்கண்டு, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவற்றைப் பொது வலைத்தளம் வாயிலாகப் பரவலாக்குதல் மற்றும்

www.youtube.com- SCERT TN CHANNEL இணையத்தளத்தில் அவ்வப்போது தொடர்ந்து பதிவேற்றம் செய்தல்

- மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் தொடர் பள்ளிப் பார்வைகளின் வாயிலாகப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி நிகழ்வுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்கு உதவுதல்
- கல்வி ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றின் அடிப்படையில் குழந்தைகள் நலனுக்கேற்ற கொள்கைகளை வகுக்க அரசுக்குத் துணைபுரிதல்
- தரமான கல்வியை வழங்கிட சர்வதேச, தேசிய அமைப்புகளான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியம், தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகப் பல்கலைக்கழகம், கலை மற்றும் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மைய நிறுவனம் - புதுதில்லி, மண்டல ஆசிரியர் கல்வி நிறுவனம் - மைசூரு, மண்டல ஆங்கில நிறுவனம் தென்னிந்தியா, பெங்களூரு மற்றும் பிற அரசு நிறுவனங்களுடன் இணைந்து கல்விசார் தேவைகளை நிறைவு செய்யத் தேவையான ஆதரவைப் பெறுதல்

## 8.3 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மறுசீரமைப்பு

தரம் உயர்த்தப்பட்ட "மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 1.96 கோடி செலவில் 9 புதிய துறைகள் அமைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் தேவைகளுக்கும், சமூக மாற்றங்களுக்கும் ஏற்ப தரமான பாடநூல்களை உருவாக்கிச் சீரமைத்து, பணிமுன்/பணியிடைப் பயிற்சிகள் வாயிலாக ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தி, மாநில மற்றும் மாவட்ட அளவிலான கல்விசார் சிக்கல்களை உடனுக்குடன் ஆய்வு செய்து பொருத்தமான முடிவுகளைக் காலதாமதமின்றிச் செயல்படுத்த ஏதுவாகத் தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை, கணிதத்துறை, அறிவியல் துறை, சமூக அறிவியல் துறை, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் துறை, திட்டமிடல் மற்றும் மேலாண்மைத் துறை, கலைத் திட்டம் மற்றும் மதிப்பீட்டுத் துறை, கல்வித் தொழில்நுட்பத் துறை என்னும் 9 துறைகள் அமைக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர் கல்வித் தரத்தினை உயர்த்திடவும், ஆசிரியர்களுக்கான பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகளைத் திட்டமிடவும், அரசின் புதிய கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தவும், பள்ளிக்கல்வி, தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சியின் பாடத்திட்டம் மற்றும் பாடநூல்

சீரமைப்புகளை மேற்கொள்ளவும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பரிந்துரைக்கப்பட்ட பணியிடங்கள், நேரடி நியமனம் மற்றும் பணிநிரவல் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின்கீழ் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப் பட்ட முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர் மற்றும் இளநிலை விரிவுரையாளர் உள்ளிட்ட 109 கல்வியாளர்கள் 01.04.2017அன்று பணியமர்த்தப்பட்டனர்.

**8.4 தரமான பணிமுன் பயிற்சி**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பயிற்சி ஆசிரியர்களது கற்பித்தல் ஆற்றலை மேம்படுத்தும் வண்ணம், தொழில்நுட்பம் உட்புகுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பயிற்சி ஆசிரியர்கள், கற்பித்தல் வழிமுறைகளில் நிகழ்ந்துவரும் மாற்றங்களையும், குழந்தை மைய அணுகுமுறைகளையும், கணினிமயக் கற்றல் சூழலையும் திறமையாகக் கையாளும் வகையில் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

பயிற்சி ஆசிரியர்களை வாழ்வியல் திறன்களான உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு மற்றும் யோகா பயிற்சிகளில் ஈடுபடச்செய்தல் மூலம் அவர்களின் உடல் செயல்பாடுகளை

வளர்க்க வழிவகை செய்யப்படுகிறது. மேலும், தூய்மையான சுற்றுப்புறம் சார்ந்த செயல்பாடுகளை நடத்த ஏற்பாடு செய்வதன் வாயிலாகப் பசுமையான மற்றும் சுத்தமான வளாகத்தைத் தங்களது நிறுவனத்தில் உருவாக்கிட பயிற்சி ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அறிவியல் வாரம் கொண்டாடுவதால் பயிற்சி ஆசிரியர்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் புதுமையான அறிவியல் கற்பித்தல் வழிமுறைகளை அறிந்து கொள்கின்றனர். இது, பயிற்சி ஆசிரியர்களின் அறிவியல் மனப்பான்மையையும் மேம்படுத்துகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ், தமிழ்நாட்டில் 32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், 7 ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், 9 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், 34 அரசுதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 321 தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் என மொத்தம் 403 ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் தொடக்கக்கல்விப் பட்டயப் படிப்பை வழங்கி வருகின்றன.

### 8.5 ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 2013-14ஆம் ஆண்டு முதல், முதலாமாண்டு தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இணையவழி ஒற்றைச்சாளர முறை மாணவர் சேர்க்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்நடைமுறை, மாணவர்கள்

எளிதாகத் தங்கள் மாவட்டங்களில் உள்ள கலந்தாய்வு மையங்களுக்குச் சென்று தாங்கள் பயில விரும்பும் நிறுவனத்தைத் தாமே தேர்ந்தெடுக்க வாய்ப்பளிக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் இப்புதுமையான நடைமுறையின் வாயிலாக இதுவரை 10,000 மாணவர்கள் சேர்க்கை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

## 8.6 கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் மறுசீரமைப்பு

சமூக மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்கள், வாழ்க்கையை எதிர்கொள்ள கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் அவ்வப்போது மாற்றம் செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு 21ஆம் நூற்றாண்டில் மாணவர்களுக்குத் தேவையான திறன்களை வளர்க்கவும், வாழ்க்கைச் சூழலில் தாக்கம் விளைவிக்கும் புதிய தொழில் நுட்ப மாற்றங்களை அவர்கள் அறியச் செய்யவும், சமுதாயத்தை மனவுறுதியுடன் எதிர்கொள்ளத் தேவையான மதிப்புகளையும் திறன்களையும் அவர்களிடம் மேம்படுத்தவும், 1 முதல் 12 வரையிலான வகுப்புகளின் கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை மூன்று ஆண்டு காலத்தில் படிப்படியாக வடிவமைப்பதற்கான அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இம்மாற்றங்கள் கீழ்கண்டுள்ளவாறு மூன்றாண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

**பாடத்திட்ட மாற்றம்**

| ஆண்டு | வகுப்புகள் |
|---|---|
| 2018 -19 | 1, 6, 9,11 |
| 2019 - 20 | 2,7,10,12 |
| 2020 - 21 | 3,4,5,8 |

### 8.7 கல்விச் செயற்கைக்கோள் (EDUSAT)

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது 2016-17ஆம் கல்வியாண்டிலிருந்து 32 மாவட்டங்களில் உள்ள 58 மையங்களுக்குக் கல்விச் செயற்கைக்கோள் வழியாக காணொலிக் கலந்துரையாடல் முறையில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு யோகா, குழந்தை உரிமைகள், பாடத்துடன் நற்பண்புகளை இணைத்துக் கற்பித்தலும் கற்றலும், வாழ்வியல் திறன்கள், ஆளுமைத் திறன் மேம்பாடு, பணிமுன் பயிற்சி, ஆங்கிலத்தில் தகவல் தொடர்புத் திறனை வளர்த்தல், பட உட்கிரகிப்புச் செயலித் தொழில்நுட்பம் (IRAT), பேரிடர் மேலாண்மை, வாராந்திர ஃபோலிக் அமிலம் அடங்கிய இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டம் (WIFS), தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை பயிற்சித் தாள்கள் உருவாக்குதல் மற்றும் மென்திறன் பயிற்சி போன்ற தனித்துவமான பயிற்சிகளை மாதத்தில் 15 நாள்கள், மூன்று மணி நேரம் வீதம் வழங்கி வருகிறது. இதுவரை 1700 பயிற்சி ஆசிரியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

கூடுதலாக, அனைவருக்கும் கல்வித் திட்டமானது பல்வேறு பயிற்சிக் கருத்துகளைக் கருத்தாளர்கள் பயனடையும் வகையில் கல்விச் செயற்கைக்கோள் வழியாக அளித்து வருகின்றது. இப்பயிற்சிகளினால் 2500 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன மாணவர்கள், 160 விரிவுரையாளர்கள், கல்வி அலுவலர்கள், ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

### 8.8 மெய்நிகர் வகுப்பறைகள்

தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒருங்கிணைந்த இணையவழிக்கல்வி, 2016-17ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 770 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் மெய்நிகர் வகுப்பறைகள் மூலம் இணையவழிக்கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் ஒரே நேரத்தில் சிறந்த வல்லுநர், ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் பாடங்கள் குக்கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கும் சென்று சேர்கின்றன. இதன்வழியாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 8.9 பாடநூல்களை மின்மயமாக்குதல்

தமிழக அரசு, தொழில் நுட்ப உதவியுடன் தரமான கல்வியைச் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளும் தடையின்றிப் பெறவேண்டும் என்ற கொள்கையை முன்னிறுத்திச் செயல்பட்டு வருகிறது. மின்னியப் பதிப்புகளாக மாற்றப்பட்ட பத்தாம் வகுப்புப் பாடநூல்களின் பயன்பாடு 01.04.2017 முதல் அறிமுகப்படுத்தப் பட்டது.

### 8.10 பள்ளிப் பாடநூல்களை ஒலி இணைக்கப்பட்ட மின்னியப் பாடநூல்களாக உருவாக்குதல் (DAISY - Digital Accessible Information SYstem)

சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களுக்கு (பார்வையற்ற) உதவும் வகையில் பள்ளிப் பாடநூல்களை ஒலி இணைக்கப்பட்ட மின்னியப் பாடநூல்களாக உருவாக்கும் பொருட்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் டெய்சி என்னும் மின்னிய (டிஜிட்டல்) ஒலிக் கருவியைப் பயன்படுத்தும் பார்வையற்றோர் பள்ளிகளைச் சேர்ந்த முதல்வர்கள், ஆசிரியர்களை ஒருங்கிணைத்துக் கூட்டம் நடத்தப்பட்டது.

அதில் பெற்ற கருத்துகளின் அடிப்படையில் தனிநபர் பயன்பாட்டிற்கு ஏற்ற பாடப்பொருளை முன், பின்னாகவும் குறிப்பிட்ட இடத்திலிருந்தும் தொடர்ந்தும் படித்துக் காட்டும் சாதனம், பார்வையற்றோர் மட்டுமல்லாது, கற்றல் குறைபாடு உடையோர், எழுத, படிக்கச் சிரமப்படுவோர், மூளைத் தண்டுவடப் பாதிப்பு உடையோர், மதி இறுக்கமுடையோருக்குப்

பயனுடையதாக அமையும் எனக் கண்டறியப்பட்டது. டெய்சி மென்பொருள் (DAISY Software) இணைக்கப்பட்ட இக்கருவி, ஆங்கிலப் பாடப்பொருளைப் படித்துக் காட்டும் வகையில் மட்டுமே இயங்கி வருகிறது. இது தற்போது தமிழ் பாடப்பொருளைப் படித்துக் காட்டுவதற்கான வசதிகளை இணைத்து மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில், சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களுக்குப் (பார்வையற்ற) பயன்படும் வகையில் பாடப்புத்தகங்களை ஒலிவடிவப் பாடநூல்களாக்குவதற்கான பயிற்சி, நடைமுறையில் உள்ள தமிழகப் பள்ளிப் பாடப் புத்தகங்களை வடிவமைத்த வடிவமைப்பாளர்கள், பாடப்புத்தக ஆசிரியர்கள், கல்வியாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. இவ்வாறான ஒலி வடிவப் புத்தகங்களினால் பார்வையற்ற மாணவர்கள் மட்டுமின்றி கற்றலில் குறைபாடு உடைய மாணவர்களும் பயனடைவர்.

### 8.11 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணையதளப் பதிவேற்றங்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், SCERT TN CHANNEL வலைப்பக்கத்தில் www.youtube.com இணையதள முகவரியில் மாவட்டங்களில் மிகச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆசிரியர்களது புதுமையான பயிற்றுவிக்கும் முறைகளைக் காணொலிக் காட்சிகளாகப் பதிவேற்றம் செய்துள்ளது. மேலும், அறிவியல் ஆர்வமூட்டும் காணொலிக் குறுங்காட்சிகள் நானூறினைத் தமிழில் இருந்து

ஆங்கிலத்திற்கு மொழியாக்கம் செய்து பதிவேற்றம் செய்துள்ளது. 145 அறிவியல் மின்னியப் பாடங்கள் தற்போதைய பத்தாம் வகுப்பு அறிவியல் பாடங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுக் காணொலிகளாகப் பதிவேற்றப் பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவனின் உள்ளங்கையிலும் தொழில் நுட்பத்தைக் கொண்டு வருவதற்கான மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முயற்சியில் 'படஉட்கிரகிப்புச் செயலித் தொழில்நுட்பம்' ஒரு மைல்கல் ஆகும். அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்களை உட்படுத்தி இருநூறு அறிவியல் ஆய்வுகள் காணொலிகளாகப் பதிவு செய்யப்பட்டு, அவை பாட வல்லுநர்களால் ஆய்வு செய்யப் பட்டுள்ளன. மாணவர்களே செய்து காட்டும் இந்த அறிவியல் ஆய்வுகள், சக மாணவர்களைத் தாங்களே பள்ளிகளில் ஆய்வுகளைச் செய்ய ஊக்கப்படுத்தும்.

1 முதல் 5 வகுப்பு வரையிலான தமிழ்ப்பாட நூல்களில் இடம்பெற்றுள்ள 40 பாடல்களுக்கென உருவாக்கப்பட்ட காணொலிகளை இதுவரை உலகெங்கிலும் இருந்து 4 இலட்சம் பேர் கண்டு மகிழ்ந்துள்ளனர். இவை "தாயெனப்படுவது தமிழ்" என்னும் பெயரில் குறுந்தகடாக 35,000 அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் 950 கல்விக் காணொலிகள் உருவாக்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 8.12 சைகையுடன் கூடிய ஒலிப்பு முறை

தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழ் எழுத்துகளை முறையாக ஒலித்துப் பழக, சைகையுடன் கூடிய ஒலிப்பு முறையில் காணொலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. எழுத்துகளைப் பார்த்தும், உடலை அசைத்தும், உச்சரித்தும், கேட்டும், உணர்ந்தும் ஐம்புலன்களை ஒருங்கிணைத்துக் கற்றுக் கொடுப்பதை வலுவூட்டுவதாக இக்காணொலிகள் அமைய உள்ளன. இசையுடன் கூடிய பாடல்கள், பாரம்பரியக் கலைகள், பண்பாட்டுக்கூறுகளை உள்ளடக்கியதாக இக்காணொலிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நாபிறழ், நாநெகிழ் பயிற்சிக்கு மாணவர் பட்டிமன்றம், மயங்கொலி எழுத்துகள் ஒலிப்புப் பயிற்சிக்கு மாவட்டக் கலைப்போட்டி முதலான நிகழ்வுகளை உருவாக்கித் தமிழகப் பள்ளிகளில் பணிபுரியும் 500க்கும் மேற்பட்ட அரசு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் 2000க்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவர்களின் பங்கேற்புடன் காணொலிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் படிக்கத் தொடங்கும் எந்நாட்டவரும் 30 நாள்களில் தமிழ் எழுத்துகளை உச்சரிக்க, படிக்க அறிந்துகொள்ளும் வகையில் இக்காணொலிகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றன.

## 8.13 மேற்படிப்பு மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த வழிகாட்டுதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில அளவிலான மேற்படிப்பு மற்றும் வேலை

வாய்ப்புகள் குறித்த வழிகாட்டுதல் பணிமனையினை வல்லுநர்கள் மற்றும் நிறுவனக் கல்வியாளர்களைக் கொண்டு நடத்தி வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தொழில்முறை சார்ந்த முன்னேற்றங்களைப் பெறுவதற்கும் பொருத்தமான உயர் கல்வியினைத் தேர்ந்தெடுப்பதற்கும் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, இவ்விடைவெளிகளைக் குறைக்க உயர்கல்வி வாய்ப்புகள் சார்ந்த புதிய தகவல்களை மாணவர்கள் பெறுவதற்குமான வழிகாட்டல் நிகழ்ச்சி மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியானது பல்வேறு உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் அவற்றின் எதிர்காலம் பற்றி மாணவர்கள் அறிந்து தங்களுக்குப் பொருத்தமான உயர்கல்வியினைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையில் 3 இலட்சம் கையேடுகள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பு மற்றும் தொழிலாளர் நலத்துறை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குத் தனித்தனியே உயர்கல்வி வாய்ப்புகள் குறித்த முழுமையான தகவல்கள் அடங்கிய வழிகாட்டிக் கையேடுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வழங்கியது. நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களின் கலந்துரையாடல்கள் அடிப்படையில் மாணவர்கள் சார்ந்த விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் 15 இலட்சம் மாணவர்கள் நேரடியாகப் பயனடைந்துள்ளனர்.

**8.14 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு பயிற்சித் தாள்கள்**

மாணவர்கள் பாடப்பொருளினைப் புரிந்து கொண்டு படிக்கவும், சிந்தனைத் திறனை வளர்க்கும் ஆற்றலைப் பெறுவதற்கும், 1 முதல் 10 வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களிலும் பயிற்சித் தாள்கள் தயாரிக்கப்பட்டு தொடக்கக்கல்வித் துறைக்கும் பள்ளிக் கல்வித் துறைக்கும் மாணவர்கள் பயன்பாட்டிற்கென மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்கி வருகிறது.

**8.15 ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சி**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் ஆசிரியபர் பயிற்சி நிறுவனங்களில் இரண்டாம் ஆண்டு பயிலும் சுமார் 2500 மாணவர்களை ஆசிரியர் தகுதித் தேர்வுக்குத் தயார்படுத்தும் வகையில் பயிற்சியும் மாதிரித் தகுதித் தேர்வுகளும் நடத்தப்பட்டன. மேலும், மாணவ ஆசிரியர்கள் தமக்கு விருப்பமான நேரத்தில் இணையத்தின் வாயிலாக மாதிரித் தேர்வுகளை எழுதி தமது அடைவு நிலையைத் தாமே சோதித்து மேம்படுத்திக் கொள்ளும் வகையில் மாதிரி வினாத்தாள்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 8.16 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி

பாடப்பொருள் அறிவினை மேம்படுத்தவும் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கான உத்திகளை வகுக்கவும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ், ஆங்கிலம், கணக்கு, இயற்பியல், வேதியியல், உயிரி தாவரவியல், உயிரி விலங்கியல், வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளியல், வரலாறு, கணினி அறிவியல் ஆகிய பாட ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2016-17ஆம் கல்வியாண்டில் 28,800 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 8.17 செயல்திட்ட வழிக் கற்றல் பயிற்சி (Project Based Learning)

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையை வலுப்படுத்தும் நோக்கில் தொடக்க, நடுநிலைப் பள்ளி நிலை ஆசிரியர்களுக்குச் செயல்திட்ட வழிக்கற்றல் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்குத் தொடக்க, நடுநிலை அடிப்படையில் வகுப்பு மற்றும் பாடவாரியாக மொத்தம் 10 கையேடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மாநில, மாவட்ட அளவில் பயிற்சிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு பள்ளிக்கும் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தேடிக் கற்றுக் கொள்ளும் திறனை வளர்க்கும் வகையிலான 500 செயல்திட்டங்கள் இதில் வடிவமைக்கப்பட்டிருந்தன. 1.2 இலட்சம் ஆசிரியர்கள் தங்கள்

தொழில்முறைத் திறனை வளர்த்துக் கொள்ளவும் 40இலட்சம் மாணவர்களிடம் கண்டறிந்து கற்றல் திறனை வளர்க்கவும் இப்பயிற்சி உதவியது.

## 8.18 நிருவாகத் திறன் பயிற்சி

பதவி உயர்வு பெற்ற உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கான நிருவாகத்திறன் மற்றும் கல்வி சார் மேற்பார்வை குறித்த இரண்டு நாள் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியினைப் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்கள் இணைந்து வழங்கினர். இப்பயிற்சி மூலம் 85 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கணக்குப் பதிவுகள், நீதிமன்ற வழக்குகள், அலுவலக நிருவாகம், வகுப்பறை மேற்பார்வை, பள்ளிப்பார்வை, கணக்காய்வு, அரசு நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற தலைப்புகளில் கருத்துவளம் பெற்றனர்.

## 8.19 ஆராய்ச்சிப் புலத்தின் செயல்பாடுகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அளவுசார் ஆய்வுகளில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதை, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த மீளாய்வு இயக்க உறுப்பினர்கள் பாராட்டியுள்ளனர். வருங்காலத்தில் தரநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது குறித்து இரண்டு நாள் பணிமனை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி

நிறுவனக் கல்வியாளர்களுக்கு நடத்தப்பட்டது. பணிமனையில் இந்தியா மற்றும் மேலைநாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு தனியாள் ஆய்வுகள் குறித்து விளக்கமாக விவாதிக்கப்பட்டன. ஆய்வுக்குரிய பிரச்சினைகளைக் கண்டறியவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பணிமனையின் வாயிலாக 64 கல்வியாளர்கள் தரநிலை ஆய்வுகள் குறித்த ஆழ்ந்த அறிவைப் பெற்றுள்ளனர்.

**8.20 பள்ளித்தரம் மற்றும் மதிப்பீடு**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளித்தர மேம்பாட்டிற்கான திட்டவரைவினைத் தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது. இத்திட்டவரைவு, வேறுபட்ட புவியியல் பகுதிகளான திருச்சிராப்பள்ளி, சேலம், திருவண்ணாமலை, தூத்துக்குடி மாவட்டங்களில் 40 பள்ளிகளில் கள ஆய்வு செய்யப்பட்டது. அப்பள்ளிகளைச் சார்ந்த தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளிகளுக்குரிய மேம்பாட்டுத் திட்டங்களையும், பள்ளி அடைய வேண்டிய எதிர்கால இலக்குகளையும் நிர்ணயித்தனர். இனங் காணப்பட்ட நிலைகளில் படிப்படியான முன்னேற்றத்தினை இப்பள்ளிகள் அடைந்துள்ளன.

இந்த ஆண்டில் இந்தப் பள்ளித்தரம் மற்றும் மதிப்பீட்டை அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தத் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாண்டு முதல் ஒவ்வொரு

பள்ளியும் பிற நிறுவனங்களுடன் இணைந்து தம்மைத் தாமே மதிப்பிடும் திறனைப் பெறும்.

### 8.21 பிற நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் செயல்பாடுகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் கல்வித் திட்டத்துடன் இணைந்து தொடக்க, உயர் தொடக்க வகுப்பு ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. தகுதி வாய்ந்த வல்லுநர்களையும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களையும், ஆசிரியர்களையும் தெரிவுசெய்து செயல்பாடுகளுடன் கூடிய பயிற்சிக் கையேடுகளை வடிவமைத்து வருகிறது. வட்டார வள மையம், குறுவள மையங்களுக்கான பல்வேறு பயிற்சிகள் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

வட்டாரவள மையத்தில் வழங்கப்பட்ட அறிவியல் கற்பித்தலில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல் பயிற்சியில் 18,911 ஆசிரியர்கள், தமிழ் இலக்கணம் கற்பித்தல் பயிற்சியில் 17,338 ஆசிரியர்கள், கணித உபகரணங்களைப் பயன்படுத்துதல் பயிற்சியில் 19,207 ஆசிரியர்கள், வரைபடத் திறன்களில் வரலாற்றுப் பாடத்தைப் புரிந்துக்கொள்ளுதல் பயிற்சியில் 15,389 ஆசிரியர்கள், ஆங்கிலம் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல் பயிற்சியில் 17,447 ஆசிரியர்கள் உயர் தொடக்க நிலையில் பயனடைந்துள்ளனர்.

குறுவள மையத்தில் வழங்கப்பட்ட கணிதத் திறனை மேம்படுத்தும் பயிற்சியில் 66,870 ஆசிரியர்கள், அறிவியல் கற்பித்தலில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியில் 52,403 ஆசிரியர்கள், தமிழ் படித்தல், எழுதுதல் திறனை மேம்படுத்துதல் பயிற்சியில் 63,851 ஆசிரியர்கள், ஆங்கிலம் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல் பயிற்சியில் 28,576 ஆசிரியர்கள், எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றலில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை மேம்படுத்துதல் பயிற்சியில் 2,10,867 ஆசிரியர்கள், வரைதல் மற்றும் கையெழுத்துத் திறனை மேம்படுத்துதல் பயிற்சியில் 1,06,326 ஆசிரியர்கள், பொம்மலாட்டம் மற்றும் கதை கூறுதல் வழி மதிப்புக் கல்வி அளித்தல் பயிற்சியில் 1,04,934 ஆசிரியர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த பயிற்சியில் 1,05,218 ஆசிரியர்கள், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு மற்றும் சாலைப் பாதுகாப்பை உடற்கல்வியுடன் இணைத்தல் பயிற்சியில் 95,694 ஆசிரியர்கள் தொடக்க நிலையில் பயனடைந்துள்ளர்.

குறுவள மையத்தில் வழங்கப்பட்ட படைப்பாற்றல் கல்வியில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை மேம்படுத்தும் பயிற்சியில் 74,561 ஆசிரியர்கள், வரைபடம் மற்றும் கையெழுத்துத் திறனை மேம்படுத்தும் பயிற்சியில் 75,462 ஆசிரியர்கள், போட்டித் தேர்வுகளுக்கு ஆயத்தப் படுத்தும் பயிற்சியில் 74,557 ஆசிரியர்கள், குழந்தைகளின் கற்றல் அடைவுத்திறன் குறித்துக் கலந்துரையாடும் வகையில்

வழங்கப்பட்ட பயிற்சியில் 75,152 ஆசிரியர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் குறித்த பயிற்சியில் 73,863 ஆசிரியர்கள், மனஅழுத்த மேலாண்மை மற்றும் வளரிளம் பருவம் குறித்த பயிற்சியில் 67,824 ஆசிரியர்கள் உயர் தொடக்க நிலையில் பயனடைந்துள்ளனர்.

## 8.22 பாடத்துடன் நற்பண்புகளை இணைத்துக் கற்பித்தலும் கற்றலும்

கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10ஆம் வகுப்பு மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களுக்குப் பாடத்துடன் நற்பண்புகளை இணைத்துக் கற்பித்தலும் கற்றலும் என்ற பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே ஒழுக்க நெறியைப் வளர்க்கவும் விழுமியங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் கற்ற விழுமியங்களை வாழ்க்கைச் சூழல்களில் பயன்படுத்தவும் ஏறத்தாழ 100 விழுமியங்களை இனங்கண்டு அவற்றைப் பாடப்பொருளோடு இணைத்துக் கற்பிக்க பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி, 10,000 நடுநிலைப் பள்ளிகளிலும், 8,700 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் பணிபுரியும் 40,000 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் 45 இலட்சம் மாணவர்கள் நேரடியாகப் பயன்பெற்றுள்ளனர்.

## 8.23 நன்னெறிக் கல்விப் பாடத்திட்டம் மறுவடிவமைப்பு

அரசு, தமிழ் நீதிநூலான திருக்குறளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட அதிகாரங்களை ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையுள்ள பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கு, ஆணை வழங்கியுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இதற்கென வல்லுநர்குழு அமைக்கப்பட்டது. ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்ப்பதற்கென குறள் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு நன்னெறிக் கல்விப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அறத்துப்பால் மற்றும் பொருட்பாலில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 105 அதிகாரங்கள் 6 முதல் 12ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

## 8.24 தென் கொரியா மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையே கல்வி மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம்

தென்கொரிய கல்வி மற்றும் கலாச்சார ஆய்வு நிறுவனம், தமிழகத்தின் கல்வி, கலாச்சார மாண்புகள் தென்கொரியாவுடன் இணைந்திருப்பதைக் கண்டு, தமிழகமும் தென்கொரிய அரசின் கல்வித்துறையும், கலாச்சாரம் மற்றும் கல்விப் பரிமாற்றம் செய்வதற்கான கருத்தரங்கினை நடத்தியது. இக்கருத்தரங்கில் தமிழ், தென்கொரிய மொழிகளுக்கிடையே உள்ள மொழியின் தொன்மை மற்றும் செறிவு குறித்து தென்கொரிய ஆய்வாளர்களும், தென்கொரியாவிற்கும்,

தமிழகத்திற்கும் உள்ள நீண்டகாலக் கலாச்சாரப் பிணைப்பு குறித்து தமிழகக் கல்வியாளர்களும் கருத்துகளை வழங்கினர். பன்னாட்டு அடைவுத் தேர்வுகளில் முதல் ஐந்து இடங்களுள் தென்கொரியா தொடர்ந்து நீடிப்பதால் தமிழகம், தென்கொரிய கல்வி மற்றும் கலாச்சாரப் பகிர்வு, தமிழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் நன்மை பயக்கும்.

## 8.25 சிங்கப்பூர் தமிழாசிரியர்களுடனான கல்விக் கலந்துரையாடல்

தமிழக மாவட்டங்களில் தமிழ்மொழி கற்றல் சார்ந்த தகவல் தொழில் நுட்ப முன்முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல், சிங்கப்பூர் அமைச்சகக் கல்வியாளர் மற்றும் முதன்மை ஆசிரியர்களுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழ்மொழி கற்றல் கற்பித்தல், ஆசிரியர் கல்விக் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம், மதிப்பீடு சார்ந்த செயல்பாடுகள், சிங்கப்பூர் நாட்டில் செயல்படுத்தப்படும் கலைத்திட்ட மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பு, ஆசிரியர் நியமனங்கள், பதவி உயர்வு போன்ற செயல்பாடுகள் குறித்த செய்திகள் கலந்துரையாடப்பட்டன.

தமிழகக் கல்வித்துறையின் தரத்தினை மதிப்பிடவும் உயர்த்தவும் இவ்வாறான ஒப்பீடுகள் உதவும் என்ற வகையில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், ஆசிரியர்கள் இக்கருத்துப் பகிர்வில் பங்கேற்றனர்.

**8.26 ஆங்கிலப் பாடநூல்களில் இலக்கணப் பயிற்சித் தாள்களை இணைத்தல்**

மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்த மூன்று முதல் எட்டு வகுப்புகள் வரை ஆங்கிலப் பாடப்புத்தகங்களுடன் இலக்கணப் பயிற்சித்தாள்களை இணைத்து, இந்தக் கல்வியாண்டு முதல் அளிக்கப்பட உள்ளன. இலக்கணப் பயிற்சித்தாள்கள் இணைக்கப்பட்ட பாடநூல்கள் 01.04.2017 அன்று வெளியிடப்பட்டன. இவை மாணவர்களின் ஆங்கில இலக்கண அறிவை மேம்படுத்தி நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்த உதவும்.

**8.27 பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்புத் திட்டம்**

வகுப்பு ஏழு முதல் பத்து வரை சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் பேரிடர் மேலாண்மை சார்ந்த பாடங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பாடங்கள், உலக வங்கிக் குழுவினரின் பரிந்துரைக்கேற்ப புனே-யசதா அமைப்பின் பேரிடர் மேலாண்மை இயக்குநர், மும்பை- ஜேடி டாடா பேரிடர் புலக் கல்வியாளர்கள், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வுப் பணிகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரைக் கொண்டு மீளாய்வு செய்யப்பட்டன. இக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கருத்துகள், அடுத்தடுத்த பாடப்புத்தகச் சீரமைப்புகளின்போது செயல்படுத்தப்படும்.

11, 12ஆம் வகுப்புகளின் தமிழ், ஆங்கிலம் மற்றும் புவியியல் பாடங்களிலும், தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சியில்

சமூக அறிவியல் வளநூல் கற்பித்தல் பாடத்திலும் பேரிடர் மேலாண்மை மற்றும் நிவாரணச் செயல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

வருவாய்த்துறையின் பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்புத் திட்டத்துடன் இணைந்து 4,500 நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகப் பள்ளி மாணவர்களிடையே பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஆறு முதல் பன்னிரண்டு வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 01.04.2017 அன்று பணப்பரிசு, சான்றிதழ், மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 8.28 ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியத்துடன் (யுனிசெப்) ஒருங்கிணைந்து வாராந்திர ஃபோலிக் அமிலம் அடங்கிய இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டத்தைத் (WIFS) தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தி வருகிறது. இதில் அனைத்துப் பள்ளிகளைச் சார்ந்த தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களுக்கு இரத்த சோகையைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

வளரிளம் பருவ மாணவ மாணவியர்களிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை மேம்படுத்தி இரத்தசோகையைத் தடுத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்து அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரைப் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு வாரமும் வியாழனன்று ஃபோலிக் அமிலம் அடங்கிய இரும்புச்சத்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆறு மாதத்திற்கு ஒரு முறை குடற்புழு நீக்க மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 8.29 சேவையும் அங்கீகாரமும்

### 8.29.1 விசாகா விருது

விசாகா என்னும் பெயரில் மாணவர்களுக்கான தேசிய ரொக்கமில்லாப் பணப் பரிமாற்ற கல்வியறிவு முகாம், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே பணப் பரிமாற்றங்களை இயன்ற அளவு குறைத்து ரொக்கமில்லாப் பணப் பரிவர்த்தனைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் மாணவ சமுதாயத்தினரைக் கொண்டு விழிப்புணர்வு அளிக்க இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் கல்வி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டம், டிஜிட்டல் இந்தியா என்னும் தொலைநோக்கினை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தியாவில் சிறப்பாகச் செயல்பட்ட 20 நிறுவனங்கள் பரிசுக்கென தேர்வு செய்யப்பட்டன. இதில்

மாணவர், கல்வியாளர்களின் சிறந்த பணிக்காகத் தமிழ் நாட்டிற்கு 5 பரிசுகள் கிடைத்துள்ளன.

### 8.29.2 நாட்டு நலப்பணித் திட்ட விருது

நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ், வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மேலாக, 100 மணி நேரத்திற்கும் கூடுதலாகச் சமூகப் பணியாற்றியமைக்குக் கிருஷ்ணகிரி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன நாட்டு நலப்பணித் திட்ட அலகிற்குத் தேசிய இளைஞர் தலைமைத்துவ விருதும் ரூ.30,000/- கேட்புக் காசோலையும் முதல் பரிசாக நடுவண் அரசால் வழங்கப்பட்டது.

ரொக்கமில்லா பணப் பரிமாற்றம் சார்ந்து பரப்புரைப் பணி செய்தமைக்கும், 100 மணி நேரத்திற்கும் மேலாகச் சமூகப் பணியாற்றியமைக்கும் ஒட்டன்சத்திரம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன நாட்டுநலப்பணித் திட்ட அலகிற்கு ரூ.25,000/- கேட்புக் காசோலை இரண்டாம் பரிசாக நடுவண் அரசால் வழங்கப்பட்டது.

### 8.30 தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டம்

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன நிதி உதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மக்கள்தொகை கல்வி சார்ந்து, விழிப்புணர்வும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு வளர் இளம் பருவ மாணவர்களின் பிரச்சினை

சார்ந்தும், ஆண் பெண் சமத்துவம் சார்ந்தும், போதைப் பழக்கத்தின் தீமைகள் குறித்தும், HIV பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### 8.31 வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு

2017-18ஆம் நிதியாண்டிற்கு ரூ.63.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.32 முடிவுரை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுமையான உத்திகளான பட உட்கிரகிப்புச் செயலித் தொழில்நுட்பம், பாடப்பொருளைக் கணினி மயமாக்கல், பாடங்களை இருபரிமாண மற்றும் முப்பரிமாண உருவங்களாகவும் காணொலிக் காட்சிகளாகவும் மாற்றுதல் வாயிலாக சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கும் கற்பிக்க ஆசிரியர்களுக்கு உதவுகிறது. மேலும், இந்நிறுவனம் கற்றலில் ஏற்படும் இடைவெளிகளை நீக்கவும் மாணவர்களுக்குப் பல்வேறு கற்றல் வளங்களை அளிக்கவும் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் துணைபுரிந்தும் வருகிறது.

# 9. ஆசிரியர் தேர்வு வாரியம்

"ஆசிரியர்கள் சமுதாயத்தின் சிற்பிகள்"

- பேரறிஞர் அண்ணா

## 9.1 முன்னுரை

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987ல் தரமும், திறமையும் மிக்க ஆசிரியர்களைத் தெரிவு செய்ய உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் பல்வேறு வகையான நியமனமுறைகள் மூலமும் மற்றும் நியமன அலுவலர்களின் தேவைக்கேற்பவும் அரசின் கொள்கை முடிவின்படி பல்வேறு வகையான ஆசிரியர்களைத் தெரிவு செய்து வருகிறது. ஒளியியல் குறியீடு வாசிப்பான் (Optical Mark Reader) வழியில் விடைத்தாள் திருத்தம் மேற்கொள்வதால், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தெரிவுப் பணிகள் வெளிப்படைத் தன்மை உடையது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இதுவரை 1,56,839 பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஆசிரியர் தேர்வு வாரியமானது தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் மாநில இணைப்பு முகமையாகவும் (Nodal Agency) செயல்பட்டு வருகிறது. பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை மற்றும் வழிமுறை பற்றிய விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலக இணையதளம் http://trb.tn.nic.in வழியாக தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகிறது.

## 9.2 குறிக்கோள்கள்

ஆசிரியர் பணிநாடுநர்களின் வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டறிவதும் பணிநாடுநர்களைத்

தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளை மேம்படுத்துவதும் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இதன் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் கீழ்க்கண்ட நடைமுறைத் தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்கிறது

- அனைத்துப் பணித்தேர்வு நடைமுறைகளையும் மின்மயமாக்குதல்
- ஆசிரியரைத் தேர்வு செய்வதற்கான அறிவிக்கை வெளியிடுவதில் தொடங்கி, முடிவுகளைப் பதிவேற்றம் செய்வது வரையுள்ள அனைத்திற்கும் மின் ஆளுமை வளங்களைப் பயன்படுத்துதல்.
- ஒளியியல் குறியீடு வாசிப்பான் (Optical Mark Reader- வழியாக தேர்வர்களின் விடைத்தாட்களை மதிப்பிடுதல்.

**9.3 பணித் தெரிவிற்கான ஆண்டுத்திட்டம்-2017**

ஆசிரியர்களைத் தெரிவு செய்ய ஆசிரியர் தேர்வு வாரியம் பல்வேறு போட்டி எழுத்துத் தேர்வுகளை நடத்தி வருகிறது. பணித் தெரிவிற்கான ஆண்டுத்திட்டம்-2017 கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | காலிப் பணியிட எண்ணி-க்கை | அறிவிக்கை நாள் | தேர்வு நாள் | தேர்வு முடிவு வெளியிடப் படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | முதுகலை ஆசிரியர்கள் | 2119 | மே 2017 2வது வாரம் | 02.07.2017 | ஆக. 2017 |
| 2 | அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் | 1137 | ஜூன் 2017 2வது வாரம் | 13.08.2017 | அக். 2017 |
| 3 | சிறப்பு ஆசிரியர்கள் | 1188 | ஜூலை 2017 3வது வாரம் | 19.08.2017 | நவ. 2017 |
| | வேளாண் பயிற்றுநர்கள் | 25 | ஜூலை 2017 3வது வாரம் | 20.08.2017 | நவ. 2017 |
| 4 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் | 1883 | ஜூலை 2017 4வது வாரம் | நேர்முகத் தேர்வு – செப்டம்பர் 2017 1வது வாரம் | அக். 2017 |
| 5 | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் | 38 | ஆகஸ்ட் 2017 2வது வாரம் | 30.09.2017 | டிச. 2017 |
| மொத்தம் | | 6390 | | | |

முன்கூட்டியே திட்டமிட்டு தேர்வுக்கால அட்டவணைப்படி தேர்வர்கள் போட்டி எழுத்துத்தேர்விற்கு தயார் செய்து கொள்வதற்கு இந்த திட்டம் உதவியாக இருக்கும்.

## 9.4 நம்பகத்தன்மையை மேம்படுத்துதல்

தேர்வு நடைமுறைகளில் உள்ள மந்தனத் தன்மையைக் கருதி முறைகேடான செயல்கள் நடைபெறாமல் உரிய கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிகவும் மந்தனத்தன்மை வாய்ந்த பகுதிகளான வினாத்தாள் பாதுகாப்பு மையங்கள், தேர்வு மையங்கள் மற்றும் தேர்வு அறைகள், பயன்படுத்தப்பட்ட ஒளியியல் குறியீடு வாசிப்பான் விடைத்தாள்களை மின்னணு ஒளிக்கதிர் கொண்டு

கணினி பிரதி செய்யும் அறை ஆகிய அனைத்தும் நெருங்கிச் சுழலும் நிழற்படக் கருவி (Closed Circuit Television-CCTV) மூலம் கண்காணிக்கப்படுவதோடு, அனைத்துச் செயல்களும் வீடியோப் பதிவும் செய்யப்படுகின்றன. தேர்விற்கான அனைத்து மந்தனத் தன்மை வாய்ந்த ஆவணங்களை பாதுகாப்பு மற்றும் கவனத்துடன் கையாளுதல் மற்றும் நேர்மையான முறையில் தேர்வுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிக்கு முன்னுரிமை தரப்படுகிறது.

## 9.5 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தலில் வெளிப்படைத் தன்மை மற்றும் நவீன முறைகளைப் பின்பற்றுதல்

**ஆ**சிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் நடைமுறைகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடனும் துல்லியமாகவும் இருப்பதற்காகப் பல்வேறு நிலைகளில் திருப்திகரமாகக் குறிப்பிடும் வகையில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. முதன் முறையாக ஆசிரியர் தேர்வு வாரியம் இணையவழி விண்ணப்பத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. 2017ஆம் ஆண்டு முதுகலை ஆசிரியர் நேரடி நியமன போட்டித் தேர்விற்கு 2,18,489 விண்ணப்பங்கள் இணையவழி மூலம் பெறப் பட்டுள்ளன. இவ்வசதி எதிர்வரும் அனைத்து பணித் தெரிவுகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

2013-14 ஆம் ஆண்டு முதல், பணிநாடுநர்கள் தங்களது ஒளியியல் குறியீடு வாசிப்பான் விடைத்தாளின் படிவம் மற்றும் மதிப்பெண்களைக் கணினி வாயிலாக நேரடியாகக் கண்டு சரிபார்த்துக் கொள்ளவும் சென்னையில் இவ்வாரிய

அலுவலகத்தின் தகவல் மையத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**9.6 தகவல் மையச் செயல்பாடு**

ஆசிரியர் தேர்வு வாரியத்தில் 2015 ஆம் ஆண்டு முதல், பணிநாடுநர்களுக்கு முழுமையான தகவல்களை வழங்குவதற்காகக் கணினிமயமாக்கப்பட்ட தகவல் மையப் பிரிவு செயல்பட்டு வருகிறது. தங்களது ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்பும் பணிநாடுநர்களுக்கு இத்தகவல் மையம் சிறந்த முறையில் துரிதமாக பணிசெய்து வருகின்றது.

**9.7 சாதனைகள்**

2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியமானது பின்வருமாறு ஆசிரியர்களைத் தெரிவு செய்துள்ளது.

- பள்ளிக் கல்வித் துறை - 40,433
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் - 1259
- உயர்கல்வித் துறை - 1528

**தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009-இன் வழிகாட்டுதல்களின்படி தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்திட மாநில

இணைப்பு முகமையாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2012-ஆம் ஆண்டில் இருந்து ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வு (TNTET) குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | தேர்வின் பெயர் மற்றும் ஆண்டு | தேர்வு எழுதியவர்கள் | தகுதி பெற்றவர்கள் |
|---|---|---|---|
| 1 | TNTET 2012 – முதன்மைத் தேர்வு | 714526 | 2448 |
| 2 | TNTET 2012 - துணைத்தேர்வு | 643095 | 19261 |
| 3 | TNTET- 2013 | 662498 | 72716 |
| 4 | சிறப்பு TNTET -2014 | 4693 | 945 |

### 9.8 2017 ஆம் ஆண்டிற்கான நேரடி நியமனத்திற்கான செயல் திட்டம்

2012, 2013 ஆசிரியர் தகுதித் தேர்வு மற்றும் 2014 சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-2இல் தகுதி பெற்ற பணிநாடுநர் பட்டியலிலிருந்து 286 பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கும், அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் 202 பட்டதாரி ஆசிரியர்களும் (IEDSS) தெரிவு செய்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 9.9 தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு-2017

ஆசிரியர் தேர்வு வாரியம், ஆசிரியர் தகுதி தேர்வு 2017 – தாள்-I யை 29.04.2017-லும் தாள்–II -யை 30.04.2017-லும் நடத்திட அறிவிக்கை செய்து தகுதித்தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

அதில் தாள்-Iக்கு 2,41,555 தேர்வர்களும், தாள்-IIக்கு 5,12,260 தேர்வர்களும் தேர்வு எழுதினார்கள்.

மேற்கண்ட தேர்விற்கான உத்தேச விடைக்குறிப்பு 22.05.2017 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்.

## 9.10 நிதி ஒதுக்கீடு

2017-2018க்கான நிதியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.3.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.11 முடிவுரை

ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் அரசின் முகவாண்மை நிறுவனமாக இயங்கும் ஆசிரியர் தேர்வு வாரியம், அனைத்து ஆசிரியர் காலிப் பணியிடங்களையும் நிரப்பிட இவ் வாரியத்திலுள்ள பணியாளர்களைக் கொண்டும், பயன்பாட்டுத் துறையின் முழு ஒத்துழைப்புடனும் சீரிய முறையில் பணியாற்றி வருகிறது.

## 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

"நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு"

ஔவையார் (மூதுரை)

### 10.1 முன்னுரை

கடந்த 1961 ஆம் ஆண்டு, தமிழ் வளர்ச்சிக்காக, மொழி பெயர்ப்பு மற்றும் அசல் தமிழ் நூல்களை வெளியிடுவதற்காக, "தமிழ் வெளியீட்டுக்கழகம்" என்ற பெயரில் ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1970 ஆம் ஆண்டு தமிழ் வெளியீட்டுக் கழகம் என்ற அமைப்பை உள்ளடக்கிய தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் உருவானது. இந்நிறுவனத்தின் முக்கிய பொறுப்பு இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் பிறதுறை சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல் என்பதாக அமைந்தது. 1961 முதல் 1980 வரை உயர்கல்வி தொடர்பான பல்வேறு தலைப்புகளில் 1016 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் என்பது தமிழ்நாடு பாடநூல் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் பணி விரிவடைந்து 2013ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. அதன்படி கடந்த 2014–2015 ஆம் கல்வி ஆண்டு முதல் விலையில்லா கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்து அரசு மற்றும் அரசு

உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு விநியோகம் செய்யும் பணியினையும் செம்மையாக செய்து வருகின்றது.

### 10.2 குறிக்கோள்

ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி பல்வேறு பாடத் தலைப்புகளில், தேவைக்கேற்ப புத்தகங்களை அச்சிட்டு விநியோகிக்கும் பணியுடன் விலையில்லா கல்வி உபகரணங்களை, கொள்முதல் செய்து வழங்குவதுடன் கல்லூரி மாணாக்கர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் தன்னுடைய பணியை விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் முதல் கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள நூலகங்களுக்கு அரிய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்து அச்சிட்டு வழங்கப்பட உள்ளது. மேலும் உலகளாவிய தமிழ் மக்களைச் சென்றடையும் வகையில், இணையம் அடிப்படையிலான தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குவதில் முனைப்பு காட்டி வருகிறது.

பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம் மற்றும் கால்நடை அறிவியல் போன்ற உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு உதவிடும் வகையில் தமிழில் அப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வெளியீடுகளும் மின்னணு புத்தகப் பதிப்பு வடிவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். +2 படிக்கும் மாணாக்கர்களுக்கு தரமான பொறியியல் மற்றும் மருத்துவ கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வினை

எழுதுவதற்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 10.3 உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், பள்ளிக்கல்வி இயக்கக வளாகத்தில் இயங்கி வருகின்றது. பாடநூல்கள் விற்பனை மற்றும் மாநிலம் முழுவதும் விநியோகப் பணியினை மேற்கொள்ளும் வசதியாக 22 வட்டார கிடங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 6 கிடங்குகள் கழகத்திற்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஏனைய கிடங்குகள் தமிழ்நாடு அரசு / மத்திய அரசுக்குச் சொந்தமான கிடங்குகள் / கூட்டுறவு நிறுவன கிடங்குகள் ஆகியவற்றில் இயங்கி வருகின்றன.

பொதுப்பணித்துறையின் ஈ.வெ.கி. சம்பத் மாளிகையில் உள்ள அலுவலக கட்டிடம் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

### 10.4 கிடங்குகள் நவீன மயமாக்கல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்குச் சொந்தமான சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி கிடங்குகள் ரூ.30 கோடி செலவில் நவீனமயமாக்கப்படும். மேற்கண்ட கிடங்குகளில் Automated Storage and Retrieval System (ASRS) அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 10.5 செயல்பாடுகள்

### 10.5.1 முப்பருவ முறை

2012–2013 ஆம் வருடம் முதல், மாணவர்கள் வருடம் முழுவதும் எதிர்கொள்ளும் புத்தகச் சுமையினை குறைக்கும் பொருட்டு 1 முதல் 9ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்கள் முப்பருவ முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் புத்தகம் அச்சிடும் முறையை மாற்றி 1 முதல் 9ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்கள் முப்பருவ முறையிலும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடநூல்கள் ஆண்டு நூல்களாகவும் அச்சிட்டு வழங்கி வருகிறது.

**பாடநூல்கள் அச்சிடப்பட்ட விவரம்**
**(2016 – 2017)**

| வகுப்பு | விலையில்லாப் பிரதிகள் (கோடியில்) | விற்பனைப் பிரதிகள் (கோடியில்) |
|---|---|---|
| பருவம் I (1-9) | 1.23 | 0.76 |
| பருவம் II (1-9) | 1.20 | 0.67 |
| பருவம் III (1-9) | 1.21 | 0.68 |
| ஆண்டுப் பாடநூல்கள் (வகுப்பு 10-12) | 1.76 | 0.68 |

### 10.5.2 அச்சுப்பணி

தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மை சட்டம், 1998 மற்றும் ஒப்பந்தப் புள்ளி விதிகள், 2000 ஆகியவற்றில் கண்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி 2 ஆண்டுகளுக்கென தேர்வு செய்யப்பட்ட தகுதியுள்ள

அச்சகத்தாரின் பட்டியல் தயாரிக்கப்பட்டு விலை விகித ஒப்பந்தம் அடிப்படையில் பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. 2016-2018 ஆம் ஆண்டிற்கு 100க்கும் மேற்பட்ட அச்சகத்தினர் ஒப்பந்த விதிகளைப் பின்பற்றி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளனர்.

பட்டியலில் சேர்க்கப்பட்ட அச்சகத்தார்கள் தோராயமாக ஆண்டிற்கு 10 கோடி எண்ணிக்கையிலான பாடநூல்கள், செயல்வழி கற்றல் அட்டைகள் மற்றும் பிறதுறை சார்ந்த பாடநூல்கள் அச்சடிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். பாடநூல் அச்சுப்பணிக்கான தாள்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றது

- 2016–2017 ஆம் கல்வியாண்டில், 5.40 கோடி எண்ணிக்கையிலான விலையில்லா பாடநூல்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டன.
- அரசு உதவி பெறா சுயநிதிப் பள்ளிகளுக்கு 2016-17ஆம் கல்வியாண்டில் 2.79 கோடி எண்ணிக்கையிலான பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- சென்னை கோட்டூர்புரத்தில் இயங்கிவரும் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் ஒரு பாடநூல் விற்பனை நிலையத்தினை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கு தேவையான துணை நூல்கள், கற்றல் திறன் அட்டைகள் மற்றும் வழிகாட்டிகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் நிர்வாகத்தில் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்பு வழிகாட்டிக் கையேடுகளை அச்சிட்டு வழங்குகின்றது.
- 2016 – 2017 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா, புதுதில்லி, குஜராத், கேரளா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட பிற மாநிலங்களில் தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்கு 8,746 தமிழ் பாடநூல்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம், 2006-இன்படி மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டு பதிப்பாக 7.47 இலட்சம் எண்ணிக்கையிலான தமிழ்ப்பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**10.6 மின் நூல்கள்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிடும் பாடநூல்கள் கழகத்தின் இணையப் பக்கத்தில் (www.textbooksonline.tn.nic.in) பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே,

மாணவர்கள் கழக இணையப் பக்கத்திலிருந்து பாடநூல்களை இலவசமாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## 10.7 விலையில்லா கல்வி உபகரணங்கள்

**2014-2015 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை கொள்முதல் செய்யப்பட்ட விலையில்லா கல்வி உபகரணங்கள் விவரம் பின்வருமாறு**

| வ. எண் | விலையில்லா பொருட்களின் பெயர் | 2014-2015 | | 2015-2016 | | 2016-2017 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கொள் முதல் எண்ணிக்கை | கொள் முதல் மதிப்பு ரூ. கோடியில் | கொள் முதல் எண்ணிக்கை | கொள் முதல் மதிப்பு ரூ. கோடியில் | கொள் முதல் எண்ணிக்கை | கொள் முதல் மதிப்பு ரூ. கோடியில் |
| 1 | புத்தகப்பை | 90,78,516 | 125.25 | 61,34,924 | 75.43 | 75,87,118 | 70.11 |
| 2 | காலணி | 77,66,249 | 118.82 | 51,87,561 | 83.99 | 62,81,667 | 83.71 |
| 3 | வண்ணம் தீட்டும் குச்சி | 11,77,221 | 1.68 | 8,32,251 | 1.05 | 9,81,036 | 1.20 |
| 4 | வண்ணப் பென்சில் | 19,67,950 | 3.64 | 14,87,304 | 1.96 | 15,66,228 | 2.34 |
| 5 | கணித உபகரணப் பெட்டி | 9,39,427 | 3.47 | 28,98,779 | 9.16 | 7,62,627 | 2.24 |
| 6 | கம்பளிச் சட்டை | 1,03,074 | 2.96 | 1,14,780 | 2.95 | 1,21,250 | 2.95 |
| 7 | புவியியல் வரைபடம் | - | | 37,94,269 | 9.69 | 8,11,943 | 2.08 |

## 10.8 தர ஆய்வு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கொள்முதல் செய்யும் அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்துடன் விளங்கிட நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகள் முறையாக பின்பற்றி வருகிறது.

கணித உபகரணப் பெட்டி, வண்ணம் தீட்டும் குச்சி, வண்ணப் பென்சில், காலணி, புத்தகப்பை மற்றும் கம்பளிச்

சட்டை ஆகிய பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு என உரிய தர அளவீடுகள் மத்திய அரசின் பல்வேறு துறையின் கீழ் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஆய்வுக் கூடங்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தியின் முன்னும் பின்னும் பிரத்தியேக ஆய்வுக்கூடங்களின் மூலம் தர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தொழில் நுட்பம் மற்றும் தர அளவீடுகளை செம்மைப்படுத்தி தெளிவாக்கிட அவ்வப்போது உரிய நிபுணர்களைக் கொண்டு மறு ஆய்வும் செய்யப்படுகிறது. தரக்குறைபாடுகளிருப்பின் அதன்பொருட்டு அபராதங்கள் விதிக்கப்படுகின்றது.

## 10.9 புதிய முயற்சிகள்

### 10.9.1 இணையதள நேரடி விற்பனை

பாடநூல்கள் தனி நபர்கள் மற்றும் மாணவர்கள் எவ்விதச் சிரமமுமின்றி பெறும் பொருட்டு இணைய விற்பனை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சேவையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் அமைந்துள்ள அரசு கேபிள் டி.வியின் பொதுச்சேவை மையங்கள், பாடநூல்களின் தேவையை பதிவு செய்து கட்டணம் செலுத்தும் மையங்களாக மார்ச் 2016 முதல் நியமிக்கப் பட்டுள்ளன. மேலும், பதிவு செய்பவர்கள் அனைவரும் தங்கள் இருப்பிடத்திலேயே பாடநூல்களைப் பெறும் வசதி கூரியர் சேவை நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது. தனிநபர், மாணவர்கள் பதிவிட்ட பாடநூல்கள் வரவினைக் கண்காணிக்கும் (Tracking) வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.




பொது சேவை மையம்

## இணையதள நேரடி விற்பனையின் பயன்கள்


இணையதள விற்பனை சேவை செயல்படுவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பள்ளிகள் பெறும் பயன்கள் பின்வருமாறு:

- பள்ளிகளின் விற்பனை பிரதிகளின் தேவை துல்லியமாகக் கணக்கிடப்பட்டு அச்சிடப்படுகிறது. தேவைக்கு அதிகமான புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் தேவையற்ற இருப்பு வைத்தல் தவிர்க்கப்படுகிறது.
- இணையதளம் மூலம் இருப்பினைப் பதிவேற்றுவதால் வெளிப்படையான மற்றும் பொறுப்பான செயல்பாடு ஏதுவாகிறது.
- இணையதளம் மூலம் பாடநூல் இருப்பிற்கேற்ப தனிநபர்களும் பள்ளிகளும் தங்கள் தேவையைப் பதியலாம்.
- வரைவோலை முறைக்கு பதிலாக இணைய வழியாக பணம் செலுத்தும் முறை கடைப்பிடிக்கப் படுகிறது.

- முகவர்களிடம் அதிக விலை கொடுத்து வாங்கிய நிலையும் வழக்கொழிந்த புத்தகங்களை விற்பனை செய்யும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

### 10.9.2 பழமை வாய்ந்த உயர்கல்வி தமிழ் வழி நூல்களை மின்மயமாக்குதல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், உயர்கல்விக்காக 1961ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை 1016 நூல்களை வெவ்வேறு தலைப்புகளில் தமிழ் வழியில் வெளியிட்டுள்ளது. இன்றும் பல்வேறு வாசகர்கள், மாணவர்கள், போட்டித் தேர்வைச் சந்திப்போர் போன்றோர்களுக்கு தேவைப்







படும் இந்நூல்களைத் தேடிக் கண்டறிந்து படித்து பயன்பெறும் அளவிற்கு மேற்கண்ட வெளியீடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மேலும் இப்புத்தகங்களை வெளிச்சந்தையிலும், இணையதளத்திலும் அதிக அளவில் நாடுவோருக்கு எளிதில் கிடைத்திடும் வகையில் அவற்றினை மின்மயமாக்கவும், மறு அச்சுப் பணி செய்யவும் கழகத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 10.9.3 நாட்டுடமையாக்கப்பட்ட நூல்கள் – மீண்டும் அச்சிட்டு வெளியீடு செய்தல்

நாட்டுடமையாக்கப்பட்ட சிறந்த கருத்துக்களைக் கொண்ட நூல்களில் சில வெளிச்சந்தையில் எளிதாக கிடைப்பதில்லை. எனவே, நாட்டுடமையாக்கப்பட்ட நூல்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், அச்சிட்டு பொது நூலகங்களுக்கு வழங்கவும் மற்றும் அவற்றினை வெளிச்சந்தையில் உரிய விலை நிர்ணயம் செய்து விற்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சியின் வாயிலாக நாட்டுடமையாக்கப்பட்ட நூல்கள் அனைத்து பொது நூலகங்களிலும் கிடைக்கச் செய்வதன் மூலம் பொது மக்கள் அவற்றை பயன்படுத்திட ஏதுவாக அமையும்.

### 10.9.4 பல்வேறு பல்கலைக்கழக உயர்கல்வி நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிடுதல்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் மருத்துவம், சட்டம், பொறியியல், கலை, அறிவியல், ஓமியோபதி, மீன் வளம், உடற் கல்வியியல், கால்நடை அறிவியல் மற்றும் வேளாண்மை போன்ற துறைகளில் உள்ள ஆங்கில வழிப் பாடநூல்களைத் தமிழாக்கம் செய்து அந்தந்த துறைகளுக்கேற்பவும், தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் வெளியிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. முதல் கட்டமாக கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகம் விவசாயம் சார்ந்த 69 பாடப்பிரிவு நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிட கோரியுள்ளது.

### 10.9.5 ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கான மாத இதழ்கள் வெளியிடுதல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் பள்ளி மாணவ மாணவியர்கள் படைப்பாற்றல் மற்றும் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் குழந்தைகள் படிப்பதற்கு ஏற்றவாறு கவிதை, கட்டுரை, ஓவியம், விளையாட்டு, விடுகதை, வினாடி – வினா, அறிவியல், உடல் நலக்குறிப்புகள், பயண அனுபவம் போன்றவை அடங்கிய மாத இதழாக வெளியிடப்படும்.

மேலும், ஆசிரியர்களுக்கான மாத இதழ் குழந்தைகளின் உளவியல், ஆசிரியர்களின் படைப்புத் திறன் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

### 10.10 நிறுவன வளத் திட்டமிடல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மென்பொருள் சேவை பல்வேறு பாகங்களாக இருந்து வருகிறது. தற்போது இச்சேவைகளை முழு ஆட்டோமேஷனில் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நவீன முறையில் கொள்முதல் செய்யப்பட உள்ள மென்பொருள் பயன்பாட்டில் கணக்கு தொகுக்கும் பிரிவு, பாடநூல் விநியோக மேலாண்மை, அச்சுப்பணி, இணையதள விற்பனை, நிர்வாகம், சம்பளப்பட்டியல், நிதி / கணக்குகள் மற்றும் சொத்து மேலாண்மை ஆகிய சேவைகள் இணைக்கப்படவுள்ளது.

## 10.11 முடிவுரை

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், பாடநூல்கள் அச்சிடுவது மற்றும் விநியோகிப்பது என்ற எல்லையினைத் தாண்டிக் கல்வியின் தரத்தினைப் பல்வேறு வகையில் சிறப்புடன் மேம்படுத்த ஆயத்தமாகி வருகின்றது. இக்கழகமானது உயர்கல்வி படிப்புகளுக்கான பாடநூல்களை வெளியிடும் அமைப்பாகத் தன்னை மேம்படுத்திக் கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி அரிதானதும், அதி முக்கியத்துவமும் வாய்ந்த புத்தகங்களை மறுபதிப்பு செய்வதிலும், இணையத்தில் பதிவேற்றம் செய்வதிலும் மற்றும் அவற்றினைப் பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு அதற்கான நிதியினை வழங்குவதில் தனது ஈடுபாட்டினைச் செலுத்தி வருகின்றது.

காலத்திற்கேற்ப இக்கழகமானது தனது பெயரை நிலை நிறுத்தும் விதத்தில் தனது பணிகளைப் பன்முகப்படுத்தி முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. தமிழ் மொழியில் உள்ள அனைத்து நூல்களையும் உலக மக்கள் அனைவரும் நுகரும் வகையில் அனைத்து விதமான பதிப்பு வடிவங்களிலும் கிடைப்பதினைத் தனது எதிர்கால இலட்சியமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது.

*கே.ஏ.செங்கோட்டையன்*
*பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலத்துறை அமைச்சர்*